# சுடர் ஒளி

வாராந்த சஞ்சிகை

மார்ச் 19 - 25, 2014 பக்கம் - 24 30/-




# கைதான கண்ணீர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அட இதுவா சங்கதி?



இலங்கை அணிக்கு கடந்த சில வருடங்கள் இறுதிப்போட்டி என்ற சாபக்கேடு பின் தொடர்ந்தது. மிகப்பலமான அணி களை யெல்லாம் வெற்றிகொண்டு இறுதிப்போட்டிக்கு முன்னேறிவிடும். ஆனால் அந்தோ பரிதாபம்! இறுதிப்போட்டியில் துரதிர்ஷ்டம் பிடித்துக் கொள்ள கிண்ணத்தை எதிரணியிடம் தாரை வார்ப்பதே வழக்கமாக இருந்தது. உலகக் கிண்ண ஒருநாள் சர்வதேச இறுதிப் போட்டிகளி இரண்டிலும், உலகக்கிண்ண 20/20 இறுதிகள் இரண்டிலும் இப்படித்தான் இலங்கை வெற்றியைக் கோட்டை விட்டிருந் தது.

" போனமுறை தோற்றாலும் எப்படியும் இலங்கை இந்த முறை வெற்றிக்கிண்ணத்தை தனதாக்கிவிடும்" என்ற நப்பாசையுடம் இலங்கை ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷவும் தன் பரிவாரங்கள் சகிதம் இறுதிப்போட்டியைக் காண மைதானத்துக்கு வருவதும், பின்னர் போட்டி முடியும் முன்னரே தலையைத் தொங்கப்போட்டுக் கொண்டு செல்வதும் மரபாகிப் போனது. எனவே இந்தமுறை ஆசியக் கிண்ண இறுதிப்போட்டிக்கு இலங்கை அணி தெரிவானபோதும் அதனைப் பார்ப்பதற்கு மஹிந்த ஆர்வம் காட்டவில்லை.

" மினக்கெட்டு அங்க போய் மானங்கெட்டு வர ஏலாது. எப்பிடியும் எங்கட ஆக்கள் தோக்கத் தானே போறாங்கள். அதை வீட்டை இருந்தே பாப்போம்" என்று வீட்டில் தன் குடும்பத்தாரோடு அமர்ந்து மிகப்பெரிய திரை கொண்ட தொலைக் காட்சி மூலமே இறுதிப்போட்டியைக் கண்டு களித்தார். ஆனால் இலங்கை வெற்றி பெற்று ஆசியச் சம்பியனாகிவிட்டது. அப்படியானால் இவ்வளவு காலமும் மஹிந்த மைதானத்துக்கு போனதால் தான் இலங்கை இறுதிப்போட்டிகளில் தோற்றதோ? . இப்படி நிறையப்பேருக்கு சந்தேகம் வந்துவிட்டது. அதனால் வருங் காலங்களில் இலங்கை அணி இறுதிப்போட்டிக்கு முன்னேறினால், அது வெற்றிபெற வேண்டும் என்ற பிரார்த்தனையை விட அதனை நேரடியாகப் பார்க்க மஹிந்த போகக் கூடாது என்பதே அநேக இலங்கைக் கிரிக்கெட் ரசிகர்களின் பிரார்த்தனையாக இருக்கப் போகின்றது.





## டோனியின் பாணியில்...

ஆடத்தெரியாதவன் மேடை சரியில்லையென்று சொல்வதெல்லாம் அந்தக்காலம். இப்போது வேறு உத்திகளைக் கையாளத்தொடங்கிவிட்டார்கள் விளையாட்டுவீரர்கள். ஏதாவது மோசமான தோல்வியை எதிர்கொள்ளும்போது " ஐயோ! எனக்குக் காயம். கொஞ்ச நாள் ஓய்வெடுக்க வேணும்" என்று சொல்லிக்கொண்டு அடுத்த சில போட்டிகளில் விளையாடுவதைத் தவிர்க்கின்றனர். அப்படிக் குறித்த வீரர் இல்லாத நிலையில் விளையாடும் அணி முன்னரைவிடவும் மோசமான தோல்வியைச் சந்தித்தால், விலகியிருந்த வீரருக்கு மீண்டும் மவுசு ஏறிவிடும். ஏனெனில் அவர் இல்லாததால் தான் இப்படித்தோல்வி வந்தது என்று ராஜமரியாதையோடு அணிக்கு அழைக்கப்படுவார்.

அண்மைக்காலமாக மிக மோசமான தோல்விகள் காரணமாக இந்திய அணித்தலைவர் டோனி கடும் விமர்சனத்துக்குள்ளானார். எனவே ஆசியக்கிண்ணப்போட்டிகளின் போது "உபாதையைக்" காரணம் காட்டி அந்தத் தொடர் முழுதும் விளையாடாமல் விலகினார். அவரின் நல்லகாலம், இந்திய அணி ஆசியக்கிண்ணத்திலும் சறுக்க, " டோனியால் மட்டுமே அணியை வெற்றிப்பாதைக்கு கொண்டு செல்ல முடியும்" என்ற குரல்கள் மீண்டும் எழத்தொடங்கிவிட்டன. இப்போது 20/20 உலகக்கிண்ணப் போட்டிகளுக்கு மீண்டும் அணிக்கு அதேபழைய மரியாதையோடு திரும்பியிருக்கிறார் டோனி. இதேபோன்று மேற்கிந்திய அணிக்கெதிரான 20/20 தொடரை இழந்த இங்கிலாந்து அணித்தலைவர் ஸ்ருவர்ட் ப்ரோட்டும் டோனியின் பாணியில் 'உபாதை' காரணமாக குறித்த தொடரின் மூன்றாவது போட்டியில் பங்குபெறாமல் விலகியுள்ளார். இனி ஆடத்தெரியாதவனுக்கு உடம்பு சரியில்லையாம் என்றுதான் சொல்லவேண்டும் போலிருக்கிறது.

## கொலையாளி யார்?

தன்னம்பிக்கை என்றால் என்ன என்பதற்கு உதாரணமாக விளங்கியவர் தென்னாபிரிக்க ஓட்ட வீரர் பிஸ்டோரியஸ். இருகால்களும் இல்லாதபோதும் ஒலிம்பிக்கில் பங்கேற்றவர். செயற்கைக் கால்களை உதவியாகக் கொண்டும் இப்படிப் புயலாகப் பாயமுடியுமா என்று எல்லோரின் புருவங்களையும் உயரச் செய்தவர். ஆனால் விதி இவரின் வாழ்விலும் உள்நுழைய , கொலைப்பழியோடு இப்போது நீதிமன்றத்தில் நிற்கிறார்.

கடந்த வருடம் பெப்ரவரி 13 ஆம் திகதி -காதலர் தினத்துக்கு முதல்நாள்- அவருடைய காதலியை பிஸ்டோரியஸ் சுட்டுக்கொன்றார் என்ற குற்றச்சாட்டில் தென்னாபிரிக்க பொலிஸாரால் அவர் கைது செய்யப்பட்டார். சந்தர்ப்ப சாட்சியங்களும் பிஸ்டோரியஸே கொலையாளி என்று நம்பவைத்தன. ஆனால் இப்போது வழக்கு விசாரணை[illegible]ல் " என் காதலியை நான் கொல்லவில்லை. திடீரென அவள் யாரையோ பார்த்து அவள் அலறினாள். எனவே அவளைக் காப்பாற்றவே சென்றேன்" என்று பிஸ்டோரியஸ் கதறியுள்ளார். அதனை உறுதிப்படுத்துவது போல கொலை நடந்த வீட்டின் அருகே வசித்த ஒருவரின் சாட்சியம் அமைந்துள்ளது. அதாவது ஒரு பெண்ணும் ஆணும் பயத்தால் அலறும் சத்தம் கேட்டதாகச் சொல்கிறார். அப்படியானால் பயத்தால் அலறிய பிஸ்டோரியஸ் தன் காதலியைச் சுட்டுக் கொன்றிருக்க வாய்ப்பில்லை. எனவே அங்கே மூன்றாவது நபர் யாரேனும் கொலை நடந்த சமயத்தில் பதுங்கி இருந்தனரா என்ற ரீதியில் இப்போது விசாரணைகள் தொடங்கியிருக்கின்றன.


## பணத்தில் மிதக்கும் ரொனால்டோ

திறமையை மட்டுமே முதலீடாகக் கொண்டு கோடிக்கணக்கில் உழைக்கும் துறை விளையாட்டாக மட்டுமே இருக்கமுடியும். அதிலும் எல்லா விளையாட்டுக்களும் இப்படி பணங்காய்ச்சி மரங்களாக இருப்பதில்லை. சில விளையாட்டுக்கள் மட்டுமே வீரர்களை பணக்காரர்களாக்கி அழகு பார்க்கின்றன. கிரிக்கெட், உதைபந்து, கோல்ப், ரென்னிஸ் போன்றன அத்தகைய பணத்தில் மிதக்கும் விளையாட்டுகள். இதுவரை காலமும் உதைபந்து துறையில் ஒரேவருடத்தில் அதிகம் சம்பாதிப்போர் பட்டியலில் இங்கிலாந்து உதைபந்து அணியின் முன்னாள் தலைவர் டேவிட் பெக்காம் இருந்தார். கழகங்களுடனான ஒப்பந்தம், விளம்பரங்கள் என்பவற்றின் மூலம் அவர் வருடமொன்றுக்கு 165 மில்லியன் பவுண்ட்ஸை வருமானமாகப் பெற்றார். தற்போது பெக்காம் ஓய்வுபெற்றுவிட்ட நிலையில் அந்த இடத்தை யார் பிடிப்பதென்ற போட்டி வழக்கம் போல லயனல் மெஸ்ஸிக்கும், கிறிஸ்ரியானோ ரொனால்டோவுக்கும் இடையே எழுந்தது. இதில் மெஸ்ஸியை முந்தி அதிகம் சம்பாதிக்கும் உதைபந்தாட்ட வீரர் என்ற பெருமையை கிறிஸ்ரியானோ ரொனால்டோ அடைந்துள்ளார். அவரின் ஒருவருட வருமானம் 122 மில்லியன் பவுண்ட்ஸ்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதான கண்ணீர்



தொகுப்பு தமிழ்

## விபூசிகா..........

ஆர்ப்பாட்டம் நடக்கும் எல்லா இடங்களிலும் அவளைக் காணலாம். தாய்க்கு அருகில் இருந்து தன்னுடைய வாயில் வருகின்ற எல்லா வார்த்தைகளையும் சொல்லித் தீர்த்துக்கொண்டிருப்பாள். அன்று விபூசிகா யாருக்காக கண்ணீர் வடித்தாளோ, இன்று அவளும் காணாமல் போனோரில் தானும் ஒருத்தியாக இணைந்திருக்கின்றாள்.


நான் சந்தித்த ஒருவரின் வார்த்தைகள் இவை-

"எப்போதுமே அவளை இந்தப் புழுதிப் பாதையில காணலாம்.நல்ல சுறுசுறுப்புக்காரி. எங்க ஆர்ப்பாட்டம் நடக்குதோ அங்க எல்லாம் தாய் மனிசியையும் கூட்டிக்கொண்டு, கையில போட்டோவும் எடுத்துக்கொண்டு போடுவாள். அன்று பின்னேரம் வந்து, 'அண்ணாக்கள நினைச்சு நல்லா அழுதன். எப்பிடியாவது அண்ணாக்கள் வந்திடுவினம்' எண்டு சொல்லுவாள். அவள் சாமத்தியப்பட்டு அண்டைக்கு 13 நாள்தான். அதையும் பாக்காமல் கொண்டு போட்டாங்கள். தாயிட்ட விபூசிகா அடிக்கடி சொல்லுவாளாம், 'அண்ணாக்கள் இருந்தா என்ர சாமத்திய வீட்ட பெரிசா செய்வினம்' எண்டு. அதைத் தாய் மனுசி என்னட்ட வந்து சொல்லி அழும்." என்று அவர் கண்ணீரோடு சொன்னார். விபூசிகாவின் வீட்டருகில் சென்றேன். இந்தியத்திட்ட வீட்டுக்கதவு இறுக்கி சாத்தப்பட்டிருந்தது.அவள் அங்கில்லை என்பதை ஓங்கி முகத்தில் அறைந்து சொல்கிறது காற்று.

## நரகத்துக்கு கொண்டு செல்லப்பட்டவள்

விமானத்தைக் காணவில்லை
உலக வரைபடமே இங்கே பார்
யோசனைகளோடு விம்மியழுகுது
உதித்த சூரிய மகள் எங்கேயெனச் சொல்
அண்ணன்மார் மூவருக்கு இளையவள்
அன்னையின் விழிகளோ அன்பின் உறைவிடம்
அதுதான் ஐயாக்களே தமிழனின் பாசம்
அதுவன்றி வாழ்க்கையே போராட்டம் தங்கையே
கொடிய கனவொன்றைப் போல
மூத்தவர்கள் இருவர் மரித்திட
முப்பொழுதும் பார்த்திருந்த
இளைய அண்ணனும் கடத்தப்பட
பனையழகு எல்லாம் அழிந்த பூமியில்
ஸ்வரம் இழந்த பாடலானாள்
இரட்சகனைத் தேடியதால் நரகத்துக்கு
கொண்டு செல்லப்பட்டுள்ள சகோதரியொருத்தி
கற்றறிந்த சிலுவைக் குறிகளுக்கு
சத்தியத்தில் இடமில்லை
குரலெழுப்பிப் பூத்த மலரொன்று
சிதைகிறது இரகசியமாக
அவளுமொரு சிறுமி
இருந்திருக்கக் கூடும் கனவுகள் ஆயிரம்
இன்னும் கண்டிருக்கக் கூடும்
எப்பொழுதாவது ஒரு புன்னகைத் துளியை
உலகம் ஒரு சிறைக்கூடம்
நலிந்தவர்கள் மட்டும் சிக்கிக் கொள்ளும் சதி பீடம்
இன்றும் வலி தந்திருக்கக் கூடும்
ஒரு கொடியவனின் பார்வை
வேண்டுமென்றே கடத்தப்பட்டாள் கறுப்புத் திலகமிட்டவள்
உருவழித்து தீப்பற்றியெரிகிறது எனது இருதயம்
உருகவில்லையா செவிமடுக்கையில் உம் மனங்கள்
நரக நதியினின்றும் மீண்டிட
நீந்திடு விபூஷிகா!

**சிங்கள மூலம் : கஸூன் மகேந்திர ஹீனடிகல**
**தமிழில் எம்.ரிஷான் ஷெரீப்,**



**இந்த ஆர்ப்பாட்டத்தில் விபூசிகாவின் இடத்தை மற்றுமொரு குழந்தை நிரப்பியிருந்தது. தனது தந்தையின் படத்தோடு அவரை மீட்க போராட்டத்துக்கு வந்திருந்தான்.**

### அவளின் இடத்தில் இன்னொரு குழந்தை...

பெரும் சிரமத்தின் மத்தியில் விபூசிகாவுக்காக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்குச் சென்றிருந்தேன். காணாமல் போனோருக்காக நடைபெறும் எல்லா ஆர்ப்பாட்டங்களிலும் தனது அண்ணனின் புகைப் படத்தை மட்டையில் ஒட்டிக்கொண்டு முன்னால் வந்து நிற்கும் அவளைக் காணவில்லை. பழக்கதோசத் தில் அவளைக் கண்கள் தேடின. ஊடகக்காரர்களும் 'அங்கில்லாத அவளுக்காக வேதனையில் உருகினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் விபூசிகாவின் இடத்தை மற்றுமொரு குழந்தை நிரப்பியிருந்தது. தனது தந்தையின் படத்தோடு அவரை மீட்க போராட்டத்துக்கு வந்திருந்தான். அவனும் எப்போது கடத்தப்படுவானோ? என்ற அச்சமே மனதில் துளிர்விட்டது.

விபூசிகாவையும் அவள் தாயையும் விடுவிக்கக் கோரி நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் தொலைந்து போன தமது மகன்களைத்தேடிய பல அம்மாக்கள் மங்கிப்போன புகைப்படங்களுடன் ஒரு ஓரமாக நின்று அழுதுகொண்டு நின்றனர்.

அந்த அம்மாக்களில் ஒருத்திக்கு 60 வயது. அழுக்கு படிந்த சாறி, பித்தளை தோடு, செருப்புகளற்ற கால், வியர்வை படிந்த முகம், சிவப்பு நிற பைக்குள் தொலைந்து போன தனது மகனின் ஆவணங்கள், கையில் சிறிய புகைப்படம் இவ்வளவும்தான் அவ ரது அடையாளம். சொந்த இடம் கல்மடு. 2007ஆம் ஆண்டு குளத்துக்கு மீன் பிடிக்க சென்றவேளை இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்டிருக்கின் றான். இன்று ஏழு வருடங்களாகியும் எந்த முடிவும் கிடைக்கவில்லை. ஆனாலும் அவர் மகனைத் தேடுவதை நிறுத்திக்கொள்ளவில்லை. எங்கெல்லாம் ஆர்ப்பாட்டம் நடக்கின்றதோ அங்கெல்லாம் தனது மகனின் புகைப்படத்தை எடுத்துக்கொண்டு சென்று விடுவார். இன்றும் அதே முகத்தோடே நின்றார் "என்ர மனுசன் வவுனியா ரவுனில பிச்சை எடுக்கிறார் தம்பி.. எங்கள பாக்கிறதுக்கு அவன் ஒருத்தன்தான் இருந் தான். அவனும் இப்பஇல்லை. இவர் பிச்சை எடுக்கிற திலதான் எங்கட வாழ்க்கை போகுது. சிலவேளை நானும் போவன். அவருக்கு இப்ப சரியா உடம்புக் கும் ஏலாது. எங்களுக்கு கொள்ளி வைக்கவாவது பிள்ளை வருவான் எண்ட நம்பிக்கையிலதான் எல்லா ஆர்ப்பாட்டங்களுக்கும் வாறனான்" அவரின் ஒவ் வொரு சொற்களும் அம்புகளாக மனசைத் தைத்தன. யார் தருவார் இவர்களின் பிள்ளைகளை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்ளிவெளியில்




அவளுக்கு பயமாகத்தான் இருந்தது. ஆனால் அவன் தான் விடாப்பிடியாக நின்றான்.

"கொஞ்சநேரம் இப்பிடியே ஓட்டோவில கதைச்சுக் கொண்டுபோவம்" என்று கெஞ்சினான்.

"இல்லை. நேரம் போட்டுது. நான் வீட்டை போகவேணும்" என்று சொன்ன அவளுக்கும் உள்ளுக்குள் ஆசையாகத்தான் இருந்தது. மனதுக்குப் பிடித்தவனோடு தனியாக , மாலைக்கருக்கலில் , அளவளாவிக்கொண்டு செல்ல எந்தக்காதலிக்குத்தான் விருப்பம் இருக்காது. ஆனாலும் யாரேனும் கண்டுவிட்டால் பிரச்சினையாகிவிடும். வீட்டுக்கு கதை போனால் அவ்வளவுதான். பெரும் பூகம்பமே வெடித்துவிடும். என்றாலும் காதலனுடைய கெஞ்சுதல் அவளுடைய அறிவை இதயத்திடம் தோல்வியுறச் செய்ய, சம்மதமென்று தலையசைத்தாள். 'விர்'ரென்று விரைந்த ஓட்டோ, முள்ளி வெளி வந்தவுடன் நத்தையை விடவும் மெதுவாக ஊரத்தொடங்கியது. அவனும் அவளும் மனம்விட்டு பேசியபடி வேகமாக நகர்ந்து கொண்டிருக்கும் நேரத்தை திட்டிக் கொண்டிருந்தனர்.

அவர்கள் இருவரும் காதலர்கள். அவளுக்கு வயது 19. நெல்லியடியில் உள்ள தையலகம் ஒன்றில் பணிபுரிகிறாள். அவன் 28 வயதான ஓட்டோச்சாரதி. இருவருக்குமிடையே காதல் முளைகொண்டு, ஆழமாக வேரூன்றியும் விட்டது. அன்றைக்கு சந்தர்ப்பம் வாய்த்ததால், அவன் தனது ஓட்டோவில் அவளை ஏற்றிக்கொண்டு வல்லிபுர ஆழ்வார் கோயிலுக்குப் போனான்.

ஆலயத்தில் வழிபாடுகள்யெல்லாம் முடித்துக் கொண்டு,

"கண்ணா! எங்கள் ரண்டு பேரையும் எப்பவும் ஒண்டா வாழவைச்சிடு" என்று மனமுருக வேண்டிக் கொண்டு வெளியே வந்தபோது, இருட்டத் தொடங்கியிருந்தது. அப்போதுதான் அவன் தனிமையில் கதைப்பதற்கு அவளைக் கெஞ்சி மன்றாடி, வல்லிபுரக்கோயிலுக்கு அண்மையில் உள்ள முள்ளிவெளிக்கு அழைத்து வந்திருந்தான்.

பொதுவாகவே முள்ளிப்பகுதியில் சனநடமாட்டம் வெகு குறைவு. சுற்றிலும் வயல்கள் என்பதால், தென்மராட்சிக்கும் வடமராட்சிக்கும் இடையே பயணிப்போர் தவிர வேறு எவரும் அந்த மாலைநேரத்தில் வருவது கிடையாது. அதிலும் முள்ளிவெளியால் இரவில் செல்வதற்கு எல்லோரிடையேயும் ஒரு பயமுண்டு. போர் நடந்த காலத்தில் முள்ளிவெளியில் பல இளைஞர்களும் யுவதிகளும் காணாமல் போயிருந்தார்கள். அண்மையில் கூட அந்தப்பகுதியில் உள்ள கிணறொன்றில் எலும்புக்கூடுகள் இருப்பதாக ஒரு வதந்தி புறப்பட்டிருந்தது. அங்கிருந்த பல மினிமுகாம்கள் அகற்றப்பட்டிருந்தாலும் கூட பழைய பயம் இன்னும் நீங்காததால் இரவில் முள்ளிப்பகுதியில் அவசரதேவையிருந்தால் தவிர வேறெவரும் நடமாடுவதில்லை. எனவே யாருடைய தொந்தரவுமின்றி காதலர்கள் உரையாடுவதற்கு இதைவிட்டால் வேறு இடம் கிடைக்காதுதான்.

ஓட்டோவில் இருவரும் தங்கள் கதைகளைப் பகிர்ந்து சிரித்தபடி வந்தபோது, திடீரென ஒரு மோட்டார்சைக்கிளும்,சைக்கிளும் பின் தொடரத் தொடங்கின. முதலில் இவர்கள் இருவரும் அந்தப் பின் தொடர்தலைப் பெரிதாக எடுக்கவில்லை. ஆனால் இவர்களைச் சீண்டுவது போல இடைவிடாது மோட்டர் சைக்கிள் "ஹோர்னை" பின் தொடர்ந்தவர்கள் அடிக்கத் தொடங்கியபோது தான் , அவர்கள் தம்மைத்தான் வம்புக்கு இழுக்கிறார்கள் என்பது காதல்ஜோடிக்குத் தெரியவந்தது.

" எதுக்கு வீண்சோலி.கதைச்சது காணும் தானே. இனி இரவு போனில கதைப்பம். நீங்கள் என்னைக் கொண்டுபோய் பஸ்ஸுக்கு விடுங்கோ" என்று அவள் சொல்ல, அவனும் ஓட்டோவுக்கு வேகம் கொடுக்க முனைந்தான்.

அப்போது சரேலென அதியுச்சப் பாய்ச்சலில் விரைந்து வந்த மோட்டர்சைக்கிள் ஒரு வெட்டு வெட்டி, ஓட்டோவுக்கு குறுக்காக நின்றது.

காதலர்களுக்கு நடுக்கம் பரவத் தொடங்கியது.

"இந்த நேரம் ரண்டு பேரும் இஞ்ச என்ன செய்யிறீங்கள்?" என்ற அவர்களின் கேள்வியில் அதிகாரம் இருந்தது.

"வீட்டை போய்க்கொண்டிருக்கிறம்" காதலர்க்ளின் பதிலைக் கேட்டு வந்தவர்கள் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

"இந்த ஸ்பீட்டில் போனால் முள்ளிவெளி தாண்டவே ஒரு கிழமையாகும்" என்றவர்கள்,காதல் ஜோடியை தீவிர விசாரணைக்கு உட்படுத்தத் தொடங்கினார்கள்.

"2 பேரும் எந்த இடம்?"

"எங்க போட்டு வாறியள்?"

"லவ்வர்ஸா?"

"இப்பிடியெல்லாம் இந்த ஏரியாவில நாயள் மாதிரி திரியக் கூடாதெண்டு தெரியாதோ?"

இப்படி வந்தவர்கள் மூவரும் மாறி மாறிக் கேட்கத் தொடங்கினார்கள்.

எல்லாக் கேள்விக்கும் காதலர்கள் இருவரும் பொறுமையாகப் பதில் சொன்னார்கள்.என்றாலும் அதன் பின்னரும் அவர்களின் கேள்விக்கணைகள் தொடர்ந்ததால், அவள் கெஞ்சும் தொனியில்,

"அண்ணை! வீட்டில தேடப்போகினம் . நாங்கள் போகட்டுமே?" என்று கேட்டாள்.

"எளிய......! கண்டவனோடயும் களவாக படுக்க வந்திட்டு வீட்டை போறதெண்டு நாடகமாடுறியோ?" என்று அவர்களில் ஒருவன் கத்தத் தொடங்கினான்.

"ஐயோ! அப்பிடியில்லை அண்ணை. நாங்கள் 2 பேரும் லவ் பண்றம், வீட்டை தெரியாது. அதுதான் கதைப்பம் எண்டு வந்தம்" என்று அவள் அழுது கொண்டே சொன்னாள்.

"ஓ! அப்பிடியோ?உங்களை இப்பிடிக் கேட்டால் சொல்ல மாட்டியள். ஓட்டோவை பொலிஸ்ரேசனுக்கு கொண்டு வாங்கோ. அவங்களிட்ட குடுத்து விசாரிச்சாத்தான் உண்மை வெளியால வரும்" என்று சொன்னவர்கள் மோட்டார் சைக்கிளை வெளியின் ஓரமாக நிறுத்தினர். அவர்களில் இருவர் ஓட்டோவுக்குள் ஏறி, பொலிஸ்ரேசனை நோக்கி ஓட்டோவை செலுத்தச் சொன்னார்கள்.

பொலிஸ் ஸ்ரேசனுக்கு சென்றால், தங்களுடைய காதல் விவகாரம் ஊருக்கெல்லாம் தெரிந்துவிடுமே என்ற அச்சத்தில் காதலர் இருவருக்கும் வியர்க்கத் தொடங்கியது.

வரும் வழியில் இருவரும் அழாக்குறையாகக் கெஞ்சத் தொடங்கினார்கள்.

"அண்ணை! இனி இங்கால வரமாட்டம். எங்களை விட்டிடுங்கோ. பொலிஸுக்கு போனால் ரண்டு வீட்டுக்கும் தெரிஞ்சிடும்.பிறகு நாங்கள் சேரவே முடியாது" என்ற கெஞ்சுதலை வந்தவர்கள் கேட்பதாக இல்லை.

பின்னர் ஏதோ நினைத்தவர்களாக இவர்களை நோக்கி,

"சரி, பொலிஸ்ரேசனுக்கு போகவேண்டாம். ஆனா அந்தச் சந்திக்கு கிட்ட ஓட்டோவை நிப்பாட்டு" என்று ஒருவன் சொல்லத்தான் இருவருக்கும் நெஞ்சுக்குள் நிம்மதி பிறக்கத் தொடங்கியது.

நெல்லியடிப் பாதையை விட்டு யார்க்கருப் பக்கமாக ஓட்டோ திரும்பியது. சில வாரங்களுக்கு முன்னர்வரை அந்தச் சந்தியில் ஒரு இராணுவ முகாம் இருந்தது. ஆனால் ஜெனிவாவுக்கு பயந்து அது அகற்றப்பட்டிருந்தது. இப்போது இராணுவ முகாமும் இல்லை. வீதியில் ஆள்களுமில்லை. வெறிச்சோடிக் கிடந்தது.

ஓட்டோவை சந்திக்கருகே நிறுத்தச் சொன்னார்கள். பின்னர் இருவரையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்று காமுகர்கள்

குறுக்கால போவான்

## கதறக் கதற வடமராட்சியில் நிகழ்ந்த கூட்டு வன்புணர்வு

இறங்கச் சொன்னார்கள்.

இவர்கள் பொம்மைகள் போல இறங்கினார்கள். அடுத்த நொடி- காதலனின் தலையில் ஏதோ ஒரு கனமான பொருளால் ஓங்கி ஒரு அடி.

'ஐயோ' கத்திக் கொண்டே நிலை தடுமாறி அவன் கீழே விழுந்தான். அவனை தரதரவென இழுத்தபடி அருகேயிருந்த பற்றைக்குள் கொண்டு சென்றார்கள். அவள் "அவரை விடுங்கோ" கதறிக்கொண்டே அவனைப் பின் தொடர முற்பட, அவள் தோளை ஒருவன் இறுகப்பற்றினான்.

இப்போது வீதியை விட்டு விலகி அருகேயிருந்த பற்றைக்குள் காதலர்கள் கொண்டுவரப்பட்டிருந்தார்கள். காதலனை மூவரும் கண்டபடி அடிக்கத் தொடங்கினார்கள். அவன் அரைகுறை நினைவோடு துவண்டிருந்த போது, இருவர் அவனை கழுத்தைப் பிடித்து அழுத்த, பெண்ணின் தோளைப் பற்றியிருந்தவன் கண்களில் காமம் ஊற்றெடுக்கத் தொடங்கியது. இறுக அணைத்தவாறே அவளை அந்தப்பற்றை நிலத்தில் கிடத்தினான். அவள் "ஐயோ! என்னை விட்டிடுங்கோ" என்று கத்தியது யார் காதிலும் எட்டவில்லை. அவன் அவளின் வாயைப் பொத்திக்கொண்டே தன் இச்சையைத் தீர்க்கத் தொடங்கினான்.

காதலன் அரை மயக்கத்தில் கண் முன்னே காதலி சீரழிக்கப்படுவதைப் பார்த்து ஊமையாக அழத்தொடங்கினான். அவன் கொஞ்சலும் அசையமுடியாதவாறு கழுத்தை அழுத்திப் பிடித்திருந்தார்கள். முதலாமவன் தன் இச்சை தீர்ந்ததும் நகர, மற்றவன் அவளை அணுகினான். மூவரும் மாறி மாறி தங்கள் வேட்கையை முடித்த பின்னர், காதலனுக்கு இன்னும் நாலைந்து அடிகள் போட்டுவிட்டு, இருளில் மறைந்து போயினர்.

அவள் அசைவின்றிக் கிடந்தாள். மெதுவான முனகல் மட்டுமே அவள் உயிரோடிருப்பதை உணர்த்தியது. காதலன் தட்டு தடுமாறி பற்றையில் இருந்து வெளியேறி வீதிக்கு வந்தான். யாராவது வந்தால் உதவி கேட்கலாம் என்று காத்திருந்தான். சில நிமிடக் காத்திருப்புக்கு பின்னர், தூரத்தே சில உருவங்கள் வருவது தெரிந்தது. இவன் "ஆராவது காப்பாத்துங்கோ" என்று கத்த, அந்த உருவங்கள் ஓடி வந்தன. வந்தவர்கள் ரோந்து சென்ற இராணுவத்தினர்.

உடனடியாக அவர்கள்



நடந்ததை நெல்லியடிப் பொலிஸ் நிலையத்துக்கு அறிவிக்க, ஜீப்பில் பறந்து வந்த பொலிஸார் காதலர்களை வைத்தியசாலைக்கு உடனடியாக அனுப்பினர்.

அதன் பின்னர் சம்பவம் நடந்த இடத்தில் ஏதாவது தடயம் கிடைக்கிறதா என்று அவர்கள் தேடியபோது, கறுப்பு நிறத்தில் ஒரு பொருள் தென்பட்டது.

அது ஒரு பேர்ஸ்.

அதற்குள் ஒருவனின் அடையாள அட்டைகளும் இன்னும் சில ஆவணங்களும் இருந்தன. அந்தப்பெண்ணைக் குதறியவர்களில் ஒருவன், தவறுதலாக தன்னுடைய பேர்ஸை அங்கேயே விட்டுச் சென்றிருந்தான். குற்றவாளியைப் பிடிக்க இது போதுமே.

ஏற்கனவே மணற்கொள்ளை, விபத்தை ஏற்படுத்தி கொலை செய்ய முயன்றமை போன்ற குற்றச்சாட்டுகளுக்கு இலக்காகியிருந்த ஒருவனின் அடையாள அட்டையே அந்த பேர்ஸுக்குள் இருந்தது. தேடுதல் தீவிரமானது. தலைமறைவாகிவிட்ட அந்தக் குற்றவாளி பற்றிய இரகசியத் தகவல் கிடைக்க, அங்கு சென்று பொலிஸார் அவனை லபக் கென்று அமுக்கினர். இப்போது அவன் பொலிஸாரின் விசாரணையில் அந்தப்பெண் மீது கூட்டு வன்புணர்வில் ஈடுபட்ட தன் சகாக்கள் யாரென்ற உண்மையைக் கக்கிவிட்டான். விரைவில் அவர்களும் பிடிபட்டு விடுவார்கள். ஆனால் சிலகால விசாரணை, நீதிமன்ற நடவடிக்கை என்பவற்றுக்கு பிறகு பிணையில் வெளியே வந்துவிடுவார்கள். அதன் பிறகும் இப்படியான காமவேட்டையைத் தொடர்வார்கள்.

"இதெல்லாம் அவங்கள் இல்லாத குறை. இருந்திருந்தா இப்ப நெல்லியடிச் சந்தியில மூண்டு பேரும் பிணமாக் கிடந்திருப்பாங்கள். பாக்கிறவையும் பயந்து இப்பிடி மோசமான வேலையள் செய்ய மாட்டாங்கள்"

பலரும் இப்படித்தான் முணுமுணுக்கிறார்கள்.

## டில்லியில் கிடைத்த நீதி இங்கும் கிடைக்குமா?



கடந்த வருடம் இந்தியாவின் டில்லியில் மருத்துவ பீட மாணவி ஒருத்தி பஸ்ஸில் பயணம் செய்துகொண்டிருந்தபோது கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டிருந்தாள். தனது ஆண் நண்பருடன் அவள் பஸ்ஸில் பயணித்துக்கொண்டிருந்தபோது பஸ்ஸின் சாரதியும் அவனது கூட்டாளிகளுமாக நான்குபேர் அவளது ஆண் நண்பரைத் தாக்கிவிட்டு மாறிமாறி வன்புணர்வுக்கு உட்படுத்தினர். கடைசியில் தங்களுடைய வெறி அடங்கியதும் ஓடும் பஸ்ஸில் இருந்து சிதைக்கப்பட்ட மாணவியையும் அவளது ஆண் நண்பரையும் பஸ்ஸிலிருந்து நடுவீதியில் தூக்கி வீசிவிட்டு மறைந்தனர்.

இந்தச் சம்பவம் இந்தியா எங்கும் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. பெண்களுக்கு ஏற்படும் பாலியல் ரீதியான கொடுமைகளில் இருந்து பாதுகாப்பு வேண்டும் என்று பல்வேறு மகளிர் அமைப்புக்களும் போர்க் கொடி தூக்கின.

ஒருபுறம் ஆர்ப்பாட்டங்களும் பிரார்த்தனைகளும் நடந்துகொண்டிருக்க உயிருக்காகப் போராடிக்கொண்டிருந்த மருத்துவபீட மாணவி சிகிச்சை பலனளிக்காமல் உயிரிழந்தார். இந்த நிலையில் அவளது சாவுக்கும் வன்புணர்வுக்கும் காரணமானவர்களைப் பொலிஸார் கண்டுபிடித்தனர். வழக்கு துரிதமாக நடைபெற்றது நால்வருக்கும் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. இந்த நிலையில் குற்றவாளிகளில் ஒருவர் 16 வயதுடையவன் என்பதால் அவனுக்கு கருணை காட்டுமாறும் ஏனையோருக்கு ஆயுள் தண்டனையாக மாற்றுமாறும் மேன்முறையீட்டு மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டது. ஆனால் அவற்றை எல்லாம் ஏற்றுக்கொள்ள நீதிமன்றம் மறுத்துவிட்டது.

நால்வருக்கும் தூக்கு நிச்சயம் என்பதை நீதிமன்றம் மீண்டும் உறுதி செய்துள்ளது. தூக்குத் தண்டனைக்கு எதிரான போராட்டங்கள் முனைப்புப் பெற்றுள்ள போதிலும் இப்பேர்ப்பட்ட கொடுமைகளுக்கு அது ஒன்றுதான் சரியான தண்டனையாகத் தோன்றுகிறது. ஏனெனில் சாவு வரும் என்ற பயம்தான் இத்தகைய கொடூரங்களைச் செய்பவர்களுக்கு அதனைத் தவிர்க்கவைக்கும்.

முள்ளி வெளியில் ஓட்டோவில் வந்த இளம் பெண்ணை வன்புணர்வு செய்தவர்களுக்கும் இத்தகைய தண்டனைகளை வழங்குவதன் மூலமே எதிர்காலத்தில் இவ்வாறான குற்றங்கள் பெருகுவதைத் தடுக்க வழி செய்யும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்ச் 19 – 25, 2014
sudarolijaffna@gmail.com

# சுடர் ஒளி

வாராந்த சஞ்சிகை

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 567 7609

## கைதுகளின் காலம் மீண்டும்?

தமிழர்கள் மீண்டும் காணாமல் போகத் தொடங்கிவிட்டார்கள். அடுத்தடுத்த கைதுகளால் அதிர்ச்சியில் உறைந்துபோய்க் கிடக்கிறது தமிழர் தேசம். காணாமல் போன தங்கள் உறவுகளுக்காக பகிரங்க வெளியில் கண்ணீர் விட்டுக் கதறிய குற்றத்துக்காக ஜெயகுமாரி என்பவரும் அவருடைய 13 வயதுடைய விபூசிகாவும் பயங்கரவாத தடுப்புப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர். பின்னர் ஜெயகுமாரி பூசா தடுப்பு முகாமில் அடைக்கப்பட தாயிடமிருந்து பிரிக்கப்பட்ட விபூசிகா சிறுவர் நன்னடத்தைப் பிரிவில் கையளிக்கப்பட்டு காப்பம் ஒன்றில் தங்க வைக்கப்பட்டுள்ளார்.

காணாமல் போனோர் தொடர்பாக இவர்கள் ஊடகங்களிடம் வெளிப்படையான கருத்துக்களைத் தெரிவித்தமைக்காகவே இவ்வாறு அரச படைகளால் பிடிக்கப்பட்டனர் என்பது வெள்ளிடை மலையான உண்மை. ஆனால் மனித உரிமைகள் தொடர்பான ஜெனிவா மாநாடு நடந்து கொண்டிருந்தபோதே அரசு இத்தகைய இரும்புக் கரம் கொண்டு வேட்டையைத் தொடங்கி யிருப்பது தான் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியிருக் கிறது.

இந்த வேட்டை விபூசிகாவோடு மட்டும் நின்று விடவில்லை. அதையும் தாண்டி மனித உரிமைகள் செயற்பாட்டாளரான ருக்கி பெர்னாண்டோ, அருட்தந்தை பிரவீன் ஆகியோர் மீதும் அரசின் பாய்ச்சல் நிகழ்ந்திருக்கிறது. இதைவிட திருகோணமலையில் காணாமல் போனோர் விவகாரம் தொடர்பாக சுவரொட்டிகளை ஒட்டிய ஒருவரைத் தேடிய அரச படைகள் அவர் கிடைக்காத நிலையில் ஏழுமாத கர்ப்பிணியான அவரது மனைவியை கைதுசெய்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவையெல்லாம் இன்னொரு இருண்ட யுகத்துக்கான கட்டியமாக இருக்குமோ என்ற அச்சத்தில் தமிழர்கள் உறைந்து போய்இருக்கிறார்கள். ஜெனிவா மாநாடு நடக்கும்போதே இப்படியென்றால் அது முடிந்த பின்னர் எப்படியெல்லாம் அரசு ஆடப்போகின்றதோ என்ற ஊகங்கள் அவர்களை ஆட்டம் காணச் செய்துள்ளன.

போர் முடிந்து நான்கு வருடங்கள் கழிந்த நிலையிலும் தங்களுடைய குரலுக்கும் உண்மையைச் சொல்லும் உரிமைக்கும் கண்ணீருக்கும் போடப்பட்ட தடைகள் இன்னமும் விலகவில்லை என்பதையே இந்தக் கைதுகள் கோடிட்டுக் காட்டுவதாக தமிழர்கள் நம்புகிறார்கள்.

அரசு சொல்வதையே தாமும் திருப்பிச் சொன்னால் மாத்திரமே இலங்கையில் தம்முடைய இருப்பைத் தக்கவைக்க முடியும் என்றும் இல்லாவிட்டால் காணாமல்போனோர் பட்டியலில் தாமும் இணையவேண்டி இருக்கும் என்பதையும் அவர்கள் மீளவும் தமக்குத் தாமே ஞாபகப் படுத்திக் கொள்கிறார்கள்.

இந்த ஞாபகமூட்டல்கள் கண்ணுக்குத் தெரியாத அடிமைச்சங்கிலியை அவர்கள் மீது பரப்பி விட்டுள்ளது. இலங்கையின் நிரந்தர அடிமைகளாக அவர் கள் வாய்பொத்தி நிற்கும் வரை பேரினவாதம் ஓயப்போவதில்லை என்பதையே போருக்குப் பின்னான கைதுகளின் காலம் சுட்டிநிற்கிறது.

# புதைகுழியின் புதுக்கதை

ஆசாத்

மன்னார் திருக்கேதீச்சர ஆலயத்துக்கு அண்மையில் நீர்க்குழாய் பொருத்தும் பணிக்காக நிலத்தை அகழ்ந்த போது பல எலும்புக் கூடுகள் வெளிக்கிளம்பின. தொடர்ந்து தோண்டப்பட்ட போது 80 எலும்புக் கூடுகளும் எச்சங்களும் மீட்கப்பட்டநிலையில் அந்தப்பணி தற்காலிகமாக இடைநிறுத்தப் பட்டுள்ளது.

அந்தப் புதைகுழியில் புதைக்கப்பட்டவர்கள் யார்? .அவற்றை புதைத்தவர்கள் யார் ? அவை எப்போது புதைக்கப்பட்டன? என்பன போன்ற கேள்விகளுக்கு இது வரை விடைகாணப்படவில்லை. ஆய்வுகள் மூலம் அவை புதைக்கப்பட்ட காலத்தைக் கண்டு பிடிப்பதன் மூலம் ஏனைய விடயங்களையும் அறிந்து கொள்ள முடியுமென நம்பப்படுகிறது.

எனினும் எந்த வித ஆய்வும் மேற்கொள்ளப்பட முன்பே சில அறிவித்தல்கள் வெளிவந்து விட்டன.

புதைகுழி கண்டுபிடிக்கப்பட்ட பகுதி ஒரு மயானம் எனவும் அங்கு அந்த உடல்கள் 100 அல்லது 150 வருடங்களுக்கு முன்னர் புதைக்கப்பட்டிருக்கலாம் எனவும் தொல்பொருள் ஆய்வுத் திணைக்களம் அறிவித்துள்ளது. இந்தக் கண்டுபிடிப்புக்கு சொல்லப்பட்ட காரணம் இன்னும் விசித்திரமானது. மீட்கப்பட்ட உடல்கள் மேற்கில் தலை இருக்கும் வண்ணம் புதைக்கப்பட்டிருந்ததாகவும் கைகள் நெஞ்சில் வைத்தபடி காணப்பட்டதாகவும் இவ்வாறான வழக்கம் 100 வருடங்களுக்கு முன்னரே இருந்ததால் அந்தக் காலப்பகுதியிலேயே இவை புதைக்கப்பட்டிருக்க வேண்டும் எனவும் தொல்பொருள் திணைக்களம் புதுக்கதை விட்டிருக்கிறது.

அந்த அறிவித்தல் பல கேள்விகளை எழுப்பியுள்ளது. ஏனெனில் மீட்கப்பட்டவற்றில் 9 உடல்கள் விடுதலைப்புலிகளால் புதைக்கப்பட்டவை என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அஜித் ரோஹண ஏற்கனவே தெரிவித்திருந்தார்.

அவரின் கூற்று உண்மையானால் 100 வருடங்களுக்கு முன்பும் விடுதலைப்புலிகள் அமைப்பு இயங்கியதா? என்ற நகைப்புக்கிடமான கேள்வியை எழுப்பியே ஆகவேண்டும். அரசின் இரட்டை நாக்குகளாகப் பொலிஸ் பேச்சாளரும் தொல்பொருள் திணைக்களமும் வெவ்வேறான கருத்துக்களைக் கூறியுள்ளன. இரு தரப்பினருமே பிறர் நம்ப வேண்டும் என்பதற்காக இவற்றைச் சொல்லவில்லை. அவர்கள் சொல்வதை நம்பினாலென்ன நம்பாவிட்டாலென்ன மற்றவர்கள் ஏற்றுக் கொண்டேயாக வேண்டும். அதுவே அவர்கள் கொள்கை.

மீட்கப்பட்ட உடல்கள் கிழக்கு மேற்காகக் கண்டுபிடிக்கப்பட்டதால் அது இறந்தவர்களைப் புதைக்கும் மயானம் என்று தொல்பொருள் திணைக்களம் முடிவு செய்துள்ளது.

ஆனால் தமிழ் மக்கள் இறந்தவர்களைப் புதைக்கும் போதோ அல்லது எரிக்கும் போதோ வடக்குத் தெற்காகத் தான் வைப்பதுண்டு. தென்திசையை யம மூலை என்று அழைப்பதுண்டு. இது ஏறக்குறைய 2000 ஆண்டுகளாக தமிழர்கள் கடைப்பிடித்துவரும் மரபு. எனினும் தொல்பொருள் திணைக்களமோ தமிழர்களின் இறுதிக்கிரியை பற்றி ஒரு புதிய மரபைக் கண்டுபிடித்துள்ளது.

### இன்னுமொரு கண்டுபிடிப்பு?

அங்கு மயானம் ஒன்று இருந்ததாகவும் , அருகில் இந்தக் கோவில் அமைக்கப்பட்டதால் அது கைவிடப்பட்டு விட்டதாகவும் இன்னொரு உபகதையையும் தொல்பொருள் திணைக்களம் அடித்துவிடத் தவறவில்லை. அப்படியானால் திருக்கேதீச்சரம் என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க – தேவாரப் பாடல் பெற்ற – இந்தக் கோவில் 100 அல்லது 150வருடங்களுக்கு உட்பட்ட காலத்தில் தான் கட்டப்பட்டதா?

திருக்கேதீஸ்வரம் மீது தேவாரம் பாடிய நாயன்மார் பல்லவர் காலத்தில் வாழ்ந்ததாகவே எமது வரலாற்று ஆதாரங்கள் கூறுகின்றன. ஆனால் இலங்கைத் தொல்பொருள் ஆய்வுத் திணைக்களத்துக்கோ 8ஆம் நூற்றாண்டும் 18 ஆம் நூற்றாண்டும் ஒரே காலப்பகுதியாக மாறிவிட்டது. இடையில் 10 நூற்றாண்டுகளை இலங்கைத் தொல்பொருள் திணைக்களம் ஒரே மூச்சில் விழுங்கிவிட்டது.

ஆச்சரியம் தான்!

பொலிஸ் பேச்சாளர் ஒரு கண்டு பிடிப்பு! தொல்பொருள் திணைக்களம் இன்னொரு கண்டுபிடிப்பு. இரு கண்டுபிடிப்புக்களுமே ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டிருக்கின்றன.

இவர்களுக்கு முன்பே இராணுவத் தளபதி ஒருவர் அந்தப்பகுதி நீண்ட காலமாக விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்ததாகவும் அந்தச் சடலங்கள் அவர்களால் புதைக்கப்பட்டவையே என்றும் கூறிவிட்டார்.

இப்படிப் பல்வேறு கண்டு பிடிப்புக்களும் , அரச தரப்பிலிருந்து வெவ்வேறு நிரல்களில் வெளிவந்து ஒன்றுடன் ஒன்று மோதி இன்னுமொரு கண்டுபிடிப்பும் வெளிவந்திருக்க வேண்டும். ஏனோ அது இது வரை வெளிவரவில்லை.

அதுதான் சிங்கள வரலாற்று ஆய்வாளரான ஜாதிகஹல உறுமயவைச் சேர்ந்த எல்லாவல்ல மெத்தானந்த தேரரின் கண்டுபிடிப்பு.

திருக்கேதீச்சரத்துக்கு அருகில் ஒரு புத்த விகாரை இருந்ததாகவும் சோழர்களின் படையெடுப்பின் போது அழிக்கப்பட்டதாகவும், அதை எதிர்த்த சிங்கள மக்களை சோழர்கள் வெட்டிக் கொன்று புதைத்த புதைகுழி தான் அது எனவும் அவர் அடுத்துவரும் நாள்களில் தன்னுடைய புதிய கண்டுபிடிப்பை வெளியிடக்கூடும்.

இப்படிஒவ்வொருவரும் ஒவ்வொரு பக்கமாக குழப்பமான கருத்துக்களை வெளியிட்டபோதும் அந்த எச்சங்கள் இன்னும் விஞ்ஞான ரீதியான ஆய்வுக்கு உட்படுத்தப்படவில்லை.

அவற்றை ஆய்வு செய்யச் சீன நிபுணர்கள் வரக்கூடும். அவர்கள் 'மாந்தை துறைக்கு வர்த்தகம் செய்ய வந்தசீனர்களுடைய எலும்புக்கூடுகளே அவை' என இன்னொரு கண்டுபிடிப்பை நிகழ்த்தக்கூடும்.

ஒரு புதை குழியை வைத்து ஓராயிரம் கதைகள். எல்லாக் கதைகளையும் கேட்டு தோண்டப்பட்ட புதைகுழி ஆச்சரியத்தில் வாய்பிளந்து போய் நிற்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள்

இந்தன்

**இந்தியாவின் அடுத்த பிரதமர் மோடி அல்லது ஜெயலலிதா - முதன்முதலில் இப்படிச் சொன்னவர் சோ.**

அவர் இப்படிச் சொன்ன காலத்தில் தேசிய அரசியலில் மோடி இவ்வளவு செல்வாக்கானவர் இல்லை. பா.ஜ.க. அத்வானி கையில் இருந்தது. ஜெயலலிதாவும் இவ்வளவு உயரத்தில் இல்லை. முந்தைய தேர்தலில் ஜெயலலிதா, மாயாவதி, மம்தா மூவரையும் இணைத்து 15ஆவது மக்களவையைத் தீர்மானிக்கும் மூன்று சக்திகள் என்று தேசிய ஊடகங்கள்



கட்டமைத்த பிம்பம் சுக்குநூறாகி விட்டிருந்த நிலையில், ஜெயலலிதா அடுத்த பிரதமர் என்று அ.தி.மு.க. பொதுக்கூட்டப் பேச்சாளர்கள்கூட அன்றைக்குச் சொல்லத் தயங்கியிருப்பார்கள். சோ சொன்னார். தொடர்ந்து, மோடி அல்லது ஜெயலலிதா எனும் முழக்கத்தைப் பொதுமேடைகளில் முன்வைக்க ஆரம்பித்த சோ, உச்சகட்டமாக துக்ளக் பத்திரிகை ஆண்டு விழாவில் மோடி, அத்வானி இருவரையும் மேடையில் வைத்துக்கொண்டே மோடி பிரதமராக அத்வானி உதவ வேண்டும் என்று பேசினார். அந்தச் சமயத்தில் பேட்டிக்காக சோவைச் சந்தித்த போது, மோடி அல்லது ஜெயலலிதா என்கிற தன்னுடைய குரலுக்கான அடிப்படைபற்றி இப்படிச் சொன்னார்: "நான் ஒரு வாக்காளன். அந்த அடிப்படையில் ஒரு முன்மொழிவைச் சொல்கிறேன். இந்த நாட்டின் பிரதமராக மோடிக்கு எல்லாத் தகுதிகளும் இருக்கின்றன. ஒருவேளை பா.ஜ.க–வுக்கு மோடியைப் பிரதமர் ஆக்குவதில் முட்டுக்கட்டை ஏற்பட்டால், ஜெயலலிதா பிரதமராக அவர்கள் உதவ வேண்டும். அவ்வளவுதான்!"

அன்றைக்குச் சோ சொன்னது அரசியல் ஆருடம் அல்ல. எளிமையான வார்த்தைகளில், இது ஒரு வாக்காளனின் முன்மொழிவு என்று அதை அவர் வர்ணித்தாலும், அது ஒரு செயல்திட்டம்.

## வியூகத்தின் அடிப்படை என்ன?

பிரதமர் ஜெயலலிதா. இதற்கான வியூகமும் சாத்தியமும் என்ன?

**1. தமிழகம், புதுவையின் 40 இடங்களில் ஆகப் பெரும்பான்மையானவற்றை அ.தி.மு.க – வைக் கைப் பற்றச் செய்வது. அதன் மூலம் பிராந்தியக் கட்சிகளில் பெரும் கட்சியாக அ.தி.மு.க–வை உருவாக்குவது.**

2. மோடி தலைமையிலான பா.ஜ.க. அணி தனிப் பெரும்பான்மையான 272 இடங்களை நெருங்க முடியாத சூழலில் – பா.ஜ.க. பெரும் பான்மைக் கட்சியாகியும் தேசிய ஜனநாயகக் கூட்டணி மொத்தமாகவே 200 இடங் களை மட்டுமே தொட்டு நிற்கும் சூழலில் – பா.ஜ.கவை ஏற்கக் கூடிய, அதேசமயம், மோடி ஒவ்வாமையால் பாதிக்கப்பட்ட கட்சிகளோடு இணைந்து ஜெயலலிதாவை முன்னிறுத்தும் ஒரு கூட்டணியை உருவாக்குவது.

3. அந்தக் கூட்டணிக்கு பா.ஜ.க. ஆதரவை ஜெயலலிதாவின் நண்பர் மோடியின் மூலம் கேட்டுப் பெறுவது. ஊரறிந்த இந்த ரகசியம்தான் ஜெயலலிதா பிரதமராக இன்றைக்கு உள்ள ஒரே சாத்தியமும்கூட. ஆனால், அவர் இதை அறிவிக்கவில்லை. மாறாக, காங்கிரஸ், பா.ஜ.க. அல்லாத மாற்று அணி ஒன்றை நோக்கி நகர்வதாகப் போக்கு காட்டுகிறார். அதற்கு இடதுசாரிகளே மேடை அமைத்துக்கொடுத்தனர்.

## மாற்று அணி சாத்தியமா?

காங்கிரஸ், பா.ஜ.க. அல்லாத ஒரு மாற்று அணியின் சார்பில் ஜெயலலிதா பிரதமராவது எந்த அளவுக்குச் சாத்தியம்?

இன்றைய சூழலில் நடக்கவே வாய்ப்பில்லாத காரியம் அது. எளிமையான உதாரணம், கிட்டத் தட்ட மக்களவையின் அரைவாசித் தொகுதி களை (252 இடங்கள்) வைத்திருக்கும் உத்தரப் பிரதேசம் (80), மேற்கு வங்கம் (42), மகாராஷ் டிரம் (48), ஆந்திரம் (42), பிஹார் (40) ஆகிய ஐந்து மாநிலங்களின் களநிலைமை. இந்த ஐந்து மாநிலங்களிலும் காங்கிரஸ், பா.ஜ.க. அல்லாத மாநிலக் கட்சிகளே அனைத்து இடங்களையும் பகிர்ந்துகொள்வதாகக் கொண்டால்கூட, ஜெயலலிதா நம்பவைக்க நினைக்கும் மாற்று அணி வியூகம் எடுபடாது. ஏனென்றால், உத்தரப் பிரதேசத்தில் முலாயம் சிங் ஆதரித்தால், மாயவாதி எதிர்ப்பார்; **ஆந்திரத்தில் சந்திரபாபு நாயுடு ஆதரித்தால், ஜெகன்மோகன் ரெட்டி எதிர்ப்பார்; பிஹாரில் லாலு ஆதரித்தால் நிதீஷ் எதிர்ப்பார் என்பதே யதார்த்தம். உள்ளிருந்து மட்டும் அல்ல; வெளியிலிருந்தும்கூட காங்கிரஸ் ஆதரிக்காது என்கிற சூழலில், பா.ஜ.க. மட்டுமே ஜெயலலிதா கனவுக்கான – அணிக்கான ஒரே சாத்தியம்.**

**சோவின் முன்மொழிவு. அதற்கான வியூகம் எல்லாம் ஒருபுறம் இருக்கட்டும்.** இன்றைக்குத் தேசிய ஊடகங்கள் வரை மோடி அல்லது ஜெயலலிதா எனும் செயல்திட்டத்தை முணுமுணுக்க ஆரம்பிக்கின்றனவே எது இதைச் சாத்தியமாக்குகிறது?

## ஏன் மோடி அல்லது ஜெயலலிதா?

இந்தியத் தேர்தல் வரலாற்றில், இந்தத் தேர்தலுக்கு ஒரு முக்கியத்துவம் உண்டு. அரசியல் கட்சிகளின் ஆர்வத்துக்கு அப்பாற்பட்ட ஆர்வங்கள் பிரதமர் தேர்தலில் தம் செல்வாக்கை நேரடியாகப் பயன்படுத்திப்பார்க்கும் பரிசோதனைக் களமாக இந்தத் தேர்தல் மாறியிருக்கிறது. இந்தச் சூழலில், ஏன் மோடி என்ற கேள்விக்கு என்னென்ன காரணங்கள் பதிலோ, அந்தக் காரணங்களில் பலவும் ஜெயலலிதாவுக்கும் பொருந்தும் என்கிற ஒற்றுமைதான் மோடி அல்லது ஜெயலலிதா எனும் செயற்திட்டத்துக்கான அடிப்படை.

அரசியல் விமர்சகர்கள் பலரும் அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையை ஆராய்ந்துகொண்டிருக்கிறார்கள். அந்த அறிக்கையை விடவும் நாம் கவனிக்க வேண்டியது அதை வெளியிடுவதற்கு இரு நாள்களுக்கு முன் தொழில் துறைக்கு ஜெயலலிதா ஆற்றிய உரை. தமிழக அரசு – தொழில் நிறுவனங்கள் இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட அவர், தன் பிரதமர் கனவைத் தேசத்துக்குப் பிரகடனப்படுத்தும் எனக்கு இந்தியாவைப் பற்றி ஒரு கனவு உண்டு என்ற உரையில் இப்படிக் குறிப்பிடுகிறார்:

அ.தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து தமிழகத்தில் இதுவரை 33 நிறுவனங்களுடன்



ரூ.31,706 கோடிக்கு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டிருக்கின்றன. இந்தியப் பொருளாதாரக் கண்காணிப்பு மையத்தின் ஆய்வுப்படி, ஜூன் 2011 முதல் ஜனவரி 2013 வரை தமிழகத்தில் ஈர்க்கப்பட்ட முதலீட்டின் அளவு ரூ. 1.46 லட்சம் கோடி. தமிழ்நாடு. முதலீட்டில் 18.2% வளர்ச்சியைப் பெற்றுள்ளது. இது குஜராத், மகாராஷ்டிரம், கர்நாடகத்தைவிடவும் அதிகம் என்று சொல்லும் ஜெயலலிதா, தான் காண விரும்புவதாகக் குறிப்பிடும் தேசத்தைப் பற்றிய விவரணைகளில் முதன்மையாக இடம்பெற்றிருப்பது திறந்த சந்தையான தேசம். இது முக்கியமான ஒரு சமிக்ஞை. மோடி எப்படியோ தானும் அப்படியே வளர்ச்சியின் பிம்பம் என்கிற சமிக்ஞை.

மோடியை எந்தத் தொழில்துறை தூக்கிப்பிடிக்கிறதோ, அந்தத் தொழில்துறை மோடி இல்லாத சூழலில், ஜெயலலிதாவைத் தாங்கிப் பிடிக்குமா? ஆம். நிச்சயம் பிடிக்கும். ஏனென்றால், குஜராத் எப்படித் தொழிலதிபர்களின் பேட்டையாக இருக்கிறதோ, அப்படித்தான் தமிழகமும் தொழிலதிபர்களின் பேட்டையாக இருக்கிறது. ஒரு சின்ன உதாரணம், சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் தொடர்பான ஒப்பீடு. குஜராத்தில், பூர்வாங்கமாக அனுமதி தர ஏற்கப்பட்ட சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் 43, சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டவை 30, சிறப்புப் பொருளாதார ஏற்றுமதி மண்டலங்கள் 18. தமிழகத்தில் பூர்வாங்கமாக அனுமதி தர ஏற்கப்பட்ட சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் 67, சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டவை 53, சிறப்புப் பொருளாதார ஏற்றுமதி மண்டலங்கள் 33. தேசிய ஊடகங்கள் குஜராத்துடன் தமிழகத்தை ஒப்பிட்டு இன்றைக்கு எழுதும் வளர்ச்சிக் கதைகள் இந்தப் பின்னணியோடு இணைத்துக் கவனிக்க வேண்டியவை.

இந்துத்துவம் ஜெயலலிதாவுக்கு அந்நியம் அல்ல. நாட்டின் தேசிய ஒருமைப்பாட்டு ஆணையக் கூட்டத்திலேயே கரசேவையை ஆதரித்துப் பேசியவர் ஜெயலலிதா. நாட்டிலேயே கட்டாய மதமாற்றத் தடைச் சட்டத்தைக் கொண்டுவந்தவர்களில் அவர் முன்னோடி. கோயில்களில் ஆடு, கோழி வெட்ட அவர் விதித்த தடை மோடியும் செய்யாதது. மோடி பிரதமரானால், மாவோயிஸ்ட்டுகளை வேட்டையாடக் காட்டுக்குள் ராணுவத்தை அனுப்புவார் என்பதை மறுப்பவர்கள்கூட, ஜெயலலிதா விஷயத்தில் சந்தேகம் கிளப்ப மாட்டார்கள். **இதற்கு மேலும் என்ன ஒற்றுமைகள் வேண்டும்?**

**ஆக, மோடி ஒரு கனவு காணலாம்; ஜெயலலிதா ஒரு கனவு காணலாம். ஆனால், இருவர் காணும் கனவிலும் வெளிப்படும் இந்தியாக்கள் ஒரே செயல்திட்டத்தின் இருவேறு பக்கங்கள்தான்!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலா? காமமா?

**கொற்றவை**

கடவுள் கோட்பாட்டுக்கும், தந்தை வழிச் சமூகத்துக்கும் மாறும் காலகட்டத்திலிருந்துதான் உறவு பற்றிய பல்வேறு வகையான சமூக கருத்தாக்க மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன. ஒருவகையில் ஒடுக்குமுறை மாற்றங்கள் என்று சொல்லலாம். ஆடையின் தோற்றம் நிர்வாணத்தை ஆபாசமாக்கியது போல், தந்தைக் கடவுள் கோட்பாடு உயிரியியற்கை உணர்வுகளை ஆபாசம் என்கிறது.

அவ்வளவே. காலத்திற்கேற்ப ஏற்படுத்திக் கொள்ளும் சமூக முறைமைகள் ஒரு வசதிக்காகவேயன்றி அதுவே காலம் முழுமைக்குமான சட்டமாகி விடமுடியாது. மேலும் அப்படி அமைக்கப்படும்



முறைமைகள் குறித்தான குறை நிறைகளை உரையாடலுக்கு உட்படுத்துவது தர்க்கபூர்வமான அணுகுமுறையாகக் கருதாமல் புனிதக் கேடு, சீர்கேடு எனக் கருதுவது ஆணாதிக்க மதக் கருத்தாக்கத்தில் ஊறிப் போனதன் விளைவு.

காதல் இயற்கையானது, மனவெழுச்சி தரக் கூடியது . அப்படி இயற்கையான காதலுணர்வு மூளையின் ஒரு பகுதியில் ஏற்படும் காயத்தினால் வேதியல் மாற்றத்துக்கு ஆளாகின்றது. பொருளாதாரச் செழுமை அல்லது இன்மை என்பனவும் காதல் உணர்வில் தாக்கம் செலுத்துகின்றன.

ஜோன் என்ற 35 வயது நபருக்கு மூளையில் தீங்கு விளைவிக்கும் கட்டி அறுவை சிகிச்சை மூலம் நீக்கப்பட்டது. அதற்குப் பிறகு அவருடைய ஆளுமைப் பண்பு முற்றிலும் மாறிவிட்டது. மீண்டும் அவரைப் பரிசோதித்துப் பார்த்ததில் அவருடைய மூளையின் மேற்புறப் பகுதியில் முன்புறம் உள்ள சாம்பல் நிறப் பகுதி சிதைந்திருப்பதை கண்டறிந்தனர். அது ஒரு மனவெழுச்சித் தொழிற்சாலையாக இருந்திருக்கவேண்டும். மனவெழுச்சி கொடுக்கக் கூடிய பாலியல் சார்ந்த உணர்வுகள், வன்முறை நிகழ்வுகள், இதர நிகழ்வுகள் என எவற்றுக்கும்

**ஒரு சர்ச்சைத் தொடர்**

ஜோன் எந்தவித பிரதிபலிப்பையும் வெளிப்படுத்தவில்லை. பூந்தோட்டமும், கொலைக்களமும் அவருக்கு ஒன்றுபோல் தோன்றியிருக்கிறது. மனிதத் தன்மையற்று போனார்.

அதாவது மனிதத்தன்மையுடன் இருப்பது என்பது மனவெழுச்சியுடன் இருப்பதாகும், ஒழுங்காக காதல் உள்ளிட்ட பல வகையான மனவெழுச்சிகளால் தாக்கப்படும் ஒரு உடலைப் பெற்றிருப்பது என்பதாகும். எனவே உடலியல் சார் உணர்வுகள் மனிதன் ஒருவன் முழுமையாக இருக்கிறான் என்பதற்கான அடையாளங்களாகும். **(இன்னும் பேசுவோம்)**

# காதல் பேசுவோம்

காதலியோடு பேசும்போது ஒவ்வொரு வார்த்தையிலும் மிகக் கவனமாக இருங்கள். ஏனெனில் நீங்கள் சொல்கின்ற ஒவ்வொரு வார்த்தைக்கும் பெண்களின் அகராதியில் வேறு அர்த்தங்கள் இருக்கலாம். இந்த அர்த்த வேறுபாட்டால் அநேக காதலர்கள் தொலைபேசியில் உரையாடும்போது வீண் சண்டைகளில் இறங்குவதுண்டு.

என்னதான் நீங்கள் தேனொழுகப் பேசினாலும் தப்பித்தவறி அவர்களின் மனம் நோகும்படி ஏதாவது சொல்லிவிட்டீர்கள் என்றால் அவ்வளவுதான். ஒரே பிடியாக நீங்கள் தன்மீது அன்பு செலுத்துவதில்லை என்று பாயத்தொடங்கிவிடுவார்கள். தான் மட்டுமே உங்கள் மீது உருகி வழிவதாகவும் நீங்கள் ஏனோதானோ என்று பழகுவதாகவும் முழுங்குவார்கள். இந்தச் சந்தர்ப்பங்களில் பதிலுக்கு நீங்களும் இடியும் மின்னலுமாக இறங்கினால் காதல் மழை நின்று பாலைவனமாகவும் மாறக்கூடும்.

இத்தகைய இக்கட்டான நேரங்களில் – தொலைபேசியில் உரையாடும்போது – சில கட்டளைகளைப் பின்பற்றினால் ஆபத்திலிருந்து தப்பித்துக்கொள்ள முடியும்.

1. உங்கள் காதலி கோபத்தில் இருக்கிறாளா என்பதை அறிந்துவிட்டே பேச்சைத் தொடங்குவது நல்லது. எனவே எடுத்த எடுப்பிலேயே தொலைபேசியில் அழைக்காமல் முதலில் ஒரு எஸ்.எம்.எஸை கண்ணே மணியே என்று (அது பொய் என்றாலும் கூட) அனுப்பித் தொலையுங்கள். பதிலுக்கு காதலியும் ஏதாவது தேனொழுக ' சொல்லடா செல்லம்' என்ற அர்த்தப்படவோ அல்லது 'ம்' என்றோ பதில் அனுப்பினால் நிலைமை சுமூகமாக இருக்கின்றது என்று அர்த்தம். அன்றைக்கு நீங்கள் சண்டை பற்றிய பயமில்லாமல் உரையாட முடியும்.

ஆனால் நீங்கள் அனுப்பிய எஸ்.எம்.எஸ்க்குப் பதில் வராவிட்டாலோ அல்லது "மாறி அனுப்பீட்டீங்கள் போல","இப்பதான் நினைப்பு வந்ததோ?" என்பன போன்ற பதில்கள் வரத்தொடங்கினாலோ உடனடியாகவே நீங்கள் பதுங்கி நிலையெடுக்க வேண்டும். இன்னும் குழைவாக எஸ்.எம்.எஸ் போடலாமே தவிர தப் பித்தவறியும் தொலைபேசியூடாக உரையாட முற்படாதீர்கள்.



ஏனெனில் அவர்கள் வெடிக்கத் தயாரான எரிமலையைப் போல உங்கள் அழைப்புக்காகத்தான் காத்திருப்பார்கள். அது தெரியாமல் 'கோல்' எடுத்தீர்களானால் வெடித்துக் கோபக்குழம்பை உங்கள் மீது கக்கிவிட்டுத்தான் ஓய்வார்கள். ஆகவே இவ்வாறு காதலி சூடாக இருக்கும் தருணங்களைக் கண்டுபிடித்து "எனக்கு முக்கியமான வேலை இருக்கு. அதுமுடிய கதைக்கிறேன்." என்று எஸ்.எம்.எஸிலேயே அன்றைய நாளை இயன்றவரை இழுத்தடியுங்கள்.

அப்படியும் சிலவேளைகளில் "என்னைவிடவும் முக்கியமான வேலையோ?" என்றும் இன்னொரு புதுச்சண்டைக்கு களம் திறப்பார்கள். காதல் போர்க்களத்தில் எதிர்த்துச் சமராடுவதைவிடவும் பின்வாங்குவது தான் கெட்டித்தனம். எனவே வெக்கரோசம் பாராமல் எடுத்த எடுப்பிலேயே காலில் விழுந்துவிடுங்கள். ஏற்கனவே உங்கள் தொலைபேசியில் ஒரே தடவையில் ஆயிரம் தடவைகள் "சொறி" (Sorry) என்ற வார்த்தையை ரைப்செய்து சேமித்து வைத்திருங்கள். அடிக்கடி உபயோகம் ஆகும். யார் செய்தது பிழை, யார் செய்தது சரி என்றெல்லாம் ஆராய்ந்து கொண்டிருப்பது இன்னும் ஆபத்து. எல்லாத்தவறும் உங்கள் காதலி மீது இருந்தாலும்கூட நீங்கள் மன்னிப்புக் கேட்கவேண்டும். அப்படிக் கேட்பதுதான் நீடித்த காதலுக்கு ஒரே வழியாக இருக்கும். **(அடுத்த வாரமும் உரையாடுவோம்)**




# ஈரடியில் இதயங்கள் பற்றி...! 2

— சரவணா கார்த்திகேயன்

இரண்டே வரிகளில் உலகின் அத்தனை விடயங்களையும் அடக்கிய திருக்குறளில் காமத்துப் பாலை யாரும் பெரிதாகக் கண்டுகொள்வதில்லை. ஆனால் எந்தக் காலக் காதலுக்கும் பொருந்தக்கூடிய கருத்துக்களை அது கொண்டுள்ளது. வள்ளுவர் எழுதிய காதல் குறள்களுக்கு நவீன கவிதைவடிவில் பொருள் சொல்லும் ஒரு புதிய முயற்சியே இந்தப் பகுதி.

நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல் தாக்கணங்கு
தானைக்கொண் டன்ன துடைத்து.
(குறள் 1082:)

கொஞ்சம் பார்க்கிறேன்
நிறைய முறைக்கிறாள்
பத்மவியூகத்துள் புகுந்த
அபிமன்யு ஆகிறேன்.

பண்டறியேன் கூற்றென் பதனை இனியறிந்தேன்
பெண்டகையால் பேரமர்க் கட்டு.
(குறள் 1083:)

ஒரு பெண்ணின் கண்களை
அதன் வசீகரத்தைப் பற்றிய்
குறிப்புகள் நிறைந்திருக்கும்
என் மரண வாக்குமூலத்தில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலா லோகநாதன்

# பள்ளிக்கூடம் தேடும் படலம்



பள்ளிக்கூடங்கள் கல்வியை எத்தனை திறுசாக விற்பனை செய் கின்றன என்று சிக்கப் போனால், அது ஒரு தொகை.

அடுத்த வருடம் நட்சத்திராவை பள்ளிக்கூடத்தில் சேர்க்க வேண் டும். அப்படியானால், இப்போதே 'அட்மிஷன் போர்ம்' வாங்கி நிரப்பி படிவத்தை அனுப்ப வேண்டும்.

முதலில் சர்வதேச பாடசாலை யில் தான் சேர்ப்பதாக முடிவெடுத் திருந்தார்கள். முக்கிய காரணம், எங் கள் வீட்டு படி தாண்டியவுடனேயே ஒரு சர்வதேசப் பள்ளிக்கூடம், பெரியதொரு வீட்டில் இயங்கு கிறது. அந்த வீட்டுக்குளேயே விளையாட்டுத்திடல், கழிவறை, குழந்தைகள் காப்பகம் எல்லாம்.

பிள்ளையைத் தொலைவில் அனுப்ப வேண்டி இராது! குழந்தைகளைத் தொலைவுக்கு அனுப்புவதென்பது இன்றைய நாளின் சாபம். பாடசாலை வாகனம், ,மனிதர்கள் எவற்றையுமே நம்பி குழந்தைகளை ஒப்படைக்க முடியவில்லை.

## மலிவு விலை அனுமதிகள்

பள்ளிக்கூடத்துக்கு ஆரம்பத்தில் நான்கு லட்சம் ரூபா ரொக்கமாக கட்ட வேண்டும். மாதாந்தம் இருபத்தைந்தாயிரம் ரூபா. அதைவிடத் தவணைக்கட்டணம் அறுபதாயிரம். நிர்வாகத்தின் காப்பிற்கு பதினைந்தாயிரம். அங்கேயே புத்தகங்கள் வாங்க வேண்டும். அதை ஒரு 'பக்கேஜ்' முறையில் தருகிறார்கள். ஒட்டுமொத்தமாக வாங்கினால் இரண்டாயிரம் ரூபாய் கழிவு உண்டு. அந்தப் பக்கேஜ்: இருபத்தைந்தாயிரம். ஆகவே புத்தகம், கொப்பிகள் இருபத்திமூவாயிரத்துக்கு கிடைக்கும்.

பிள்ளைக்கு இன்னும் முழுமையாகக் கதைக்கத் தெரியாது. ஆனால் அத்லெடிக், ஸ்விம்மிங், இன்டோர் கேம்ஸ்,எலக்யூஷன், செஸ், அபாக்கஸ் போன்றன கற்பிக்கப்படுகின்றன. அவற்றுக்கெல்லாம் இன்னொரு பக்கேஜ் உண்டு. அந்தப் பக்கேஜின் மிகக் குறைந்த கட்டணம் இருபதாயிரம் மட்டுமே.

பிறகு விண்ணப்பப் படிவம் ஆயிரம் ரூபா. பின்னர் நேர்முகத்தேர்வு.குழந்தைக்கு நேர்முகப் பரீட்சை, பெற்றோருக்கு நேர்முகப் பரீட்சை இவையெல்லாம் கூட உண்டு. நான் பெறாப்பிள்ளையின் தாய்க்கு ஏதும் பரீட்சை இல்லை என்கிற மகிழ்ச்சியில் இருக்கிறேன் நண்பர்களே! இதை நாம் கொண்டாட வேண்டும்.

## சோதனைகள் பலவிதம்

ஆனால், மூல மொழிக் கல்வி அவசியம் என்று நான் வாதாடிய பின்பும்,வீட்டிலும் அதுவே விருப்பமாக இருந்ததனாலும், அரசாங்கப் பாடசாலைகளை தேடினோம்.

நான் எதிர்பார்த்தது போல, கலவன் பாடசாலைகள் குறிப்பிடத்தகுந்த வகையில் கொழும்பில் இல்லை. கொழும்பில் குறிப்பிடத் தக்க பெண்கள் பாடசாலையில் அட்மிஷன் வாங்குவதற்கு நான் தான் முதலில் போனேன். படிவத்தின் விலை 500 இல் இருந்து 1000 வரைக்கும் செல்கிறது. இதில் பல பாடசாலை கள் 'செமி கவர்மென்ட்' பாடசாலைகள்.

அனுமதிக்கான படிவங்களை குறிப்பிட்ட திகதிக்குள் வழங்கி விடுவார்கள். சுமார் இரண்டாயிரம் பேருக்கு மேல் அதனை வாங்கிக் கொள்வதற்காக பெரியதொரு க்யூவில் நிற்கிறார்கள். ஆடம்பரமான, தொழில்நுட்ப தாய்,தந்தையர் அவற்றை இன்முகத்துடன் காத்திருந்து பெற்றுக்கொள்கிறார்கள்.

எல்லா அனுமதிப் படிவங்களிலும், சிபார்சோடு வருபவர்களுக்கு அனுமதி மறுக்கப்படும் என்று எழுதியிருக்கிறது. தாய், பாட்டி, கொள்ளுப்பாட்டி இப்பாடசாலையில் கல்வி கற்றாரா? கிறிஸ்தவ மதமா? அப்படியாயின் கிறிஸ்தவ மத சான்றிதழ், ஞானஸ்நானம் இடையில் பெற்றவராயின் திருச்சபையின் ஒப்புக்கொடுத்த படிவம், பின்பற்றும் கிறிஸ்தவப் பிரிவின் மதகுருவின் கடிதம், உறவினர்கள் இங்கு படித்தவராயின் அவர்களின் விபரம், தாய், தகப்பன் படித்த பாடசாலைகள், தொழில், வருமானம், வதிவிடம், வேலைசெய்யும் இடத்தில் தொலைபேசி இலக்கம், மதம், இன்ன பிறவெல்லாம் கேட்கப்பட்டிருக்கிறது. அதன் பிரகாரம் ஒவ்வொரு தகவலின் அடிப்படையிலும் அனுமதிப்படிவத்தின் நிறம் வேறுபடும்.

என்னையெல்லாம் பள்ளிக்கூடத்தில் சேர்க்கும் போது வீட்டுக்கும் பாடசாலைக்கும் இடையிலான தூரம் பார்த்தார்கள். நான் கடைசியாக படித்த பாடசாலையில் முப்பதாயிரம் ரூபா டொனேஷனாகப் பெற்றுக் கொண்டார்கள். புலமைப்பரிசில் கிடைத்துப் போன பள்ளிக் கூடத்திலும் கதிரை மேசை, அலுமாரி வாங்கிக் கொடுத்து உதவும்படி அந்தப்பிரபலமான பாடசாலையில் (கண்டியில்)கேட்டார்கள்.

கடந்த வெள்ளிக்கிழமை, நான் சுமார் அறுநூற்றி சொச்ச ஆளாக படிவத்தை இரண்டு பாடசாலைகளில் பெற்றுக் கொண்டேன். கிறிஸ்தவ பாடசாலைகளே கொழும்பில் குறிப்பிட்டுச் சொல்லும் படியாக இருக்கின்றன. பன்னிரெண்டு மணிக்கு முன்பாகவே படிவங்கள் தீர்ந்துவிடும் என்ற அச்சுறுத்தல் வேறு.

## சரஸ்வதிக்கே சன்மானம்

பள்ளிக்கூட அலுவலக அறையில் அல்லது பள்ளிக் கூடத்தின் முகப்பில் ஒரு அம்மணி கல்லாப் பெட்டியுடன் சரஸ்வதி கடாட்சமாக அமர்ந்திருக்கிறார். படிவத்தை வழங்க முன் பச்சைத் தாளை அன்புடன் பெற்றுக் கொள்கிறார்.

மாறாக இந்து பாடசாலைகள், கிறிஸ்தவப் பாடசாலைகளுக்கு போட்டியாக சரஸ்வதி சிலையைக் கட்டி வைத்து பண்ணுகிற அலப்பறைக்கு அங்கு போகக் கூட மனமிருக்காது. அவை நேரடியாகப் பேரம் பேசுகின்றன. சிலைக்கு கை உடையும் தறுவாயில் ஒரு லட்சம் ரொக்கமாகவும், தலை உடையும் தறுவாயில் இரண்டு லட்சம் ரொக்கமும் பாடசாலைக்கு மனமுவந்து அளிப்பதாக ஒப்புக் கொள்ள வேண்டும்.

நான் படித்த பாடசாலையில் அவர்களைச் சேர்க்க வேண்டாம் என்று நானே மனமுவந்து கூறினேன். அண்மையில் ஒரு அகில இலங்கை ரீதியான விவாதப் போட்டியின் மாவட்ட ரீதியிலான போட்டிக்கு நடுவராகப் போயிருந்தேன். கொழும்பில் இருந்த பெயர் சொல்லக் கூடிய அத்தனை பாடசாலைகளும் வந்திருந்தன. அரசாங்கம் அங்கீகரித்த தேசியப் பாடசாலையான நான் படித்த பிரபல பெண்கள் பாடசாலையில் இருந்து ஒரு ஈ காக்கா கூட போட்டியில் பங்கு பெற வரவில்லை. மிக மகிழ்ச்சியுடன் சொல்லிக் கொள்கிறேன், எமது பாடசாலையில் ஒரு விவாத அணி இல்லை.

## தொடரும் திருவிளையாடல்

இது போகட்டும்.

பள்ளிக்கூடங்களின் இந்த அலப்பறை வெறும் விண்ணப்பப் படிவத்துக்கு மட்டும் தான்.நேர்முகத் தேர்வு, நேர்முகப் பரீட்சை என்று வேறு வேறு பெயர்களிலான திருவிளையாடல்களும் இருக்கின்றன. குழந்தைக்கு இப்போது நான்கு வயது. பெற்றோருக்கும் நேர்முகத் தேர்வு உண்டு. அப்படியே இவற்றை பூர்த்தி செய்து அனுப்பினாலும், நேர்முகத் தேர்வுக்கு அழைப்பு வருமா என்று தெரியாது.

இன்று இரவு பன்னிரண்டு மணிக்கே போய் நின்றால், காலையில் இன்னொரு பள்ளிக்கூடத்தில் விண்ணப்பப் படிவம் வாங்கலாம். ஆகவே இன்றைக்கு நடுச்சாமம் பன்னிரண்டு மணிக்கு குழந்தையின் அப்பாவும், அம்மாவும், தாத்தாவும், முடிந்தால் நானும் புறப்படத்தயார்.

இன்னும்கொஞ்சக் காலத்தில் குருகுலக் கல்வியும் தோன்றலாம்.

குறித்த சில பாடசாலைகளுக்கு மாத்திரமே கொழும்பில் போட்டி நிலவுகிறதா என்று பார்த்தால், இல்லை, ஓரளவு அடைவு மட்டங்கொண்ட பாடசாலைகள் பலவற்றிலும் இவ்வாறே நிகழ்கிறது. அடைவு மட்டம் குறைந்த பாடசாலைகள் நேரடியாக சன்மானப் பணத்தின் தொகைகளை பெற்றோரிடம் கேட்டுப் பெற்றுக் கொள்கிறார்கள். அரசாங்கப் படிவத்தின் கீழ் சட்ட பூர்வமான குற்றம் இது.

## எங்கெங்கு காணினும்...

கொழும்பில் தான் இந்த நிலையா என்றால், வெளியிலும் இது நிகழ்கிறது. நான் கண்டியில் படிக்கும் போது, பள்ளிக் கூடங்களின் தெரிவு மிக நேர்த்தியானது என்று புரிந்து கொண்டேன். சில பள்ளிக் கூடங்கள் பத்தாயிரம் மாணவர்களைத் தாண்டியும் இயங்குகிறது. ஒரு வகுப்பறையில் நாற்பது மாணவர்களே அதிகம். நான் புலமைப் பரிசில் படித்த பள்ளிக் கூடத்தில் அறுபது பேர் படித்தோம். இன்றைய நிலைமை எப்படியோ தெரியவில்லை.

கண்டி, மாத்தறை,காலி,மாத்தளை போன்ற பேரு நகரங்களில் இவை நெருக்கடிக்குள்ளாகியுள்ளன. யாழ்ப்பாணம், திருக்கோணமலை,மட்டக்களப்பு பகுதிகளிலும் இவை சூடு பிடிக்கத் தொடங்கி விட்டன. இருப்பினும் பாடசாலைகளின் எண்ணிக்கை மற்றைய இடங்களை விட அதிகமாக இருக்கின்றன. இருமொழிப் பாடசாலைகள் இங்கு குறைவு.

பாடசாலைகளின் தரத்தை அது போதிக்கும் கல்வி தீர்மானிக்கிறதா? அல்லது, அப்பாடசாலைகளை தேடும் பெற்றோர் தீர்மானிக்கின்றனரா? கேள்விகள் நீள்கின்றன, விடையின்றி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாயியே சரணம்

## பரவசமூட்டும் ஆன்மீகத்தொடர் - 4



*சீரடி சாயி பாபா. எளிய மனிதராக அவதாரமெடுத்த கடவுள் என்று கோடிக்கணக்கான மக்களால் இன, மொழி, மத பேதங்களற்று வணங்கப்பட்டு வருகிறார். சீரடி பாபாவின் காலத்தில் அவரோடு கூடவே தங்கியிருந்து, பாபா நிகழ்த்திய அற்புதங்களைத் தரிசித்த ஹேமாட் பந்த் என்பவர் அவற்றையெல்லாம் தொகுத்து எழுதிய தொடர் இங்கு பிரசுரமாகின்றது.*

கீதையில் கண்ணபிரான் கூறுகிறார். தர்மம் அழிந்து அதர்மம் தலையயடுக்கும் போதெல்லாம் என்னை நானே அவதரித்துக் கொள்கிறேன். நல்லோரைக் காத்து தீயோரை அழிக்க யுகந்தோறும் அவதரிக்கின்றேன். இதுவே பகவானின் அவதார நோக்கம். பகவானின் சார்பாக ரிஷிகளும், ஞானிகளும் இந்த பூவுலகில் தக்க தருணத்தில் தோன்றி, அவதார நோக்கம் நிறைவேறுமுகமாகத் தமக்கே உரித்தான முறையில் உதவி செய்கிறார்கள். உதாரணமாக இருமுறை பிறப்பவர் அதாவது பிராமணர்கள், ஷத்திரியர்கள், வைசியர்கள், தங்கள் கடமைகளைப் புறக்கணிக்கும்போதும், மேற்குலகத்தவரின் உரிமைகளைத் தவறான முறையில் பறிக்கச் சூத்திரர்கள் முயலும்போதும், ஆன்மஞான போதகர்கள் மதிக்கப்படாமல் அவமதிக்கப்படும்போது தன்னைத்தான் மெத்தப் படித்தவன் என்று எண்ணும்போதும் மனைவி, மக்கள் செல்வமே, தங்கள் கருத்துக்குரிய ஒன்றே ஒன்று என்று மக்கள் கருதத் தலைப்பட்டு முக்தி என்னும் உண்மை நெறியினின்று வழி தவறிப்போகும் பொழுதும், ஞானிகள் தோன்றவே செய்கிறார்கள். தங்கள் மொழி, செயல் வழிகளால் காரியங்களை நெறிப்படுத்துகிறார்கள். அவர்கள் கலங்கரை விளக்கையொப்ப சேவைசெய்து நமக்கு மெய்நெறியைக் காண்பிக்கிறார்கள். இவ்வாறாகப் பல ஞானிகள் நிவ்ருத்தி, ஞானதேவ், முக்தாபாய், நாமதேவ் , கோரா, கோனாயி, ஏகநாத் மற்றும் பலர் பற்பல காலங்களில் மக்களுக்கு மெய்நெறியைக் காண்பிக்கத் தோன்றவே செய்தனர். இவ்வகையில் சீரடி சாயிபாபாவும் அவதார புருஷராக பூவுலகிலே அவதரித்தார்.

### சீரடி

அஹமத் நகர ஜில்லாவில் உள்ள கோதாவாரி ஆற்றங்கரை மிகவும் அதிஷ்டம் படைததாகும். ஏனெனில் அனேக ஞானிகளை ஈன்று புரந்தும் அடைக்கலம் கொடுததும் இருக்கிறது. அவர்களுள் முக்கியமானவர் ஞானேச்வர் , சீரடியும் அஹமத்நகர ஜில்லாவில் உள்ள கோபர்காங்வ் தாலுக் காவில் தான் இருக்கிறது. கோபார்கங்காவில் உள்ள கோதாவரி ஆற்றைக் கடந்தவுடன் சீரடிக்கு செல்லும் வழியை அடையலாம்.

சீரடி சாயி பாபாவினால் சீரடி முக்கியத்துவம் பெற்றது. கடப்பதற்கு மிகவும் கடினமான இகவாழ்வை அவர் வென்றார். சாந்தி அல்லது மன அமைதியே அவரின் அணிகலன். விவேகத்தின் பெட்டகம். அவர் வைணவ அடியார்களின் தாயகமாவார். அவருடைய ஒரே ஈடுபாடான ஆன்ம உணரவிலேயே எப்போதும் கவரப்பட்டார். இவ்வுலக பொருள்களிலோ அல்லது இவ்வுலகத்தை கடந்தவற்றிலோ அவர் மகிழ்ச்சியடையவில்லை. அவரின் அந்தரங்கம் (உள்ளம்) ஒரு கண்ணாடி போன்று தூய்மையானது. அவரின் மொழிகள் எப்போதும் அமுதத்தைப் பெய்தன. பணக்காரர் , ஏழை யாவருமஅவருக்கு ஒன்றே புகழ்ச்சி , இகழ்ச்சி இவற்றை அவர் அறிந்திருக்கவில்லை. அல்லது மதிக்கவில்லை. அவரே எல்லா உயிர்கட்கும் இறைவன் ஆவார். அவர் சரளமாக பேசி அனைவருடனும் பழகினார். நடிப்பையே தொழிலாகக் கொண்ட குமரிகளின் நடிப்பையும் நாட்டியத்தையும் கண்டார். கஜல் பாடல்களைக் (தெம்மாங்கு) கேட்டார். ஆயினும் இம்மியளவும் சமாதி நிலையிலிருந்து அவர் விலகவில்லை. இவ்வுலகம் விழித்திருக்கும்போது அவர் தூங்கினார். இவ்வுலகம் தூங்கும்போது அவர் சுறுசுறுப்பாய் இருந்தார். அவரது இருப்பிடத்தை தீர்மானிக்க இயலாதததாக இருந்தது. மற்றும் அவர் செய்கைகள் நிச்சயமாகத் தீர்க்கப்பட இயலாததாய் இருந்தது. அவர் ஓரிடத்தில் வாழ்ந்தவர். எனினும் இவ்வுலகின் நடவடிக்கைகள் அனைத்தையும் அவர் அறிவார். தினந்தோறும் நூற்றுக்கணக்கான கதைகளை திருவாய் மலர்ந்தார். ஆனாலும் மௌன விரதத்திலிருந்து இம்மியளவும் பிறழவில்லை. மசூதியில் உள்ள சுவரின் மீது அவர் எப்போதும் சாய்ந்து கொண்டிருந்தார். அல்லது காலை, மாலை இவற்றில் லெண்டி (தோட்டம்), சாவடி ( சயன அறை) இவற்றை நோக்கி நடந்து கொண்டிருந்தார். ஆயினும் எப்போதும் ஆன்ம உணர்வில் கருத்துள்ளவராகவே இருப்பார். சித்தராயினும் சாதகரைப்போன்று நடித்தார். அவர் எளிமையாகவும் தாழ்வாகவும் அகங்கார மற்றும் இருந்து எல்லோரையும் மகிழ்வித்தார். சீரடி மண் சாயிபாபாவின் திருவடிகளால் மிதிபட்டதால் அசாதாரண முக்கியத்தவம் பெற்றது.


### தாஸ்கணுவின் குளியல்

கங்கையையும் யமுனையையும் சந்திக்கு இடத்திலுள்ள பிரயாகை என்னுட புண்ணிய நதியில் ஸ்நானம் செய்வது மிகவும் பாக்கியமானது என்று இந்துக்கள் நினைக்கிறார்கள். ஆயிரக்கணக்கான யாத்ரிகர்கள் குறிப்பிட்ட காலங்களில் புண்ணிய ஸ்நானத்திற்காக அவ்விடம் செல்கிறார்கள். ஒருமுறை தாஸ்கணு மஹாராஜா ஸ்நானம் செய்வதற்காக பிரயாகை போக வேண்டுமென்று நினைத்தார். பாபாவிடம் அங்ஙனமே செய்வதற்கு அனுமதி வேண்டிவந்தார். பாபா அவருக்கு பதில் கூறுகையில். 'அவ்வளவு தூரம் போக வேண்டிய அவசியமில்லை. நமது பிரயாகை இங்கேயே இருக்கிறது . என்னை நம்பு' அப்போது ஆச்சர்யத்திலும் ஆச்சரியம்! தாஸ்கணு தனது தலையை பாபாவின் அடிகளில் வைத்ததும் கங்கை. யமுனை ஆறுகளின் புனிதநீர் பாபாவின் இரண்டு காற்கட்டை விரல்களிலிருந்து வெளிப்பட்டது. இவ்வாச்சரியத்தைக் கண்ணுற்ற தாஸ்கணு அன்பு கலந்த மரியாதை உணர்ச்சியால் உந்தப்பட்டார். அவருடை பேச்சு, பாபாவின் புகழையும் அவரின லீலைகளையும் குறிப்பிடும் கவிதையாகப் பொங்கி வெளிப்பட்டது.

(ஞானத்தை இன்னும் தேடுவோம்...)

---

## சொற்சிலம்பம் போட்டி இல. 612



அனுப்புபவர் பெயர்:..........................................

விலாசம்:..........................................

..........................................

கையொப்பம்:..........................................

### மேலிருந்து கீழ்

1. திதிகளில் ஒன்று.
2. நாடு.
3. நகு.
4. மூக்கரிப்புடன் வரும் .
5. அரற்றுதல்.
7. எரியும் செயற்பாடு.
9. சளி பிடித்தால் இது வரும்.
12. இரும்பு ஆயுதங்களைத் தீட்டுவது இதனால்.
14. நற்பண்புகள் கொண்டவர்.
15. கொடூரமான.
16. ஏராளமான.
17. வீரம் மிகுந்தவன்.
18. போக அல்ல.
19. உடலில் இயற்கையாய் ஏற்படும் காயம்.

### இடமிருந்து வலம்

1. நாடில்லாமல் அலைபவன்.
4. உணவு.
6. (வாழ்க்கை) வரலாறு.
8. ஒரு ரூபாவில் இது நூறு.
10. தாமரை.
11. வறுமை.
12. வெப்பம்/ நெருப்பு.
13. ஓர் இராசி.
15. சாகடி.
16. சோறு.
17. இல்லம்.
18. வயலின் எல்லையில் கட்டுவது.
20. கடன் வாங்கியவன் , கொடுத்தவனுக்கும் பொருந்தும்.

### சொற்சிலம்பம் போட்டி இல. 612

சொற்சிலம்பம் போட்டி 611ற்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் 02 ஆம் திகதி ஆகும். விடைகள் மற்றும் வெற்றி பெற்றவர்களின் பெயர் விபரங்கள் முறையே 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் 09ஆம் மற்றும் ஏப்ரல் 16ஆம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

முதலாவது பரிசாக ரூபா 250 உம் இரண்டாவது பரிசாக ரூபா 150 உம் மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

### சொற்சிலம்பம் போட்டி இல. 610 க்கான விடைகள்

**மேலிருந்து கீழ்**

1.துரோகம், 2.வேசம், 3. சம்பளம், 4.கரு, 5. முத்தம், 6. குதிரை, 8. பம்பரம், 1 2. தம்பதி, 1 3.சதை, 1 4.சாசனம், 15.அம்புலி, 16.பாரி, 18. வம்பு, 19.எரு,

**இடமிருந்து வலம்**

1.துவேசம், 4.கமுகு , 7.ரோசம், 8.பருத்தி, 9.கம்பளம், 10.தரை, 11. பதம், 13.சம்சாரம், 16.பாதை, 17.சம்பவம், 19.எனா ,20.திம்பு, 21.கரும்பு, 22.புலி

### போட்டி இல. 609 இல் பரிசு பெற்றோர்

| | |
|---|---|
| 1ஆம் பரிசு | செ. திருஞானலோசனி, 11-5/1, சென். லோறன்ஸ் றோட், வெள்ளவத்தை, கொழும்பு-06. |
| 2ஆம் பரிசு | G Z அம்ஜடீன், இல: 42,அத்கம் நிவாஸ, எலபடகம, பன்னலை. |
| 3ஆம் பரிசு | இ. யூஜீனா மரியா, இல: 85/4, கார்மல் வீதி, குருநகர், யாழ்ப்பாணம். |

### பாராட்டுப் பெறுவோர்

(1) செல்வராசா மிதுனன்,
இல;-6-8 AC வியாசர் வீதி,தோணிக்கல், வவுனியா.

(2) சந்திராணி தங்கத்துரை,
வட்ட விதானை வீதி,பெரிய நீலாவணை.

(3) கனகசபை நாகேந்திரன்,
இல;-11-3/1, நெல்சன் இடம், வெள்ளவத்தை, கொழும்பு06.

(4) வி. யிந்துசா,
1ஆம் வட்டாரம், முள்ளியவளை.

(5) ச. பரமேஸ்வரி ,
இல;-43/31,திசவீரசிங்கம் சதுக்கம் மேற்கு, மட்டக்களப்பு.

(6) வே. சரஸ்வதி,
அம்பன், குடத்தனை.

(7) ஜெ. வசந்தன்,
இல;-64/22,கொட்டாஞ்சேனை வீதி,கொழும்பு-13.

(8) கஷீயன் கிஷான் ஜொஸிஎல்மோ,
இல;-171/1, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.

(9) சசிகுமார் திசானினி ,
அராலி வீதி, சங்கானை, யாழ்ப்பாணம்.

(10)திருமதி ஜெ. முகுந்தாதேவி ,
93,2/5,பீட்டர்சன் வீதி, கொழும்பு -06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடாரம் வென்றவனின் கதி



உலகின் மிக பெரிய யானைப் படையை கட்டி ஆண்ட சோழ மாமன்னன், கங்கை முதல் கடாரம் வரை வென்று தென்னாசியா முழுவதையும் ஒரு குடைக் கீழ் ஆண்ட சக்கரவர்த்தி, உலகின் முதலாவது கப்பல் படையை அமைத்த பேரரசன், 1000 ஆண்டுகளுக்கு மேலாக கம்பீரமாக எழுந்து நிற்கின்ற தஞ்சை பெரிய கோவிலை கட்டியவன் .... இப்படி எல்லாம் ஏராளமான பெருமைகளுக்கு உரித்தானவர் இராஜ ராஜ சோழன்.

ஆனால் இவருடைய சமாதி இன்று இந்தியாவின் தமிழகத்தில் உள்ள தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணம் என்கிற ஊருக்கு அருகில் உள்ள ஓட்டன்தோப்பு கிராமத்தில் இருக்கும் வயலின் ஒரு மூலையில் மணல் மேடாக மிஞ்சிக்கிடக்கின்றது. அந்த ஊரைச் சேர்ந்த முதியவர் ஒருவர் தனது தனிப்பட்ட முயற்சியால் தினமும் இந்தச் சமாதிக்கு வழிபாடு செய்து வருகிறார்.

அரசியல்வாதிகளுக்கு பொன்னாலும் வைரத்தாலும் சிலை செய்து மகிழும் தொண்டர்களும், தங்களுக்கு பிடித்த நடிகர்களுக்கு 'கட்-அவுட்' வைத்து பாலாபிஷேகம் செய்யும் சினிமா ரசிகர்களும் , தமிழர்களை உலகில் தலைநிமிர வைத்த உண்மையான நாயகனான இராஜ ராஜ சோழனின் சமாதியை உரிய மரியாதை வழங்கி நினைவுச்சின்னமாக்கினால், காலம் முழுதும் தமிழனின் வரலாற்றுதடம் ஒன்று பாதுகாக்கப்படுமல்லவா.



# பொம்மை அழகி உண்ணாவிரதம்

'மனித பார்பி' என வர்ணிக்கப்படும் உக்ரைனைச் சேர்ந்த வலேரியா லக்கியனோவா, உணவையோ, பானமோ எதையும் உட்கொள்ளாமல் தன்னால் உயிர்வாழ முடியும் என நம்புவதாக கூறி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார். 23 வயதான வலேரியா லக்கியனோவா பார்பி பொம்மையின் தோற்றத்தில் காணப்படுபவர். நடமாடும் மனித பார்பி பொம்மை என தன்னைத் தானே அழைத்துக் கொள்கிறார். அவரின் உடல்தோற்றம் உண்மையானதா அல்லது பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை மூலம் மாற்றியமைக்கப்பட்டதா என்ற விவாதங்களும் சர்ச்சைகளும் நீடித்து வருகின்றன.

“அண்மைக்காலத்தில் நான் பசியை உணரவில்லை. வளி மற்றும் ஒளியினால் மாத்திரம் வாழக்கூடிய நிலைமையை அடைவதற்கு முன்னரான கடைசி நிலை இதுவென நான் கருதுகிறேன்” என வலேரியா தெரிவித்துள்ளார் உணவு, பானம் எதையும் உட்கொள்ளாமல் வளி, ஒளியின் சக்தியினால் மாத்திரம் வாழும் புராதன வாழ்க்கையை முறையை பிரீதாரினியிஷம் என அழைக்கின்றனர்.



வலேரியா லக்கியனோவா தனது பார்பி பொம்மை போன்ற உடலமைப்பை பேணுவதற்காக பட்டினி கிடக்கிறார் எனச் சிலர் கூறுகின்றனர்.

டாக்டர் ரொனல் ஹொப்மன் எனும் மருத்துவர் இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில்-

“பிரீதார்னியிஷம் என்பது தாவரங்கள் தாவரங்கள் ஒளியையும் வளியையும் பயன்படுத்தி உணவுதயாரிக்கும் செயற்பாட்டைப் போன்றதாகும். ஆனால் தாவரங்களைப் போன்று மனிதர்கள் பச்சையத்தை (குளோரோ ஃபில்) கொண்டிருப்பதில்லை என்பதால் சூரிய ஒளியை அகத்துறிஞ்சிப் பயன்படுத்தும் சக்தி மனிதர்களுக்கு இல்லை” எனக் கூறியுள்ளார்

5 அடி 7 அங்குல உயரமான வலேரியாவின் எடை 42 கிலோ ஆகும். இவர் ஏற்கெனவே தாவர உணவுகளை மாத்திரம் உட்கொண்டுவந்தவராவார். தனது நண்பரான திமித்ரி ஷக்ரபோவை திருமணம் செய்தவர் வலேரியா, “நான் எனது கணவருடன் பாலியல் உறவில் ஈடுபடுவதில்லை. பாலியல் உறவில் ஈடுபடாமல் தம்பதியாக வாழ்வதற்கு தனது கணவர் சம்மதித்துள்ளார்” என்றும் கூறி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார்.




# அது ஓர் அழகிய நிலாக்காலம்

மகாலிங்கம் பத்மநாபன்

இந்தப்பகுதிகளில் உள்ள இன்னொரு தனித்துவமான நடைமுறையாக புதிர் உண்ணலைக் குறிப்பிடலாம்.

ஒவ்வொரு விவசாயியும் தனது நிலத்தில் விளைந்த நெல்லரிசிச் சோற்றில் புதிர் உண்ணாமல் வேறு கமக்காரர்களின் புதிரை உண்ணமாட்டார்கள். நன்கு முற்றிய நெற்கதிர்களை அரிந்து நெல்மணிகளைப் பெற்று உரலில் இடித்து புது அரிசியை பெறுவர். நல்லநாள் பார்த்து இரவு நேரத்தில் புதிர்ச்சோறு சமைக்கப்படும். அறுவகைச் சுவையுள்ள கறிகளும் பழ வகைகளும் சேர்க்கப்படும். சமைத்த உணவை தலை வாழையிலையில் படைத்து ஒரு புதிய கடகத்துக்குள் வைப்பர். வயலின் நடுவே மூன்று தடிகளால் கட்டி ஒரு முக்காலி செய்து வைத்திருப்பர். கடகத்திலுள்ள உணவில் ஒரு கரித்துண்டையும் வைத்து, ஒரு வெள்ளைத் துணியினால் சுற்றி ஒருவர் எடுத்துக் கொள்வர்.

வீட்டின் தலைவர் ஒரு செம்பில் தண்ணீருடன் மறுகையில் மணி அடித்தபடி அவரைப் பின் தொடர்வார். பந்தம் கொண்டு போகின்றவர் எல்லோருக்கும் முன்னால் போவார். முக்காலியை அடைந்ததும் துணியை முக்காலியின் மேல் விரித்துக் கடகத்தை அதன்மேல் வைப்பர். நான்கு திசைகளிலும் பந்தங்கள் நடப்படும். ஒரு தட்டத்தில் திருநீறு இட்டு அதன் மேல் கற்பூரம் ஏற்றப்படும். வீட்டின் தலைவர் நான்கு திசைகளுக்கும் நீர் தெளித்து “கூக்கூ” என நான்கு திசைகளிலும் உள்ள காவற்காரத் தேவதைகளைக் கூப்பிட்டு விட்டுத் திரும்பிப் பாராமல் வீட்டை நோக்கி நடப்பார். எல்லோரும் அவரைப் பின் தொடர்வர். பந்தங்கள் அணைந்த பின்னர் ஒரு செம்பில் நீருடன் சென்று, நீர் தெளித்துக் கடகத்துடன் உணவைக் கொண்டு வருவர். தலைவர் அந்தக் கறி சோறு, பழங்கள் யாவற்றையும் குழைத்து உருண்டைகளாக்கி சிறுவர் முதல் முதியோர் வரை வழங்கி விட்டுக் கடைசியாகத் தான் உண்பர். சிறுவர்கள் அடுத்த வருடப் புதிருக்காகக் காத்திருப்பர். தமது வயலைக் காத்த காவற்காரத் தெய்வங்களுக்குப் படைத்த பின்னரே தாம் உண்பதென்பது ஐதீகம் ஆகும்.

## விசக்கடி (பாம்புக்கடி):

இந்தக் கிராமத்தவர்களைப் பாம்புகள் தீண்டியது உண்டு. ஆனால் நான் அறிந்தவரை பாம்புக்கடியினால் எங்கள் கிராமத்தவர் எவரும் இறந்ததில்லை. கடித்தது விசமற்ற பாம்புகளாயிருக்கலாம். அல்லது கடி இரையென நினைத்துக் கடித்த இரைக் கடியாயிருக்கலாம். அல்லது எமது மூத்த விசக்கடி வைத்தியர்களின் அனுபவச் சிறப்பாயிருக்கலாம். ஆனால் என்ன கொடுமை. மூத்தவர்கள் பலரும் இரகசியம் பேணல் என்ற பெயரில் மூலிகைகளின் விசேடங்களை இளைய தலைமுறைகளுக்கு எடுத்தியம்பாது போயினர்.

நாகம் மனிதர்களைக் கண்டால் விலகியோடிவிடும். ஆனால் அவற்றின் உணவு மனிதர்களின் உணவைத் தேடி வரும் அணில், எலி போன்றவையும், மனிதர்களால் வளர்க்கப்படும் கோழி, தாராக் குஞ்சுகளும் அவற்றின் முட்டைகளும் தான். ஆதலால் நேரடியாக மிதித்தால் ஒழிய மனிதர்களைத் தீண்டுவது அரிது. ஆனால் புடையன்கள் அப்படியல்ல. அவற்றைத் தவிர்த்து நடப்பதே புத்தி.

## ஈச்சங்குருத்து வெட்டல்

மாசி, பங்குனி மாதங்கள் ஈச்சங்குருத்து வெட்டிச் சாப்பிட மிகவும் உகந்த காலமாகும். ஈச்சங்குருத்து மிகவும் ருசியானது.

இரண்டு, மூன்று குடும்பத்தவர் இணைந்து வண்டில்களில் சமையல் பாத்திரம் பண்டங்களுடன் வனத்தில் நுழைவர். ஆண்கள் அதிலும் இளைஞர் கோடாரிகளாலும் கத்திகளாலும் ஈஞ்சுகளை வெட்டிக் கொடுக்க ஏனையவர்கள் போட்டி போட்டுக் கொண்டு சாப்பிடுவார்கள். ஆற்றங்கரையை அடைவதற்கிடையில் எல்லோர் வயிறும் ஈச்சங் குருத்துக்களால் நிறைந்து விடும்.

## கூட்டாஞ் சோறு

ஆற்றங்கரையில் வண்டில்கள் அவிழ்க்கப்பட்டு மாடுகள் மேயக்கட்டப்படும். சமையலுக்கான பாத்திரம், பண்டங்கள் இறக்கப்படும். சிறுவர்கள் கிளித்தட்டு மறித்தல், ஆடு புலி ஆட்டம் ஆடுவர். பெண்கள் ஆற்றில் இறங்கி முதலில் குளித்து விட்டு வந்து ஊர்க்கதை பேசி மகிழ்வர். அரிசி புடைத்தல், காய்கறி வெட்டல் முதலிய சிறு வேலைகளைச் செய்வர்.

(இன்னும் நிலம் விரியும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

K




## செல்வராகவன் இயக்கத்தில் சிம்பு

இரண்டாம் உலகம் படத்தால் ஏற்பட்ட தோல்வியைத் தொடர்ந்து தனது அடுத்த படத்தை எப்படியாவது வெற்றிப் படமாக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறார் செல்வராகவன்.

இதற்காக விறுவிறுப்பான ஒரு கதையை ஆயத்தம் செய்து அதில் சிம்புவை கதாநாயகனாக தெரிவு செய்துள்ளார்.

சிம்புவுடன் ஏற்கெனவே அலை, விண்ணைத் தாண்டி வருவாயா படங்களில் ஜோடி சேர்ந்து நடித்த த்ரிஷா இந்த படத்தில் சிம்புவுக்கு ஜோடியாக நடிக்கிறார்.

'ரேடியன்ஸ் மீடியா' நிறுவனம் சார்பில் வருண் மணியன் தயாரிக்கும் இந்தப் படத்தின் படப்பிடிப்பு அடுத்த மாதம் ஆரம்பமாகிறது.



## அக்காவாகவும் நடிப்போம்

வாய்ப்பில்லாத நாயகிகள் குத்தாட்டம் போட வும், அக்கா, அண்ணி வேடங்களில் நடிக்கவும் தயாராகி விட்டனர்.


ஸ்ரேயா, பத்மபிரியா, சார்மி போன்ற கதாநாயகிகள் பிரபல கதாநாயகர்களுடன் ஜோடி போட்டு நடித்து வந்தனர். புதுமுகங்களின் அதிரடி வரவால் இவர்களின் திரையுலக வாழ்வு ஆட்டம் கண்டது. வாய்ப்பில்லாமல் ஒதுங்கி இருந்தனர்.

இந்தநிலையில் பேசி வைத்ததுபோல் இவர்கள் குத்தாட்டங்களில் நடிக்க தயார் என்று அடுத்தடுத்து விருப்பம் தெரிவித்து பேட்டி அளித்தனர். இதையடுத்து ஒரு பாட்டுக்கு நடனம் ஆட வாய்ப்பு வந்தபோது ஏற்றுக்கொண்டனர். அதற்கும் போட்டி வந்துவிட்டதால் இப்போது தங்களை தக்க வைத்துக்கொள்வதற்காக அக்கா, அண்ணி போன்ற வேடங்களிலும் நடிக்கவும் விருப்பம் என்பதுபோல் பேட்டி அளிக்க தொடங்கி உள்ளனர்.

## தெலுங்கில் வீரம்

வீரம் படம் வெளியான அதே நாளிலேயே தெலுங்கிலும் வெளியாகவிருந்தது. ஆனால் தவிர்க்க முடியாத சில காரணங்களால் இப்படத்தின் வெளியீடு தள்ளி வைக்கப்பட்டது. இப்போது எதிர்வரும் 21ஆம் திகதி படம் வெளியாவதாக அறிவித்திருக்கிறார்கள்.

அஜித்துடன் தெலுங்கு ரசிகர்களுக்கு மிகவும் பரிச்சயமான தமன்னா, சிறுத்தை சிவா, தேவி ஸ்ரீபிரசாத் ஆகியோர் கூட்டணி அமைத்திருப்பதாலும் இந்தப் படத்திற்கு அங்கு நல்ல வரவேற்பை கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.




பார்த்திபன் இயக்கத்தில் உருவாகிவரும் படம் 'கதை, திரைக்கதை, வசனம், இயக்கம்'. இதில் ஆர்யாவும், அமலா பாலும் இணையவுள்ளனர். 'வேட்டை' படத்தின் பின் மீண்டும் இந்தப் படத்தில் இருவரும் இணைகிறார்கள்.

எதையுமே வித்தியாசமாக செய்யும் இயக்குநர் பார்த்திபன் இந்தப் படத்தின் பெயரிலேயே ஒரு புதுமையை காட்டியுள்ளார்.

கதை, திரைக்கதை, வசனம், இயக்கம் என படத்தின் தலைப்பை வைத்துவிட்டு, இதன் துணை தலைப்பாக கதை இல்லாத படம் என்று பெயரிட்டுள்ளார்.

100 ஆண்டு இந்திய சினிமாவுக்கு தான் செலுத்தும் மரியாதை என்ற அறிவிப்போடு இந்தப் படத்தின் விளம்பரங்களை வெளியிட்டுள்ளார் பார்த்திபன்.

முற்றிலும் புதுமுகங்கள் நடிக்கும் இந்தப் படத்தின் படப்பிடிப்பு டிசம்பரில் தொடங்கி நடைபெற்று வருகிறது. இந்தப் படத்தில் பார்த்திபன் மகள் கீர்த்தனா முக்கிய வேடத்தில் நடிக்கிறார்.

அத்துடன் நஸ்ரியா நசீம், பிரகாஷ் ராஜ் உள்ளிட்டோரும் இதில் நடிக்க இருக்கிறார்கள்.

படத்தின் ஒளிப்பதிவாளராக ராஜரத்தினம் செயற்படுகிறார்.

## வாயை மூடிப் பே

பாலாஜி மோகன் இயக்கத்தில் சித்தார்த், அமலாபால் நடித்து நல்ல வரவேற்பைப் பெற்ற காதலில் சொதப்புவது. இதற்கு அடுத்து பாலாஜி மோகன் 'வாயை மூடி பேசவும்' படத்தை இயக்கிக் கொண்டி ருக்கிறார். மம்முட்டியின் மகன் துல்கர்





## மீண்டும் ஹன்சிகாவை நோக்கி இயக்குநர்கள்...

பிக்ரமின் ராஸ்கல்,
ஆர்யாவின் மீகாமன்
டங்களில் நடிப்பதற்
ற்கு ஒப்பந்தமாகி
ள்ளதோடு அடுத்த
த்து மேலும் சில முன்
ணி நடிகர்களின்
டங்களில் நடிப்பது
றித்தும் பேச்சு
ார்த்தையில் ஈடுபட்டி
க்கிறார் ஹன்சிகா.
ம்புவுடனான காதலை
றித்துக்கொண்ட மறுக
மே. ஹன்சிகாவை படங்
ரில் நடிக்க வைப்பதற்கு
பக்குநர்கள் மீண்டும்
வரை நாடிவருகின்றனர்.
னால் மீண்டும் பழைய
த்தைப் பிடித்துவிடலாம்
ற நம்பிக்கை ஹன்சிகா
கு இப்போது வந்துள்ள
ம்.
தல் முறிவைப் பற்றி
ாவது துக்கம் விசாரித்
ம். முன்பை விட இப்
து தான் நான் அதிகம்
தோசமாக இருக்கிறேன்
று சொல்லி அவர்களை
டைத்து விடுகிறாராம்
ன்சிகா.



## ஆர்யாவின் சீண்டலும்

ஆர்யா மீது கடும் கோபத்தில் இருக்கிறார் நயன்தாரா. ராஜா ராணி படத்தில் நடித்தபோது நயன்தாரா ஆர்யா இடையே நல்ல புரிதல் ஏற்பட்டது. இதனால் இருவரும் நெருங்கி பழகினர். காலப்போக்கில் காதல் கிசுகிசுக்களும் எழுந்தன.

இதற்கிடையில் இரண்டாம் உலகம் படத்தின்போது அனுஷ்காவுடனும் ஆர்யா நட்பாக பழகியதால் நயன்தாரா ஆர்யா இடையே விரிசல் ஏற்பட்டது. இப்போது இருவரும் விழாக்களிலோ வெளியிடங்களிலோ சந்தித்தால் பேசிக்கொள்வார்கள். ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பல வருடங்களுக்கு முன்னர் திரையுலகை கலக்கும் கதாநாயகியாக வலம்வந்த நதியா திருமணத்துக்கு பிறகு நடிப்பைவிட்டு ஒதுங்கி இருந்தார். பின்னர் மீண்டும் சில வருடங்களுக்கு பிறகு எம் குமரன் சன் ஒப் மகாலட்சுமி படத்தில் ஜெயம் ரவியின் அம்மாவாக நடித்தார். தொடர்ந்து அவருக்கு அம்மா வேடமே வந்ததால் ஒன்றிரண்டு படங்கள் மட்டும் நடித்துவிட்டு மற்ற படங்களை ஏற்காமல் தவிர்த்தார். அப் போது கூறும்போது, திருமணத்துக்கு பிறகு நடிகைகளுக்கு வாய்ப்பு கிடைக்காது என்று சொல்கிறார்கள். அக்கா, அம்மா, அண்ணி வேடம்தான் தருகிறார் கள். ஆனால் இந்திப் படங்களில் திருமணத்துக்கு பிறகும் கதையின் நாயகியாக நடிக்க அவர்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. இங்கு அது போல் வாய்ப்பு தருவதில்லை. தமிழ் உள்ளிட்ட மொழிகளிலும் திருமணம் ஆனவுடன் கதாநாய கிகளை ஒதுக்கிவிடாமல் அவர்களின் திறமைக்கு ஏற்ப முக்கிய வேடங் களை உருவாக்கலாம் என்று கூறி இருந்தார்.

இந்தநிலையில் மலையாளத்தில் வெளியான த்ரிஷ்யம் படத்தைதெலுங் கில் நடிகை ஸ்ரீபிரியா இயக்குகிறார். அதில் வெங்க டேஷ், மீனா நடிக்கின்றனர். பெண் பொலிஸ் அதிகாரி வேடத்தை நதியாவை நடிக்க கேட் டார் ஸ்ரீபிரியா. மலையாள படத்தை பார்த்த தும் நதியாவுக்கு அந்த வேடம் பிடித்தது. உடனே நடிக்க ஒப்புக்கொண்டார். இதுபற்றி நதியா கூறும்போது, முதன் முறையாக ஒரு பெண் இயக்குநரின் படத்தில் நடிக்க உள்ளேன் என்றார்.

## தெலுங்கில் நதியா

## நிஜமான உதை

கதாநாயகன், கதாநாயகி புதுமுகங்களாக களமிறங்க கமல் சுப்பிரமணியம் இயக்கத்தில் உருவாகி வரும் படம் மறுமுகம்.

இந்தப்படத்தில் ஒரு பாடல் காட்சி அருவியில் எடுக்கப்பட்டுள்ளது. இதில் கதாநாயகி ஷில்பி. கதாநாயகன் கிஷியை எட்டி உதைப்பது போல் ஒரு காட்சி படம்பிடிக்க இருந்த நிலையில் நிஜமாகவே கதாநாயகி கதாநாயகனை எட்டி உதைத்துவிட்டார். கோபமடைந்த கதாநாயகன் சற்று ஓரமாக உட்கார கதாநாயகி அவரிடம் சென்று சமாதானம் செய்தாராம்.



## பேசவும்

சல்மான் கதாநாயகனாகவும் நஸ்ரியா கதாநாயகி யாகவும் நடிக்கின்றார்கள். ஏற்கெனவே பட முன்னோட்டம் வெளியாகி நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. இந் தப் படத்தின் மூலம், 'மதுபாலா' தனது மீள்வரவை உறுதிப்படுத்தியிருக்கிறார்.



## ம் நயனின் நச்சரிப்பும்

இருவருக்கிடையே பழைய நட்பு இல்லை. இந்த நிலையில் நயன்தாரா வுடன் சேர்ந்து நடித்தது எனது அதிர்ஷ்டம் என சமீபத்தில் கூறியிருக்கிறார் ஆர்யா. அத்துடன் அவர் நின்றுவிடவில்லை, நயன்தாரா எனது அதிர்ஷ்ட தேவதை என்றும் உசுப்பேற்றியிருக்கிறார்.

இதனால் கடுப்பாகிய நயன்தாரா நட்பே வேண்டாம் என்றுதான் ஒதுங்கி செல்கிறேன். அதிர்ஷ்ட தேவதை எனக்கூறி எங்களுக்குள் நெருக்கம் இருப்பது போல் காட்டிக் கொள்ளப்பார்க்கிறார் என்று நச்சரித்தாரம் தனக்கு நெருங்கியவர்களுடன்.

## ஒரு நாள் ஒரு லட்சம்



தமிழ்த் திரையுலகில் முன்னணி இயக்குநர்களில் ஒருவரான விஜய் தன்னுடைய படங்களில் முந்திய படத்தின் சாயல் இல்லாமல் இயக்கு வதில் வெற்றிகண்டவர்.

முதல் படமான கிரீடம் முதல் தற் போது தயாரிப்பில் இருக்கும் 'சைவம்' வரை, தன்னுடைய அடிப்படை பாணியான குடும்ப பின்னணியை கையாண்டு வருகிறார்.

தாத்தா நாசர், பாட்டி கௌசல்யாவை பார்க்க பேத்தியுடன் காரைக்குடி செல்கிறது ஒரு குடும்பம். அந்த குடும்பத்தில்நிகழும்சம்பவங்கள்தான் கதை. தெய்வத்திருமகள் படத்தில் நடித்த பேபி சாரா பேத்தியாக நடிக் கிறார். ஒருநாள் விளம்பர படத்தில் நடித்தால் இந்த குழந்தைக்கு ரூ.2 லட்சம் சம்பளம். படத்தில் நடிக் கும் போது 1 நாளைக்கு ரூ. 1 லட்சம் சம்பளம். மொத்தம் 40 நாட்கள் இந்தப் படத்தில் நடித்துள்ளார்.

' சைவம் ' இந்த கோடை காலத்தில் குளிர்ச்சி ஊட்டும் ஒரு இனிய தென் றலாக வலம் வரும் என இயக்குநர் விஜய் தெரிவித்தார்

## இங்க என்ன சொல்லுது

சினி விமர்சனம்

நோக்கங்கள் எதுவுமின்றி வாழ்பவர் ஒருவரின் கதைதான் இங்க என்ன சொல்லுது. நண்பனின் திருமணத்துக்காகச் சென்னையில் இருந்து வேறொரு ஊருக்கு வருகிறார் விடிவி கணேஷ். அவருக்கு அவசரமாகத் தொலைபேசி அழைப்பு வருகிறது. உடனே ஊருக்குத் திரும்ப சொல்லி. கிடைக்கிற கார் ஒன்றில் திரும்புகிறார். அந்தக் காரின் சாரதி சந்தானம். அவரி டம் தன் வாழ்க்கையை சொல்லத் தொடங்குகிறார். விடிவி கணேஷ் நண்பன் சிம்புவுடன் சுற்றியது, உறவி னர் மயில்சாமியுடன் சினிமா எடுத்தது, ஒட்டப் பந்தயத்தில் பணத்தை இழந்தது, மனைவி மீரா ஜாஸ்மினுடன் பிரச்சினை என செல்கிறது கதை. இறுதியில் அவர் திருந்தினாரா, மனைவி ஏற்றுக்கொண்டாரா என்பது படம். தனது கரகர குரலால் நகைச்சுவை செய்யும் விடிவி கணேஷ்தான் இதில் கதாநாயகன். படத்திலே கொடுக்கப்பட்ட பாத்திரத்திற்கு கச்சிதமாகப் பொருந்தி இருக்கிறார். தன்னைத் திருமணம் செய்து கொள்வதாகக் கூறிவிட்டு, ஏமாற்றிவிட்டார் என்று மீரா ஜாஸ்மின் கொடுக்கும் புகாரில் கலங்குவது, சினிமா எடுப்பதற்காக வீட்டை அடமானம் வைத்துவிட்டு மீராவின் கோபத்துக்கு ஆளாவது, சந்தானம் காய்த்து எடுப்பதற்கெல்லாம் அப்பாவி லுக் கொடுப்பது என கணேஷ், தேர்ந்த நடிகராகத் தெரிகிறார். சந்தானம் வரும் காட்சிகள் கலகலப்பாக இருக்கிறது. அவர் கணேஷை கலாய்த்து எடுப்பதில் கணக்கு வழக்கில்லாமல் வருகிறது சிரிப்பு. சிம்பு வரும் நேரம் குறைவு என்றாலும் அவரும் தன் பங்குக்கு கணேஷை, கலாய்த்து எடுப்பதில், திரையரங்கில் கைதட்டல். அதுவும் காதல் விவகாரம் பற்றி சிம்புவிடம் கணேஷ் கேட்கும் காட்சி எல்லோரையும் ரசிக்கவைக்கிறது. அவருக்கும் ஆண்ட்ரியாவுக்குமான நெருக்கத்தில் பறக்கிறது அனல். இன்னும் கொஞ்ச நேரம் வரமாட்டார்களா என்று ஏங்க வைக்கிறார்கள் இருவரும். சிம்புவை காதலித்து கணேஷை திருமணம் செய்யும் பாத்திரம்தான் மீரா ஜாஸ்மினுக்கு.

இளசுகளைக் கவரும் வகை யிலும் சேலையிலுமாக ஜில்லென்று இருக்கிறார். சிம்பு கொடுக்கும் பிளாட்டின மோதிரத்தை வாங்கிக்கொண்டு அவரை காதலிக்கத் தொடங்குவது, அவர் ஆண்ட்ரியாவை காதலிப்பது தெரிந்ததும் குழம்புவது, கணவன் பணத்தை இழந்துவிட்டு வர கொதித்து எழுவது என மீரா தனது நடிப்பை சிறப்பாக செய்திருக்கிறார். மயில்சாமி, கே.எஸ்.ரவிக்குமார் ஆகி யோரும் நகைச்சுவைக்கு வந்து போகிறார்கள். சுவர்ணமால்யா சிறிது நேரமே வந்தாலும் மனதில் நிற்கிறார்.

தரண் இசையில் பாடல்கள் ரசிக்க வைக்கின்றன. ஆர்.டி.ராஜசேகரின் ஒளிப்பதிவில் பசுமை தெளித்து கிடக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடுவானில் தொலையும் விமானங்கள்

## உண்மையான காரணங்கள் என்ன?




மலேசிய விமானம் வியட்நாம் கடலில் தொலைந்த பின்னர் விமான விபத்துக்கள் பற்றிய செய்திகளை அறிவதில் திடீர் ஆர்வம் ஏற்பட்டுள்ளது. இதுபோன்ற விமான விபத்துக்கள் ஏற்படுவதற்கு என்ன காரணம் என்று எதிர்வு கூறமுடியாமல் பலர் தடுமாறுகின்றனர். எனினும் சில அசாதாரண நிகழ்வுகளை இவ்வாறான விமான விபத்துக்களுக்கு வித்திடுகின்றன. அவ்வாறு திடீரென விமானங்கள் நாடு வானில் காணாமல் போவதற்கான காரணங்கள் சில-

1. விமானங்களுக்கும் கப்பலுக்கும் வானத்திலும் கடலிலும்தனித்தனிப் பாதைகள் உள்ளன. சர்வதேச விமான கட்டுப்பாட்டுத் துறையும் கப்பல் கட்டுப்பாட்டுத் துறையும் வகுத்துள்ள நிரந்தர வழிகளில் மட்டுமே விமானத்தையும் கப்பலையும் செலுத்தவேண்டும்.

பரந்து விரிந்த ஆகாயம் தானே என விமானத்தையும், விரிந்து கிடக்கும் கடல்தானே என கப்பலையும் விருப்பம் போல் ஓட்ட முடியாது.


2. உலகில் 7 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பகுதிகளில் நடு கடல் பகுதியில் புவி ஈர்ப்பு விசை அதிகமாக உள்ள இடங்கள் என கண்டறிய பட்டுள்ளன. அந்த இடங்களில் மட்டும் சுமார் 60ஆயிரம் அடிவரை இந்த புவி ஈர்ப்பு விசை இருக்கும் . இதன் மேல் எந்தப் பொருள் பூமிக்கு மேல் சென்றாலும் அதை கீழே இழுத்து விடும் சக்தி கொண்டது. அத்தகைய இடங்களில் விமானமும் கப்பலும் பயணிக்கத் தடை உள்ளது. முக்கியமாக இந்தோனேசியா கடல் பகுதியிலும், வங்காள விரிகுடா அந்தமான் பகுதியிலும், வடக்கு கனடா, பசிபிக் மற்றும் இந்திய பெருங்கடல் பகுதியில் அதிக இடங்களில் இந்த ஈர்ப்பு விசைப்பகுதிகள் உள்ளன. இதுபற்றி அந்தந்த விமான வழித் தடங்களில் செயற்படும் விமானிகளுக்கு பயிற்சி கொடுக்க பட்டிருக்கும்.

3. வானில் 30 ஆயிரம் அடி உயரத்தில் விமானம் பறந்து கொண்டு இருக்கும் போது அந்த விமானம் வானவெளியில் பறக்க குறைந்த பட்ச காற்று அழுத்தம் தேவை. அப்போது தான் வானவெளி அந்தரத்தில் இயந்திரத்தைக் கட்டுப்படுத்தி அதை சீராக கீழே இறங்காமல் நேரே விமானத்தை முன்னோக்கி கொண்டு செல்லமுடியும்.

4. சில சமயங்களில் மழை புயல் காலங்களில் விமானம் பறக்கும் தடத்தில் காற்றில்லா வெற்றிடம் (VACCUM pocket) எனப்படும் வெற்றிடம் 200 முதல் 500 கிலோமீற்றர் வரை இருக்கும். அதை முன்பே விமானக்கட்டுப்பாட்டு அறை கண்டு கொண்டு விமானத்தை வெற்றிடம் இல்லாத தடத்தில் இயக்க விமானிகளுக்கு அறிவுரை வழங்கபடும். சில சமயங்களில் கட்டுபாட்டு அறையில் உள்ள ரேடரில் சிறிய அளவிலான வெற்றிடம் தெரியாது. இது போன்ற சிறிய அளவிலான வெற்றிடங்களுக்கு அருகில் விமானம் வரும் போது தான் விமானத்தின் ரேடர் சாதனத்தில் இது தென்படும். அப்போது பயணிகள் ஆசனப்பட்டியை அணிந்திராவிடில் உடனடியாக அணியச் சொல்லி அதற்கான பயணிகளின் இருக்கைகளுக்கு மேல் உள்ள எச்சரிக்கை சின்ன விளக்கை எரியவிடுவார் விமானி. அடுத்த ஓரிரு நிமிடங்களில் விமானம் குண்டும் குழியும் இருக்கும் சாலையில் பயணிப்பது போல் ஒரு உணர்வு பயணிகளுக்கு ஏற்படும். பொதுவாக விமானம் ஆகாயத்தில் பறக்கும் போது ஒரு இயந்திரம் மட்டும்தான் இயங்கும். மற்றொரு இயந்திரம் அவசரத் தேவைக்காகப் பயன்படுத்தத் தயார் நிலையில் இருக்கும். காற்றில்லா வெற்றிடப் பகுதியில் விமானம் நுழையும் போது விமானத்தின் இரு இயந்திரங்களையும் அதிக வலுவோடு இயக்குவார் விமானி. 20 முதல் 50 கிலோமீற்றர் தூரத்துக்கு வெற்றிடம் இருந்தால் மட்டும் விமானத்தை பாதுகாப்பாக செலுத்தி வெற்றிடத்தை தாண்டுவது சாத்தியம். இல்லாவிட்டால் அவ்வளவுதான்.

5. மலேசிய விமான விபத்து கூட இத்தகைய காற்றில்லா வெற்றிடத்தால்தான் நிகழ்ந்திருக்கும் என விமானிகள்கூறுகின்றனர். முக்கியமாக ஒவ்வொரு விமானத்திலும் இரண்டு விமானிகள் இருப்பர். நீண்ட தூரம் செல்லும் விமானத்தில் 2 மணி நேரத்துக்கு ஒருவர் என விமானத்தை ஒரு விமானி கட்டுபாட்டில் வைத்து விமானத்தை இயக்குவார்கள். அப்போது ஒரு விமானி ஓய்வு எடுப்பார். சில சமயங்களில் விமானம் மேலே பறக்கத் தொடங்கியவுடன் கட்டுப்பாட்டு அறையிலிருந்து அந்த விமானத் தடத்துக்கான நிலை குறித்து தகவல் வரும். வந்திருக்கும் தகவல்களை வைத்து தானியங்கி முறையில் விமானத்தை ஓடச் செய்து விட்டு கண்ணை மூடி தூங்கி விடுவார்கள் விமானிகள். எனினும் அத்தகைய சந்தர்ப்பங்களில் ஏற்கனவே வந்த விமானத் தடம் பற்றிய அறிக்கையில் இல்லாத திடீர் மாற்றங்கள் ஏற்பட்டால் அதனை உறங்கிக்கொண்டிருக்கும் விமானிகள் உணரமுடியாது. தவறைச் சரிசெய்வதற்கிடையில் விமானம் வீழ்ந்துவிடும். அநேக விமான விபத்துக்கள் நள்ளிரவில் நடப்பதற்கு விமானிகளின் இத்தகைய தூக்கமும் முக்கிய காரணம்.





## பேஸ்புக் நாய்

சமூக வலைத்தளங்களில் தங்களுடைய கருத்து, படம் என்பவற்றைப் பதிவிட்ட பின்னர் அதனை எத்தனை பேர் 'லைக்' செய்கிறார்கள் என்று ஏக்கத்தோடு பலரும் காத்திருக்க, ஒரு பொமேரியன் நாய் சர்வசாதாரணமாக 2 மில்லியன் ரசிகர்களை தன்னுடைய பேஸ்புக்கில் கவர்ந்திழுத்துள்ளது.

¶ Í › åVI | ØÃBì ⁻ ( Boo). இதுவே உலகில் ஏராள மானோரால் விரும்பப்படும் அழகிய நாயாக மகுடம் சூட்டப்பட்டுள்ளது. குறித்த நாய்க்கு சமூக வலைத்தளங்கள் மூலம் உலகெங் கிலும் 2 மில்லியனுக்கும் மேற்பட்ட ரசிகர்கள் உள்ளார்கள். ஐந்து வயதான குறித்த நாய்க்கு அதன் அமெரிக்க எஜமானரால் பேஸ்புக் பக்கம் ஒன்று 2009 ஆம் ஆண்டுஉருவாக்கப்பட்டது. இந்தப் பேஸ்புக் பக்கத்தில் நாளாந்தம் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இணைந்து வருகிறார்களாம்.

அந்த நாயின் உரிமையாளரான ஜே.எச். லீ கருத்துத் தெரிவிக் கையில், "எனது நண்பர்களுக்கு பூ என்ற எனது நாயின் புகைப்படங்கள் மிகவும் பிடிக்கும்.. சும்மா பகிடிக்காக தான் நாய்க்கு பேஸ்புக் பக்கம் உருவாக்கினேன். ஆனால் தற்போது மில்லியன் கணக் கானோர் இதில் இணைந்துள்ளனர். அதனால் இன்று உலகின் அழகிய நாயாக மாறியுள்ளமை மன நிறைவைத் தருகின்றது" என்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடுஊரில் ஒரு நரிக்கூடு



அலுவலக வேலை நிமித்தமாக நான் வன்னிப் பகுதிக்குச் செல்லவேண்டியிருந்தது. மாலையாகியும் அலுவல் முடியாத காரணத்தால் அன்றைய பொழுதை அங்கேயே கழிக்க வேண்டியாகிவிட்டது. நல்லவேளையாக அந்தப் பகுதியிலேயே என்னுடைய பாடசாலைக்கால நண்பி ஒருத்தி இருந்ததால் அவளைத் தொலைபேசியில் அழைத்து விடயத்தை தெரிவித்துவிட்டு அவளுடைய வீடு நோக்கி நடந்தேன்.

வீட்டில் சிறுபிள்ளைகள் இருப்பதால் அவர்களுக்கு ஏதாவது வாங்கிக்கொண்டுபோவோமென்று அருகிலிருந்த கடைக்குள் நுழைந்தேன்.

"அண்ணை! தேன்குழல் இருக்கா?"

"என்னது?"

அவனுக்கு நான் கேட்டது விளங்கவில்லை. கொச்சை தமிழில்தான் திருப்பிக் கேட்டான். அநேகமாக அவன் ஒரு சிங்கள வியாபாரியாகவோ அல்லது ஆமிக்காரனாகவோ இருக்க வேண்டும்.எதற்கு வீண்வம்பு என்று பிஸ்கட் பெட்டி ஒன்றை வாங்கிக்கொண்டு வெளியே வந்தேன்.

ஒருமாதிரி அவளுடைய வீட்டைத்தேடிக் கண்டுபிடித்துக்கொண்டு உள்ளே சென்றேன். வீட்டில் பிள்ளைகள் நின்றார்கள். அவர்களுக்கு கையில் கொண்டுவந்ததைக் கொடுத்துவிட்டு கைகால் முகம் கழுவிக்கொண்டு வந்து உட்கார்ந்தேன். வந்த அலுப்புக்கு அவள் கொடுத்த ரீ நன்றாக இருந்தது. சற்று நேரம் கதைத்துக் கொண்டு இருந்தோம் .கருக்கலாகிவிட்டது.

"சரி காணும் ஹோலில இருந்தது.எழும்பி உள்ள வா..கதவைச் சாத்த வேணும்.."

"மதி, ராயி உள்ள வாங்கோ" என்று கூப்பிட்ட மறுநிமிடமே பிள்ளைகள் உள்ளே வந்துவிட்டார்கள்.

போரின் போது கணவனைப் பறிகொடுத்துவிட்ட அவளுக்கு இப்போது ஆறுதலாக இருப்பது அவளுடைய இரண்டு பிள்ளைகள் மாத்திரமே. காதலித்து கரம் பிடித்தவன் இறந்த பின்னரும் குழந்தைகளுக்காகவே அவள் இன்னும் உயிருடன் இருக்கிறாள் என்று கூடச் சொல்லலாம்.

'இப்போது அவள் ஏன் எழும்பி உள்ளே வரச் சொல்கிறாள்?' என் மண்டைக்குள் கேள்வி வண்டு புகுந்துவிட்டது. எப்படி யோசித்தும் விடை கிடைக்கவில்லை.கதவைப் பூட்டிக்கொண்டே மெல்ல அவளிடம் கேட்டேன்.

"ஏனடி இப்பவே கதவை பூட்டிறதுக்கு என்ன அவசரம்?..ஆறுதலா பூட்டலாம் தானே.."

"நீ வேற..உனக்கு இங்கத்தைய நிலைமை தெரியாது. கொஞ்சம் இருட்டினாலே ஆம்பிளையள் இல்லாத வீடுகளைப் பாத்து தேடி வந்திடுவாங்கள். சாட்டில்லாட்டி சாவில்லாத மாதிரி. ஐ. சி இருக்கோ..குடும்பக்காட் காட்டுறியளோ எண்டுகொண்டு.அவங்கள் என்ன ஐ. சி பாக்கவே வா[?]வங்கள்? நரிக்கு ஊருக்க வந்தாலும் அதுக்கு நரிப்புத்தி தானே இருக்கும். எத்தின பேரின்ட வாழ்க்கை இப்பிடியே போயிருக்கும். நாங்கள் எதுக்கும் முன்னமே பாதுகாப்பா இருந்தால் தான் உண்டு.இனி எனக்கில்லாவிட்டாலும் என்ர பிள்ளையளுக்காகவாவது நான் கவலைப்படத்தானே வேணும்."

கடையில் கடைக்காரன் பேசிய கொச்சைத் தமிழும் அவனது பார்வையும் என் மனதில் பதிந்தது.தனக்காக இல்லாவிட்டாலும் தன்னினத்திற்காகவாவது கொஞ்சம் பாதுகாப்பாக இருக்கவேண்டும் என் சகோதரிகள் என்று எண்ணத்தோன்றியது. கொஞ்சம் சிந்தியுங்கள் சகோதரிகளே.




# கதையே இல்லாத கதாநாயகிகள்

பொழுதுபோக்கு விடயமாகவும் சமூகத்துக்கு நல்ல கருத்துக்களைச் சொல்லக்கூடிய துறையாகவும் காணப்படுகின்ற திரைப்படத்துறையில் பெண்களுக்கான முன்னுரிமை என்பது ஏன் குறிப்பிடத்தக்க அளவுக்கு இல்லை என்பது கேள்விக்குரிய ஒன்றாகவே காணப்படுகின்றது.ஒருவருடத்தில் உருவாக்கப்படுகின்ற படங்களில் எத்தனை படங்கள் பெண்களை முன்னுரிமைப்படுத்துகின்றன..?

ஆயிரத்தில் ஒரு படம் அப்படி அமைந்தால் அது அதிர்ஷ்டம் தான்.ஆனால் எத்தனை படங்கள் அப்படி அமைகின்றன? வெறும் ஓரிரு பாடல்களுக்கும் காதல் காட்சிகளுக்கு மட்டும் பெண்களை வைத்துக்கொண்டு கதாநாயகி என்று சொல்லும் நிலை எப்போது மாறப்போகின்றது.


ஈழத்து நடிகை மிதுனா

தென்னிந்திய சினிமாக்கள் தான் அப்படி என்றால் ஈழத்தில் உருவாக்கப்படும் குறும்படங்களாவது அந்த நிலையை நிவர்த்திக்க முயற்சிக்கலாமே. சொல்லப்படவேண்டிய உண்மைக்கதைகள் பல இருக்கின்ற போது அதை விடுத்து வர்த்தக - பாலியல் தீனி போடக்கூடிய - கதைகளை மட்டும் எதற்கு தெரிவுசெய்கிறார்கள்?

எங்கள் சமூகத்திலாவது பெண்களை மையப்படுத்திய படைப்புக்களை எப்போது படைக்கப்போகிறார்கள்? சொல்லப்பட வேண்டிய உண்மைகளையும் பெண்களுக்கான முன்னுரிமையையும் எப்போது கொடுக்கப்போகிறார்கள்..?

# அழகை ஆராதியுங்கள்..!

அழகு என்பது நேர்த்தியின் மறுவடிவம் தான்.யாரெல்லாம் நேர்த்தியை விரும்புகிறார்களோ அவர்களெல்லாம் அழகை ஆராதிக்கிறார்கள் என்று அர்த்தம்.அதிலும் குறிப்பாக பெண்களின் அழகை விரும்பாதவர்கள் இருக்கிறார்கள் என்றால் அது கேள்விக்குரிய விடயம் தான்.ஆனால் இன்று அழகென்பது வெறும் பணம்தான் என்கின்ற நிலை ஏற்பட்டுவிட்டது.



பொதுவாகப் பெண்கள் புதுப்புது வடிவங்கள்கொண்ட ஆடை அணிவதைத் தான் அழகென்று நினைக்கின்ற நிலைமை காணப்படுகின்றது.ஆனால் புதுப்புது ஆடைகள் மட்டுமல்ல அதையும் தாண்டி நீங்கள் அழகாக இருக்க சில குறிப்புகள் -

- இருக்கின்ற உங்கள் ஆடைகள் அழகானவை என்கின்ற எண்ணப்பாட்டை முதலில் மனதில் இருத்திக்கொள்ளுங்கள்.
- எப்போதும் ஆடைகளை நன்றாக அயர்ன் பண்ணி அணியுங்கள்.
- ஆடைகளைத் தோய்த்து உலரவிடுகின்றபோது அதிக நேரம் வெயிலில் காயவிடுவதை தவிருங்கள்.
- அணிந்து கழற்றுகின்ற போது உடனடியாகவே தோய்த்து காயவிடுங்கள்.
- தோய்ப்பதற்கான நாள்களை நாளை... நாளை என்று கடத்தாதீர்கள்.
- ஆடைகளைத் தெரிவுசெய்கின்ற போது உங்களுக்குப் பொருத்தமானதாகத் தெரிவுசெய்யுங்கள்.
- மற்றவர்களோடு உங்களை ஒப்பிட்டு தாழ்வாக எண்ணுவதைத் தவிருங்கள்.
- மற்றவர்கள் அணிகின்றார்கள் என்பதற்காக நீங்களும் பொருத்தமற்ற ஆடைகளை அணியாதீர்கள்.தேவைக்கு அதிகமாக வாங்கவும் செய்யாதீர்கள்.
- இத்தகைய குறிப்புக்களை மனதில் வைத்துக்கொண்டு ஆடைகளைத் தெரிவு செய்யுங்கள்.அவற்றைப் பக்குவமாக பாவியுங்கள்.உங்கள் அழகும் மற்றவர்களால் ஆராதிக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் பழங்கால நாணயங்கள்: புதையலின் எச்சங்களா?

—நேர்காணல்- ஹரிஸ்

## உண்மையை உடைக்கிறார் பேராசிரியர் ப.புஷ்பரட்ணம்

அண்மையில் வவுனியா சாஸ்திரிகூழாங்குளம் பகுதியில் ஒரு பானையில் பழங்கால நாணயங்கள் மீட்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகியிருந்தன. இந்த நாணயங்கள் பழங்கால மன்னர்களால் மறைத்து வைக்கப்பட்ட புதையல் என்ற ஊகங்கள் மக்களிடையே எழுந்தன. எனவே இது பற்றிய உண்மையை மக்களுக்கு வெளிப்படுத்த , குறித்த நாணயங்களை தற்போது ஆய்வுக்குட்படுத்தி வருபவரான யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறைத்தலைவர் பேராசிரியர் ப.புஷ்பரட்ணத்தைச் சந்தித்தோம். அவர் அளித்த விளக்கங்கள் இதோ-

**கேள்வி:- அண்மைக்காலமாக ஊடகங்களில் புதையல் தோண்டியவர்கள் கைது என்ற செய்தியை அடிக்கடி காணமுடிகின்றது. இந்த நிலையில் வவுனியாவில் ஒரு பானை நிறைய பழங்கால நாணயங்கள் மீட்கப்பட்டிருப்பதாக அறிய முடிகின்றது? இந்த நாணயப்பானை இவ்வாறான புதையல்களில் ஒன்றா?**



மீட்கப்பட்ட நாணயங்கள்

பதில்:- நிச்சயமாக இது புதையல் இல்லை. கடந்த மாதம் 18ஆம் வவுனியா மாவட்டத்தில் சாஸ்திரிகூழாங்குளம் செல்லும் வீதிப் புனரமைப்பு பணியில் ஈடுபட்டிருந்தவர்கள் நிலத்தை அகழ்ந்தபோது ஒரு பானை நிறைய பழையகால நாணயங்களோடு இருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது. ஏறத் தாழ 186 நாணயங்களே அங்கிருந்ததாக செய்திகள் வெளிவந்திருந்தன. இது குறித்த தகவல் அறிந்து அந்த இடத்துக்கு நான் நேரில் சென்று பார்த்த போது நாணயங்கள் இருந்த பானை முழுவதும் நாணயங்கள் இருந்தமைக்கான அடையாளங்கள் மட்பாண்டத்திலே காணப்பட்டன. கிட்டத்தட்ட 4000க்கும் மேற்பட்ட நாணயங்களாவது அந்தப்பானையில் இருந்தமைக்கான தடயங்கள் தென்பட்ட போதும் பானையில் அடிப்பகுதியில் மட்டுமே வெறும் 186 நாணயங்களே இருந்தன.இதன் பின்னர் நாங்கள் விசாரித்தபோதுதான் ஒரு உண்மை தெரியவந்தது. அதாவது மீட்கப்பட்ட மண்பானைக்குளம் இருந்த நாணயங்கள் பலவற்றை ஊர்மக்கள் தம்பாட்டுக்கு எடுத்துச் சென்றுள்ளனர். அவ்வாறு நாணயங்களை எடுத்துச் சென்றவர்களை இனங்கண்டு கொண்டு செல்லப்பட்ட நாணயங்களை மீட்க நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

**கேள்வி;- இந்த நாணயங்களின் எந்தக்காலப்பகுதியைச் சேர்ந்தவை? இலங்கை மன்னர்கள் பயன்படுத்திய நாணயங்களா அல்லது வேறு நாடுகளில் இருந்து கொண்டுவரப்பட்டவையா?**

பதில்;- இவை முழுவதும் செப்பு நாணயங்கள். இவை 11 தொடக்கம் கி.பி15 ஆம் நூற்றாண்டு வரை தென்னிலங்கையில் ஆட்சி புரிந்த மன்னர்களால் பயன்படுத்தப்பட்ட நாணயங்கள். குறிப்பாக முதலாம் விஜயபாகு, பராக்கிரமபாகு, சாகச மன்னன் புவனேகபாகு ஆகிய மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களே இவற்றுள் உள்ளடங்கியிருந்தன. இதனை அந்த நா்ணயங்களில் உள்ள எழுத்துக்களை வாசித்த போது அறியக் கூடியதாக இருந்தது. பானையில் இருந்த வேறு சில நாணயங்களும் இதே தன்மையையே கொண்டிருந்ததை அவதானிக்க முடிந்தது என்று அந்த நாணயங்களை எடுத்த மக்கள் எம்மிடம் கூறியிருந்தனர்.

**கேள்வி;- இந்த நாணயங்கள் தென்னிலங்கையில் இருந்து எப்படி வவுனியா மாவட்டம் சாஸ்திரிக்குளம் பகுதிக்கு கொண்டு வரப்பட்டிருக்கலாம் என்று எண்ணுகிறீர்கள்?**

பதில்;- இந்த நாணயங்கள் வவுனியா மாவட்டத்தில் யாரோ ஒரு நாணயக்காப்பாளரால் சேகரிக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டதாக சிலர் சொல்வதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஏனெனில் பானையில் இருந்த நாணயங்கள் அனைத்தும் தென்னிலங்கையிலும் பொலநறுவையிலும் ஆட்சி செய்த மன்னர்களுக்கு உரியவை. வவுனியாவில் நாணயங்கள் சேகரிக்கும் ஒருவர் இருந்திருப்பாரானால் வவுனியாவில் இந்த நாணயங்களோடு வேறும் சில நாணயங்கள் கிடைத்திருக்க வாய்ப்புண்டு. குறிப்பாக மீன்சின்னமும் காளையும் பொறித்த நூற்றுக்கணக்கான நாணயங்கள் வவுனியா மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சேது நாணயங்களும் கண்டுபிடிக்கப்பட்டிருந்தன. டீ.ஆர். காபகட் என்பவர் வவுனியாவில் இருந்து கொண்டு வரப்பட்ட நாணயங்கள் சிலவற்றை தான் விலை கொடுத்து வாங்கியதாகக் கூறியுள்ளார். ஆகவே இந்த நாணயங்கள் யாவும் இன்னுமொரு இடத்தில் இருந்து இங்கு கொண்டு வந்து புதைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்று கூறுவதே பொருத்தமாக இருக்கும். அதேநேரம் நாணயம் சேகரிக்கும் ஒருவரால் தென்னிலங்கையில் சேகரிக்கப்பட்ட இந்த நாணயங்கள் ஏதோவொரு நோக்கோடு வவுனியாவுக்கு கொண்டு வரப்பட்டதாக ஊகிக்கலாம். அதாவது 11 ஆம் நூற்றாண்டில் இருந்து 14 ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதிக்குரிய பல மன்னர்களுக்குரிய நாணயங்கள் ஒரு பானையிலே போடப்பட்டு புதைக்கப்பட்டிருக்கலாம் என நான் கருதுகின்றேன்.



மீட்கப்பட்ட நாணயங்கள்

**கேள்வி:- அப்படியானால் எப்போது இந்த நாணயங்கள் அடங்கிய பானை இங்கு கொண்டுவரப்பட்டு புதைக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதுகிறீர்கள்?**


பதில்:- வவுனியாவில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த நாணயங்கள் இற்றைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவையாக இருப்பினும் குறித்தபானையும் நாணயங்களும் வவுனியாவுக்கு மிக அண்மையில் தான் கொண்டு வரப்பட்டிருக்க வேண்டும். ஏறத்தாழ 30 ஆண்டுகளுக்கு உட்பட்ட காலப் பகுதியில் தான் இந்த நாணயங்கள் அடங்கிய பானை வவுனியாவுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கலாம். ஏனெனில் இந்த நாணயங்கள் அவை புழக்கத்தில் இருந்த காலத்தில்- ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்- புதைக்கப்பட்டிருந்தால் நிலத்தில் பல அடி தூரத்துக்கு புதைந்திருக்கும். ஆனால் இந்த நாணயங்கள் அடங்கிய பானை நிலமட்டத்தில் இருந்து ஓரடிக்கும் குறைவான ஆழத்திலேயே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

ஆனாலும் இலங்கை வரலாறு பற்றிய ஆய்விலும் தென்னிலங்கை மன்னர்கள் பற்றிய ஆய்விலும் மிக முக்கியமான இடத்தை வகிக்கக் கூடியதான இந்த நாணயங்கள் காணப்படுகின்றன. தென்னிலங்கை மன்னர்கள் பற்றிய நாணயங்களோடு வேறு சில நாணயங்களும் கிடைத்திருக்கின்றன. இந்தப் பானையில் இருந்த 30,000 மேற்பட்டநாணயங்களை அவ்வூர் மக்கள் எடுத்துச் சென்றிருப்பதால் அந்த நாணயங்களும் எமக்குக் கிடைக்கும் போதுதான் ஆய்வினைச் செம்மையாக மேற்கொண்டு உறுதியான மேலதிக தரவுகளைப் பெற் றுக் கொள்ளமுடியும்.

## பிரமிட் தமிழர்களுடையதா?

பிரமிட் ஒரு தொடர்பான செய்தியை கூறினால் நீங்கள் வியப்பால் விழி விலகி நிற்பீர்கள் ! எகிப்தில் உள்ள பிரமிட் தமிழர் கட்டியது என்பது மட்டுமல்ல , அந்தச்சொல்லே தமிழ்ச் சொல்லாகும் .

இடுதல் என்றால் புதைத்தல் என்று பொருள். இறந்தவர்களைப் புதைப்பதால் 'இடுகாடு ' என்று அழைக்கப் பட்டது . சாதாரண மக்கள் இறந்தால் சிறு குழியில் புதைத்து மேலே மேடு அமைப்பர் . அது சிறு இடு . மன்னர்கள் போன்ற உயர்ந்தோர் இறந்தால் பெரும் இடு அமைப்பர் . பெரும் + இடு = பெருமிடு . அதுவே பிரமிடு (பிரமிட்) என்று மருவி எகிப்தில் அழைக்கப் பட்டிருக்கலாம்.



தமிழர்கள் உலகின் பல பாகங்களில் வாழ்ந்தவர்கள் என்பது மட்டுமல்ல . பல மொழிகள் தோற்றத்திற்கு காரணமாய் அமைந்து , பல மொழிகளுக்கும் பல சொற்களை கொடையாகவும் அளித்துள்ளனர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● ஔண்யன்



# இருளின் கதவைத் திறந்தவன் 44

**யூ**லியன் யோசித்துக் கொண்டிருக்கும் போதே பண்ணை வீட்டுக்கு வழக்கமாக பொருள்களை கொண்டுவரும் வாகனம் வந்தது. எப்போதுமே அந்த வாகனம் வந்து சென்று கொண்டிருப்பதால் பிரிட்டன் உள வாளிகளின் சந்தேகப் பார்வையில் இருந்து அதற்கு ஒரு விலக்கு அளிக்கப்பட்டிருந் தது. இதனைப் பண்ணை வீட்டுக்கு வந்து 3 நாள்களிலேயே யூலியன் கண்டுபிடித் திருந்தான். என்றாலும் அவ னுக்கு சின்னதாயொரு சந் தேகம். அந்த வாகனத்தின் சாரதி பிரிட்டன் உளவாளி யாக இருக்கலாமோ? அத னால் தான் அந்த வாகனத்தை சோதிக்காமல் விடுகிறார் களோ? என்று யூலியன் குழம் பவும் செய்தான். தன் சந் தேகத்தை வோகன் ஸ்மித்திட மும் கேட் டான்.

ஒருகணம் யூலியனை நிமிர்ந்து பார்த்த வோகன் கொஞ்சம் யோசித்தார்.

"நீங்கள் சொல்லும் கோணத் தில் நான் ஒரு போதும் யோசித்தது கிடையாது. ஆனால் அப்படியும் இருக் கலாம். ஏனெனில் இந்த வாக னம் வருடக் கணக்கில் இங்கு வந்து சென்றாலும் இதற்கு சில நாள்களுக்கு முன்னர் தான் புதிய சாரதி நியமிக் கப் பட்டிருந்தான். ஒருவேளை உங்களை உளவு பார்க்க அவர்கள் (பிரிட்டன் உள வாளிகள்) சாரதி வேடத்தில் வந்துமிருக்கலாம்'' என்று வோகன் சொல்லச் சொல்ல யூலியனின் முகம் பிரகாசிக்கத் தொடங்கி யது.

ஜன்னலோரமாக வந்து நின்று, அந்தச் சாரதி என்ன செய்கிறான் என்று கூர்ந்து நோக்கத் தொடங்கினான். தன் பாட்டுக்கு பொருள்களை இறக்கி தோளில் சுமந்து பண்ணை வீட்டின் களஞ்சியசாலைப் பக்கமாகச் சென்று கொண்டிருந்த அந்தச் சாரதி, எவரும் அறியாவண்ணம் வீட்டின் உட்பக்கமாகக் கண்களைச் சுழற் றியபடியே சென்றான். கைகள் பயிற்சி பெற்ற படைவீரனுக் குரியவை போல இறுக்கமாக இருந்தன. முகத்தில் களைப் பின் ரேகைகள் இல்லை. இரைதேடும் கழுகு போல எதையோ அவன் தேடிக் கொண்டிருக்கிறான் என்பதை அவன் முகம் பார்த்தவு டனேயே உணர்த்தியது. சந்தேகமேயில்லை. சாரதி உருவில் வந்த உளவாளி தான் அவன்.

தன் சந்தேகத்தை இன்னும் உறுதி செய்துகொள்ள விரும்பிய யூலியன், தன் ஐ போனில் அவனைப் படமெடுத்து உடனடி யாக இணையத்துக்குள் ஊடுருவி, அவ னைப்பற்றிய விபரங்களை நோண்டத் தொடங்கினான். தோண்ட தோண்ட சாரதியின் உண்மைமுகத்தை வெளிப்படுத் தும் தகவல்கள் ஊற்றெடுக்கத் தொடங் கின.

கிட்டத்தட்ட 5 வருடங்களாக அவன் பிரிட்டன் உளவுத் துறைக்காக வேலை செய்கிறான். மிகப்பாரதூரமான குற்ற வாளிகளைப் பின் தொடர்ந்து அவர்களைப் பற்றி அறிக்கையிடுவதுதான் அவனது பிரதானபணி என்றெல்லாம் இணையத் தரவுகள் வந்தவனின் வண்டவாளங்களை யெல்லாம் அடுக்கத் தொடங்கின.

அப்படியானால் இவனை அனுப்பிய தன் மூலம் என்னையும் பாரதூரமான குற்றவாளியாகத்தான் பிரிட்டன் பார்க் கிறதா? இனியும் இந்த அரசிடம் நீதியை எதிர்பார்ப்பது தவறு. ஏற்கனவே தீர்ப்பெழுதிவிட்டு வழக்குத் தொடுப் பவர்களை நம்புவதைவிட என் ஆற்றலை நம்புவதே கெட்டித்தனம் என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டான் யூலியன்.

உடனடியாகவே விடுதிக்குச் சென்று தூதரக அதிகாரிகளைச் சந்திக்க யூலியன் முடிவெடுத் தான். அதற்கு எதிரிகள் தனக்கு விரித்த வலை யையே உபயோகப்படுத்தவும் அவன் தீர்மானித்தான்.

வோகனிடம் தன் திட்டத்தை யூலியன் விப ரிக்க, அதை அரைகுறை மனதோடு வோகனும் ஏற்றுக்கொண்டார். சாரதியை உள்ளே அழைத்து தேநீரும், சிற்றுண்டிகளையும் வற்புறுத்தி வோகன் வழங்கினான்.

முதலில் தயங்கிய சாரதி வோகனின் வலிந்த அழைப்பை நிராகரிக்க முடியாதவனாக, உள்ளே சென்றமர்ந்து தேநீரைப் பருகத் தொடங்கினான்.

இந்தச் சில நிமிட இடைவெளி யூலியனுக்குப் போதுமானதாக இருந்தது. வாகனத்தின் பின் பக்கமாக - பொருள்களோடு பொருள்களாக- ஏறி அமர்ந்து கொண் டான்.

சில நிமிடக் காத்திருப்பின் பின்னர் வாகனம் புறப்பட்டது. வாசலையும் தாண்டிவிட்டால் போதும், எங்கேனும் வீதியோரமாக அதன் வேகம் தணிந்த பொழுதொன்றில் கீழே பாய்ந்து வெளியேறுவதுதான் யூலியனின் திட்டம். அத்தோடு அந்த வாகனம் எந்தப் பக்கமாகச் செல்லப்போகின்றது என்பதும் அவனுக்கு தெரியாது. எனவே அதன் நகர்வை அறிவதற் காக பொருள்களுக்கிடையே சிறு இடை வெளி யொன்றை ஏற்படுத்தி சூழலை அவதானிக்கத் தொடங்கினான். போதாக் குறைக்கு தனது ஐ போனில் டிஜிட்டல் வரைபடத்தையும் உயிர்ப்பித்துக் கொண் டான். ஜி.பி.எஸ் தொழினுட்பம் கொண்ட அந்த வரைபடத்தின் மூலம் அவன் எங்கு இறங்கினாலும் செல்ல வேண்டிய விடுதிக்கு பிறரின் உதவியில்லா மலேயே போய் விடமுடியும். இன்னும் சில கணங்கள் மட்டுமே இந்தக் காத்திருப்பு. பண்ணை வீட்டு வாசலை அடைகிறது வாகனம். கதவு பூட்டப்பட்டதும் தன் திசைவழியே வாகனம் செல்ல முயன்ற போது தான்,

''நிறுத்து'' வாகனத்தை என்று கூவிக் கொண்டே பண்ணை வீட்டு முகப்பில் காய்ந்து கொண்டிருந்த உளவாளிகள் இருவர் அந்த வாகனத்தை நோக்கி ஓடி வந்து கொண்டிருந்தனர். யூலியனுக்கு நெஞ்சு திக். திக் என்று அடித் துக் கொண்டது. வியர்வை அளவுகணக்கின்றி சில செக்கன்களில் வியர் வையாகப் பெருக்கெடுக்கத் தொடங்கியது. ஓடிவரும் உளவாளிகளின் காலடி யோசை யூலியனுக்கு மிகக் கிட்ட வாக கேட்டது.

**(திரைகள் இன்னும் திறக்கும்)**

# ஆட்டம் குளோஸ்

**– கனலுபன்**



**மு**டிதிருத்திக் கொண்டிருந்த சலூன்காரன், சலூனில இருந்தாக்களிட்டச் சொன்னான்.

"ஊரிலயே ஆர் படு மொக்கன் எண்டு தெரியுமே... அந்தா வாரான் பாருங்கோ பெடியன், அவன்தான்... இஞ்சதான் முடிவெட்ட வாரான் போல கிடக்கு!"

இப்பிடியான 'இளிச்சவாய்' அறிமுகத்தோட அந்தச் சலூனுக்குள்ள அடியெடுத்து வைச்ச குருமன்,எங்கட்ட 'பங்'கேதான்!

'பங்'தான் ஊரிலயே முட்டாள் பெடியன் எண்டு அங்கயிருந்தாக்களுக்குக் காட்டுறத வழக்கமாக் கொண்டிருக்கிறவன் சலூன்காரன். அண்டைக்கும் விளையாட்டை ஆரம்பிச்சான். வழக்கம் போல லாச்சிக்குள்ள இருந்து 50ரூபாத் தாள், 20 ரூபாத் தாள் இரண்டையும் எடுத்து வைச்சிட்டுச் சொன்னான்.

'எடேய் பெடியா, இந்த ரண்டில உனக்கு விரும்பின எதையெண்டாலும் ஒண்டை நீ எடுக்கலாம்!'

'பங்' சட்டென்று பாய்ஞ்சு 20 ரூபாத் தாளை எடுத்துக் கொண்டு இளிச்சான்.

பதிலுக்குச் சலூன்காரன் விழுந்து விழுந்து சிரிச்சான்; கண்சாடை காட்டினான்; அங்க இருந்த ஆக்களும் சிரிச்சிச்சினம்.

சாலூனில எடுத்த 20 ரூபாவுக்கு பங் ஒரு ஐஸ்கிறீம் கோன் வாங்கிக் குடிச்சுக் கொண்டு நிக்க.

ஒரு மனுசன் கிட்ட வந்து கேட்டிச்சு.

'ஏண்டா மோனே, நான் உன்னைச் சலூனில கண்டனான். நீ கங்காணியாரின்ட பெடிதானே, உனக்கு காசுக் கணக்குகள் தெரியாதே... ஏன்டா இப்பிடி மொக்கீனப் படுறா?"

'பங்' ஐஸ்கிறீமைக் குடிச்சபடியே சிரிச்சான்; கண்ணடிச்சான்.

'ஹி ஹி... உங்களுக்கும் விளங்கேல்ல... நான் எண்டைக்கு அதில அம்பது ரூவாவ எடுக்கிறனோ... அண்டையோட ஆட்டம் முடிஞ்சிடுமெல்லே.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திர வேட்கை

அடேல் பாலசிங்கம்



விடுதலைப் போராட்டம் 27

ஆனாலும் போராட்டத்தில் நான் பங்கெடுப்பதனால், அதைக் கற்றாக வேண்டும் என்பதை உணர்ந்தேன். இலக்கைக் குறி வைத்தேன். ஆறுக்கு ஒன்றாவது இலக்குத் தைத்தது. அதன் பின் தானியங்கித் துப்பாக்கிப் பயிற்சி. அது ஒரு அச்சம் தரும் அனுபவம். அது வேகமாக எகிறும் போது ஆயுதத்தைக் கீழே விழுத்தப் பார்த்தன். ஆயுதத்தைப் பயன்படுத்தவதில் சிரமம் இல்லை. ஆனால் ஒரு தானியங்கித் துப்பாக்கியைக் கையாண்டவர்களுக்கு அது ஏற்படுத்தக் கூடிய சேதத்தின் விளைவு புரியும். ஆயுதம் சிறிதோ பெரிதோ, அதன் விளைவு உயிர் அழிவே. இந்தப் பயிற்சியின் போது ஆயுதத்துக்கு மதிப்பு அளிக்கக் கற்றுக் கொண்டேன்.

அதே சமயம் சில நிமிடப் பயிற்சிக்கே எவ்வளவு செலவாகிறது என்பதையும் புரிந்து கொண்டேன். இவற்றுக்கெல்லாம் நான் அருகதை உடையவள் ஆனேன் என்பதை உணரும் போது உள்ளூரப் பெருமையாக இருந்தது. நான் எடுத்த எடுப்பில் சுட்டுப்பயின்ற ஆறு சுற்றிலும், அதற்குப் பயன்படுத்தப்பட்ட அந்த ஒவ்வொரு ரவையின் பெறுமதியும் ரூ.25 ஆகும். இனித் தொடக்க நாள்களில் துப்பாக்கி ரவை வாங்குவதே மிகக் கடினம். இயக்கம் தொடங்கிய காலத்தில் விடுதலைப் போராளிகளுக்குத் துப்பாக்கிப் பயிற்சி வாரத்தில் ஒரு சுற்று அல்லது இரண்டு சுற்று மட்டுமே கிடைக்கும். ஒரு சாதாரண கைத்துப்பாக்கி புதிதாகக் கிடைத்தால் அதுவே கொண்டாட்டம் ஆகி விடும்.

நாள் ஏற ஏற இந்தப் பயிற்சிலும் அதிகம் கட்டுப் பாடுகள் வந்தன. ரவைகள் அருந்தலாகவே கிடைக்கும். ஆகவே இலக்குப் பயிற்சியின் போது , ஒவ்வொரு தடவையும் கூடிய கவனம் எடுத்து இலக்குத் தைப்பதில், போராளிகள் குறியாக இருந்தார்கள். துப்பாக்கித் ரவைத் தட்டுப்பாடு அடிக்கடி தொடர்ந்தும் ஏற்பட்டது. ஆயுதங்களையும் துப்பாக்கி ரவைகளையும் பெறுவதில் இடர்பாடு அதிகரித்தது. இதன் விளைவாக அவற்றின் அருமையைப் புரிந்து கொண்டவர்களாக, போராளிகள் பொறுப்புணர்வோடு நடந்து கொண்டார்கள். ஆயுதங்களின் பெறுமதி உணர் ந்த பொறுப்புணர்வு, விடுதலைப் புலிப் போராளிகளின் மனதில் இன்றும் அவர்களுடைய மரபாகச் செதுக்கப் பட்டிருக்கின்றது.

ஆண்டுகள் செல்லச் செல்ல ஆயுதங்கள் மட்டில் போராளிகள் கொண்ட மதிப்பும் பற்றுதலும் அதிகரித்து வந்திருக்கிறது. தங்கள் போராட்டத்தை விரிவு படுத்துவதற்காக போர்க்களத்தில் ஆயுதங்களைச் சேகரிக்கும் பணியில் பல போராளிகள் தங்கள் உயிர்களை அரிப்பணித்திருப்பதும், ஆயுதங் கள் மட்டில் அவர்கள் கொண்டிருக்கும்; மதிப்பை உறுதிப்படுத்து கின்றது. அன்றும் சரி, இன்றும் சரி போராட்டம், மக்களின் விடுதலை ஆகியவற்றுடன் ஆயுதம் பின்னிப் பிணைந்திருக் கின்றது. பிரபாகரனைப் பொறுத்த வரையில் துப்பாக்கிகளில் அவருக்கு நாட்டம் உண்டு; குறி வைப்பதிலும் அவர் ஒரு புலி; ஆயுதங்களின் உயிர் போக்கும் ஆற்றலை முழுமையாக உணர்ந்தவர்; ஆகவே அவற்றைக் கையாளும் போது ஒழுங்கு முறையும் கட்டுப்பாடும் கடைப் பிடிக்கப்பட வேண்டும் என்பதை போராளிகள் மனதில் ஆழமாகப் பதித்திருக்கி றார்.

(பதிவு தொடரும்)




**மேஷம்**

**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

**எதிர்கால நலனை கவனத்தில் வைத்து செயல்படும், மேஷ ராசிக்காரர்களே!**

உங்கள் ராசிநாதன் செவ்வாய் ஆறாம் இடத்திலும், புகழ் ஸ்தான அதிபதி புதன் பதினொராம் இடத்திலும் அனுகூல சஷ்டாஷ்டக அமர்வில் உள்ளனர். மனம், செயலில் புத்துணர்வு ஏற்படும். உழைப்பதில் அதிக ஆர்வம் கொள்வீர்கள். புத்திரர் வெளியிடம் சுற்றுவதை குறைத்திட, இதமான அறிவுரை சொல்வீர்கள். இல்லறத்துணையின் நம்பிக்கைக்கு குறை வராத அளவில் நடந்து கொள்ள வேண்டும். தொழில்,

**ரிஷபம்**

**கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்**

**பிறர் நலன் சிறக்க மனம் உவந்து உதவும், ரிஷப ராசிக்காரர்களே!**

உங்கள் ராசிநாதன் சுக்கிரனும். நவகிரகங்களில் செவ்வாய், கேது தவிர, மற்ற கிரகங்களும் அளப்பரிய வகையில், நற்பலன் வழங்குகின்றனர். குடும்பத்தில் மங்கள நிகழ்ச்சி நடத்த அனுகூலம் உண்டு. தாய்வழி உறவினர் விரும்பி சொந்தம் பாராட்டுவர். புத்திரரின் மன சஞ்சலம் விலக, தேவையான பணிகளை மேற்கொள்வீர்கள். உடல்நல

**மிதுனம்**

**மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

**சந்தோஷ நிகழ்வுகளை பொக்கிஷமாக கருதும் மிதுன ராசிக்காரர்களே!**

உங்கள் ராசிக்கு எட்டாம் இடத்தில் உள்ள சுக்கிரன், பத்தாம் இடத்தில் உள்ள சூரியன் நற்பலன் தருகின்றனர். வீடு, வாகனத்தில் கூடுதல் பாதுகாப்பு பின்பற்ற வேண்டும். புத்திரரின் சேர்க்கை சகவாசம் அறிந்து, நல்வழியில் நடைபோட உதவுவீர்கள். உடல் நலத்திற்கு, ஒவ்வாத வகையிலான உணவு உண்பதை தவிர்க்கவும். இல்லறத்துணையின்

**கடகம்**

**புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

**உலக விஷயங்களை அறிவதில் ஆர்வமுள்ள, கடக ராசிக்காரர்களே!**

புகழ் ஸ்தானமாகிய மூன்றாம் இடத்தில், தொழில் ஸ்தான அதிபதி செவ்வாய் அனுகூலமாக உள்ளார். எட்டாம் இடத்தில் புதன், செவ்வாய்க்கு அனுகூல சஷ்டாஷ்டக அமர்வில் உள்ளார். உடன்பிறந்தவர்களின் உதவியால் மகிழ்ச்சி அடைவீர்கள். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். புத்திரர் விரும்பிய பொருள் அதிக தரத்தில் வாங்கித்தருவீர்கள். உடல் நலத்திற்கு, சிறு அளவில் மருத்துவ சிகிச்சை தேவைப்படும். இல்லறத்துணையின் கவனக்குறைவான

**சிம்மம்**

**மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்**

**வாழ்வில் முன்னேற, வரும் வாய்ப்பை பயன்படுத்தும் சிம்மராசிக்காரர்களே!**

உங்கள் ராசிக்கு மூன்றாம் இடத்தில் உள்ள சனி, ராகு, லாப ஸ்தானத்தில் உள்ள குரு, அதிக நற்பலன் தருகின்றனர். பிறரிடம் பேசுவதில், நிதானம் பின்பற்றி, சமூகத்தில் பெற்ற நற்பெயரை பாதுகாத்திடுவீர்கள். புதியவர்களின் அறிமுகம், உதவி கிடைக்கும். வெளியூர் பயணத்தில், உரிய பாதுகாப்பு நடைமுறை பின்பற்ற வேண்டும். புத்திரரின் அறிவாற்றல்

**கன்னி**

**உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம் 1, 2 ஆம் பாதங்கள்**

**வாழ்வில் ஆடம்பரம், அளவுடன் பயன்படுத்தும் கன்னி ராசிக்காரர்களே!**

உங்கள் ராசிநாதனும், பத்தாம் இட அதிபதியுமாகிய புதன், ஆறாம் இட அமர்வில் அனுகூலமாக உள்ளார். அசுர குருவாகிய சுக்கிரன், ஐந்தாம் இடத்தில் பூர்வபுண்ணிய பலம் பெற்றுத்தரும் வகையில் உள்ளார். இளைய சகோதரர் ஓரளவு உதவுவர். வீடு, வாகன பராமரிப்பு பணச்செலவு அதிகரிக்கும். மகளின் ஜாதகயோக பலன் சிறப்பாக அமைந்து, புதிய நன்மை பெற்றுத்தரும். வழக்கு, விவகாரத்தில் அனுகூலத்தீர்வு கிடைக்கும். இல்லறத்துணை கூடுதல் அன்பு,

**துலாம்**

**சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

**நீதி, நேர்மை குணம் தவறாமல் வாழ்ந்திடும், துலாம் ராசிக்காரர்களே!**

உங்கள் ராசிக்கு சுக்கிரன், சூரியன், குருபகவானின் அமர்வு, அளப்பரிய நற்பலன் வழங்கும் வகையில் உள்ளது. நல்ல விஷயங்களை, நண்பரிடம் ஆர்வமுடன் பேசுவீர்கள். தகுதி, திறமையை பயன்படுத்தி, வாழ்வில் முன்னேற இஷ்டதெய்வ அனுகிரகம் பலமாக துணைநிற்கும். ஊட்டச்சத்து நிறைந்த உணவுகளை, விருப்பமுடன் உண்டு

**விருச்சிகம்**

**விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

**நல்ல கருத்துக்கு, முக்கியத்துவம் தருகின்ற விருச்சிக ராசிக்காரர்களே!**

உங்கள் ராசிக்கு சுக்கிரன், புதன், கேது, செவ்வாயின் அனுகூல பலன், சிறப்பான அளவில் கிடைக்கிறது. எந்த செயலிலும் நிதானம் பின்பற்றி, ஆதாய பலன் எளிதில் அடைவீர்கள். அக்கம், பக்கத்தவரிடம் நட்பு வளரும். வாகனபயணம் எளிதாகும். உறவினர் வருகையால், வீட்டில் மகிழ்ச்சி வளரும். இல்லறத்துணை, உங்கள் வாழ்வியல் நடைமுறை சிறக்க, உறுதுணையாக செயல்படுவார். பணியாளர்கள், தொழில்நுட்ப அறிவை வளர்த்து, பணியில் சாதனை நிகழ்த்துவர். குடும்ப பெண்கள், கணவர் வழிசார்ந்த உறவினர்களை பண்புடன் உபசரிப்பர்.

**தனுசு**

**மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்**

**மனதில் சிந்தனைத் தெளிவுடன் பணிபுரியும், தனுசு ராசிக்காரர்களே!**

உங்கள் ராசிக்கு இரண்டில் சுக்கிரன், சப்தமஸ்தானத்தில் குரு, ஆதாயத்தில் சனி, ராகு சிறப்பாக உள்ளனர். பேசுகிற வார்த்தை இனிதாக அமைந்து, பழகுகிறவர்களிடம் கூடுதல் நன்மதிப்பை பெற்றுத் தரும். உங்களை அவமானப்படுத்த உரிய நேரம் எதிர்பார்த்து காத்திருப்பவரும், விலகுகிற புதிய சூழ்நிலை உருவாகும். . இல்லறத்துணை, உங்களின்

**மகரம்**

**உத்தராடம் 2, 3, 4ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்**

**மனதில் கருணையும், செயலில் பொறுமையும் நிறைந்த, கும்ப ராசிக்காரர்களே!**

உங்கள் ராசிக்கு சுக்கிரன், புதன், கேது, செவ்வாயின் அனுகூல பலன், சிறப்பான அளவில் கிடைக்கிறது. எந்த செயலிலும் நிதானம் பின்பற்றி, ஆதாய பலன் எளிதில் அடைவீர்கள். அக்கம், பக்கத்தவரிடம் நட்பு வளரும். வாகனபயணம் எளிதாகும். உறவினர் வருகையால், புத்திரரின் உடல்நலம் ஆரோக்கியம் பெற, மருத்துவ சிகிச்சை உதவும். இல்லறத்துணை, உங்கள் வாழ்வியல் நடைமுறை சிறக்க, உறுதுணையாக செயல்படுவார். தொழில், வியாபாரத்தில் உருவாகிற சாதகமான தன்மையை நழுவ விடாமல் பயன்படுத்துவீர்கள்.

**கும்பம்**

**அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம் 1, 2, 3ஆம் பாதங்கள்**

உங்கள ராசிக்கு மூன்றில் கேது, ஐந்தில் குரு, பன்னிரெண்டில் சுக்கிரன் அனுகூலமாக உள்ளனர். உறவினர், நண்பரின் எண்ணங்களுக்கு மாறாக, எதுவும் பேச வேண்டாம். குடும்பத் தேவை நிறைவேற்ற பணச்செலவு அதிகரிக்கும். சேமிப்பு பணம் குறைவதும், புதிய கடன் பெறுவதுமான நிலைமை சிலருக்கு ஏற்படலாம். இஷ்ட தெய்வ வழிபாடு, மனதில் அமைதி நிலவ உதவும். வெளியூரிலிருந்து எதிர்பார்த்த சுபசெய்தி வந்து சேரும். புத்திரர், தமக்கு

**மீனம்**

**பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

**மனதில் கருணையும், செயலில் பொறுமையும் நிறைந்த, கும்ப ராசிக்காரர்களே!**

உங்கள் ராசிக்கு ஆதாய ஸ்தானத்தில் உள்ள, சுக்கிரன் மற்றும் தினகதி சுழற்சி கிரகம் சந்திரன் மட்டுமே நற்பலன் வழங்குகின்றனர். இதனால், ஒவ்வொரு செயலிலும், முன்யோசனை மற்றும் நிதானம் பின்பற்ற வேண்டும். உடல்நலத்தை பேணுவதால் மட்டுமே, பணிகளை, உரிய காலத்தில் நிறைவேற்ற இயலும். உடன்பிறந்தவர் [illegible] உதவி, மனதில் நம்பிக்கை தரும். வீடு, வாகனம் பாதுகாப்பில் கூடுதல் கவனம் பின்பற்றவும். [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுகதைகளும் விடையும்




**01.** தொட்டுப் பார்க்கலாம். எட்டிப் பார்க்கமுடியாது. அது என்ன?
-முதுகு-

**02.** மாமா போட்ட பந்தல். மறுபடி பிரிச்சாச் சுந்தல் அது என்ன?
-சிலந்தி வலை-

**03.** முறையின்றித் தொட்டால்,ஒட்டிக் கொண்டு உயிரை எடுப்பான். அவன் யார்?
-மின்சாரம்-

**04.** நூல் நூற்கும் நெசவாளிக்கு கட்டிக்கொள்ள துணியில்லை. அது என்ன?
-சிலந்திவலை-

**05.** நடக்கவும் மாட்டேன், நகராமல் இருக்கவும் மாட்டேன் நான் யார்?
-மணிக்கூடு-

## ஆனைக்குட்டி

யானை யானை
அழகர் யானை
அழகரும் சொக்கரும்
ஏறும் யானை
கட்டிக்கரும்பை
முறிக்கும் யானை
காவேரி தண்ணீரை
கலக்கும் யானை
குட்டியானைக்குக்
கொம்பு முளைச்சுதாம்
பட்டணமெல்லாம்
பறந்தோடிப் போச்சுதாம்!



## குரங்கு அறிஞர் !




**ஒரு** அறிஞர் ஆராய்ச்சி நூல் ஒன்று எழுதுவதற்காக அமைதியான இடத்தைத் தேடிக் கொண்டிருந்தார். அவர் அறியாமல், அரக்கர்கள் இருந்த பள்ளத்தாக்கை தன் இடமாகத் தேர்ந்தெடுத்தார். கோபமடைந்த ஒரு அரக்கன் அவரைப் பார்த்துக் கேட்டான்.

"யார் நீ? இந்த அமைதியான பள்ளத் தாக்கை கெடுக்க வந்தாயா?" என்றான்."தயவு செய்து என்னை மன்னித்து விடு. நான் ஒரு அறிஞன். அமைதியான இடத்தைத் தேடிக் கொண்டிருந்தேன். அதனால், இங்கு வந் தேன்"! என்றார்.ஒரு விலை நீ கொடுக்க வேண்டும். நான் உன்னைக் குரங்காக மாற்றி விடுவேன். அதுதான் உனக்குத் தண்டனை! என்று அந்த அரக்கன் கூறினான்.

அடுத்த கணம், அந்தக் அறிஞர் குரங்காக மாறிவிட்டார். அவர் விம்மி விம்மி அழுதார். ஒரு மரத்திலிருந்து மற்றொரு மரத்திற்குத் தாவிக் கொண்டிருந்தார். குரங்குகளைப் போல் பழங்களைத் தின்று வந்தார்.

அவர் நகரத்தை அடைந்தார். அங்கு ஒரு கப்பல்பாக்தாத்பட்டணத்திற்குப்புறப்பட இருந்தது. அவர் அதில் தாவி ஏறினார். அதிலிருந்த பயணிகள் கூச்சலிட ஆரம்பித்தனர்.

"குரங்கை வெளியே அனுப்புங்கள்; கொன்று விடுங்கள்"! என்று கத்தினர்.கப்பலின் தலைவன் அந்த விலங்கிற்காக வருத்தப்பட்டுச் சொன்னார்.

"வேண்டாம். அதுவும் நம்முடன் வரட்டும். யாருக்கும் அது தொந்தரவு தராதவாறு நான் பார்த்துக் கொள்கிறேன்"!அந்தக் குரங்கு கப்பல் தலைவனுக்கு நன்றி உடையவனாக இருந்தது. பாக்தாத்தில் ஒரு செய்திபரவிஇருந்தது. அரசருக்கு ஆலோசனை கூறுபவர் இறந்து விட்ட தாகவும், அரசர் அந்த இடத்திற்குத்தகுந்தஆளைத் தேர்ந்தெடுக்கவிரும்புவதாகவும்அறிவித்தி ருந்தார். இந்தப்பதவியை விரும்புவோர் ஏதேனும் ஒரு செய்தியைத்தகுந்தமுறையில்எழுதிஅனுப்பலாம். அவற்றுள் எது மிகவும் நன்றாக உள்ளதோ, அதை எழுதியவர் ஆலோ சகராகத் தேர்ந்தெடுக் கப் படுவார் என்றும் அறிவிக்கப்பட்டது.

அந்தக் குரங்கு அறிஞரும் செய்தியை எழுதினார். அரசருடைய சேவகர்களும், மற்றவர்களும் நகைத்தனர். இங்கே வேடிக்கை யைப் பார். இந்தக் குரங்கு அரசருக்கு ஆலோசக ராகப் போகிறதாம்! என்று கேலி செய்தனர். ஆனால், எல்லாச் செய்திகளும் அரசரிடம் எடுத்துச் செல்லப்பட்டன. அரசர் எல்லா வற்றை யும் படித்தார். அந்தக் குரங்கின் செய்தி மிகவும் நன்றாக இருந்தது.

அந்தக் குரங்கை நேர்முகத் தேர்விற்காக அரசர் வரச் சொன்னார். அக்குரங்கு நல்ல கம்பீரமாக உடை யணிந்து குதிரைமேல் ஏறி, பாக்தாத் தெருக்களில் ஊர்வலமாக வந்து அரசரைச் சந்தித்தது. அரசவையில் அதனிடம் நிறைய கேள்விகள் கேட்கப்பட்டன. அது எல்லாக் கேள்விகளுக்கும் அறிவுப்பூர்வமான சரியான விடைகளைக் கூறியது. அரசருக்கு அதை மிகவும் பிடித்து விட்டது. ஆனால், மந்திரிகள் தடுத்தனர்.எப்போதும் அதனால் பேச முடியாது. எப்படி ஒரு குரங்கு தலைமை ஆலோசகர் ஆக முடி யும்? என்றனர்.

அரசர் தீர்மானமாக இருந்ததால் அவர் குரங்கையே தலைமை ஆலோசகராக நியமித்தார். அவருடையபுதல்வி, இளவரசிஇந்தக்குரங்குஉண் மையில் குரங்கு அன்று. ஏதோ அரக்கர்களின் மாயத்தால்இவ்வாறு மாற்றப்பட்டுள்ளது என்பதை அறிந்தாள். அரக்கர்கள், அவர்களின் மந்திர வித்தை கள் போன்றவற்றை அவள் படித்துள்ளாள். அந்த மந்திரத்தால்குரங்குத்தன்மைமாறும்படிசெய்தாள். அறிஞர் தன் பழைய நிலையை அடைந்தார்.

அவர் இளவரசிக்கு நன்றி கூறினார். பல ஆண்டுகள் அங்குத் தங்கி நன்றியறிதலோடு அரசருக்குத் தகுந்த ஆலோசனைகளை வழங்கினார்.

# மாயத் தீவில்

## மந்திரக் கிழவி




சிறுவர் மர்மத் தொடர்

ஏற்கனவே அந்த இளம் பச்சை நிறப் புகையைச் சுவாசித்ததால் தாம் சுயநினைவிழந்து மந்திரக் கிழவியின் சொற்படி செயற்பட்ட சம்பவங்கள் இந்திர வர்மனினதும் சந்திரவர்மனினதும் மனதில் தோன்றி நிழலாடின.எனவே மீண்டும் கிழவியின் பிடிக்குள் சிக்கிவிட அவர்கள் விரும்பவில்லை. "எல்லோரும் மூச்சை நன்றாக இழுத்துப்பிடித்து வைத்திருங்கள். எவரும் எம்மை நெருங்கிவரும் இளம்பச்சைப் புகையைச் சுவாசிக்க வேண்டாம்" என்று இந்திர வர்மன் எல்லோருக்கும் கட்டளையிட்டான். அவன் சொற் படியே சந்திரவர்மன் மணிமொழி உள்ளிட்ட அனைவரும் மூச்சை நன்றாக உள்ளிழுத்து சுவாசிப்பதை நிறுத்தி னான். இளம்பச்சை நிறப் புகை அரச வம்சத்து வாரிசுகள் எல்லோரையும் சூழ்ந்து கொண்டது. அவர்களுக்கு மூச்சை நீண்ட நேரம் அடக்கி வைத்திருப்பது இயலாததாக இருந்தது. வேறு வழியின்றிச் சுவாசிக்க முனைகையில் அவர் கள் ஒவ்வொருவராக மந்திரக்கிழவியின் சொற்படி கேட்டு நடக்கும் பொம்மைகளாக மாறத் தொடங்கினர்.

இறுதியில் சந்திரவர்மனும் இந்திரவர்மனும் கூட இளம் பச்சை நிறப்புகைக்கு பணிந்து மீண்டும் மாயக் கிழவியின் சொற் கேட்டு நடக்கலாயினர். "சிறு பயல் களே! என்னிடமா வாலாட்டினீர்கள்! எல்லோரும் விரைந்து சென்று பலிபீடத்தில் உங்கள் கழுத்தை அழுத்தி வையுங்கள். உங்கள் எல்லோரையும் பலி கொடுத்து என்றும் இளமையோடு இருக்கும் சிரஞ்சீவி வரத்தை இன்னும் சில நொடிகளில் நான் அடையப் போகிறேன். அதை யாராலும் தடுக்க முடியாது" என்று கூறினாள் மந்திரக்கிழவி. அவள் சொல்லுக்கு கட்டுண்டு இயந் திரங்கள் போல பலிபீடத்தை நோக்கி ஆயிரத்தி யொரு அரசகுமாரர்களும் நகரத் தொடங்கினர். தான் மீண்டும் இளமையாவது பற்றிய கனவுகளில் மந்திரக்கிழவி மூழ்கத் தொடங்கினாள்.

(மந்திரக் கிழவி வருவாள்...)

# தெரிந்து கொள்வோம்

**01.** உலக இரத்த தான தினமாக கருதப்படும் நாள் எது?
ஒக்டோபர் 1.

**02.** மோப்ப சக்தியால் இரை தேடும் பறவை இனம் எது?
கிவி.

**03.** போலியோ நோய் எதனால் ஏற்படுகிறது?
வைரஸ்.

**04.** அகசிவப்பு கதிர்களை எது அதிகமாக ஈர்க்கும்?
தண்ணீர்.

**05.** இந்திய தேசிய நாட்காட்டியின் படி புத்தாண்டு எப்பொழுது தொடங்குகிறது?
மார்ச் 21.

**06.** உணவை எடுப்பான். ஆனால் உண்ணமாட்டான். அவன் யார்?
அகப்பை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொப்பி அளவென்றால்...

தமிழர்கள் மத்தியில் மறுமணக் கலாசாரம் வெகு தீவிரமாக பரவி வருகின்றமையை பக்கத்து வீட்டு செய்திகளும் முன்வீட்டு முனகல்களும் தினமும் சொல்லிக்கொண்டுதான் இருக்கின்றன. வரவேற்கலாம். முன்னைய காலங்களில் மறுமணம் என்பது பெருங்குற்றமாகவும் கலாசாரத்துக்கு இழுக்கானதாகவும் பார்க்கப்பட்டு பெண்கள் அடக்கிவைக்கப்பட்டிருந்தனர். ஆண்களுக்கான எழுதப்படாத சட்டம் இதற்கு விதிவிலக்காக இருந்தமையும் குறிப்பிடத்தக்கது. கணவன் இழந்த பெண்ணொருத்தியின் எல்லா உணர்ச்சிகளும் அவனோடு உடன்கட்டையில் ஏற்றப்பட்டன. இதற்கு எதிராகக் குரல்கொடுக்கும் தைரியமற்றவர்களாகப் பெண்கள் ஒடுக்கப்பட்டிருந்தனர். பின்னர் இந்தவழக்கம் மாறி சாதாரண நிலைக்கு வந்தது.

கணவனை இழந்த பெண் அல்லது ஆண் மறுமணபந்தத்தில் இணைந்தனர். காலப்போக்கில் விவாகரத்து பெற்றவர்களும் மறுமண பந்தத்தில் இணைந்தனர். ஆனால் இன்று மனைவியோடு குடும்பம் நடத்திக்கொண்டே மறுமணத்துக்குத் தம்மைத் தயாராக்கும் ஆண்களின் தொகையே அதிகரித்துள்ளது.

## போருக்குப் பின் மாறிய பெண்களின் இயல்பு



**போ**ருக்குப் பின் மறுமணம் பற்றிய குண வியல்பு பெண்களையும் பற்றிக்கொண்டுள்ளது. இது எமது பாரம்பரியத்துக்கு முரணானது என்ற எண்ணக்கரு மாறி நவீன திருமண தர்மமாகவும் மாறி வருகின்றது. இதனைப்பார்க்கும் போது கல்யாணம் ஆயிரம் கால பந்தம் என்பவர்களையும் ஒருவனுக்கு ஒருத்தி என்ற கோட்பாட்டை பின்பற்றியோரையும் வெளியுலகுக்கு இந்தக்கருத்துக்களை பறை சாற்றுவோரையும் நினைக்கையில் வருத்தமாகவே உள்ளது.


நாம் மேற்கத்தைய கலாசாரத்தை பின்பற்றுகிறோம் என்போரை வாய்கழுவச் சொல்லுங்கள். இவ்வளவு கேவலமாகவா வெள்ளையன் நடந்து கொள்கிறான். வேடுவர் காலத்தில் கூட இந்த இழிநிலை இருந்திருக்காது. எந்த வெள்ளையன் விவாகரத்து பெறாமல் 2ஆம் 3ஆம் 4ஆம் தாரங்கள் என்று மணந்து செல்கிறான்?அவனது எந்தச்சட்டம் இதற்கு அனுமதியளித்திருக்கின்றது? எந்த வெள்ளையன் தான்பெற்ற பிள்ளைகளுக்கு எவ்வித பாதுகாப்பும் அளிக்காமல் தெருவில் தவிக்க விட்டான் ? இந்தக் கேள்விகளுக்கு இன்று நிச்சயமாக எம்மவர்களால் பதிலளிக்க முடியாது.

இன்று இந்த ஒன்றுக்கு மேற்பட திருமணம் செய்யும் பிரச்சினை வடக்கு மாகாணத்தில் ஓங்கி இருப்பதோடு இதற்கு எவ்வித நடவடிக்கைகளும் யாராலும் எடுக்கப்படவில்லை. இளவயதில் போரின்பிடியிலிருந்து தப்புவதற்கு மணம் முடித்தோர், போரின் முடிவைப் போலவே தமது திருமண பந்தத்தையும் முறித்துக்கொள்கின்றனர். இதில் முக்கிய விடயம் என்னவெனில் இவர்கள் யாவரும் இளவயதினரே. இன்று பிள்ளைகளைத் தத்தளித்து விட்டுவிட்டு இவர்கள் தமது அடுத்த புதிய துணைகளைத் தேடிச்செல்கின்றனர். முன்னைய காலங்களில் ஆண்கள் விட்ட தவறுகள் இன்று பெண்களாலும் சரி நிகராக விடப்படுகின்றன. ஓ.. இது தான் ஆண்-பெண் சமத்துவமோ?

## அடங்கியிருந்தவை ஆடுகினம்

**அ**ந்தக்காலத்தில் பெண்கள் தாலி அணிவதும் ஆண்கள் மெட்டி அணிவதும் திருமணமானதற்கான அடையாளம் என்று சொல்வார்கள். ஆனால் இன்று இவை எவற்றுக்கும் மரியாதை இருப்பதாகத் தெரியவில்லை. இந்த கொடுமைகளை பொறுக்காதவர்கள் வழமையைப் போல அவங்கள் இருக்கேக்க அடக்கிக்கொண்டு இருந்தவை இப்ப ஆடுகினம் என்று தமக்குத்தானே சலித்துக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

மறுமணம் எதற்காக? தனக்கு ஒரு வாழ்க்கைத்துணையும் தன் பிள்ளைகளுக்கு பாதுகாப்பான உறவுக்குமானது தானே. எமது பண்பாட்டில் தாய்மைக்கு தனியிடம் இருந்தது. மேற்கத்தைய தாய்- சேய் உறவுக்கும் எமக்கும் பெரும் வித்தியாசம் காணப்பட்டது. அப்படியிருந்த நிலை மாறி தன் இரண்டாவது கணவனின் பிள்ளைகளைப் பார்ப்பதற்காக சொந்தப் பிள்ளைகளைத் தெருவில் விடும் கலாசாரம் என்ன என்றுதான் புரியவில்லை. இதைவிடக்கொடுமை, இருவரது பிள்ளைகளும் தெருவில் நிற்க புதிதாக பிள்ளைகளைப் பெற்றெடுப்பது. மனிதனுக்கும் மிருகங்களுக்கும் இருக்கும் இடைவெளிதான் என்ன? இதனைத் திருமணம் என்று கட்டாயம் சொல்லித்தான் ஆகவேண்டுமா? ஆணும் பெண்ணும் பிள்ளை பெற்றுக் கொள்வது தானா திருமணம்? பொறுப்புக்களை தட்டிக்கழித்துவிட்டு தப்பித்துச் செல்லலாமா? போரின் போது எம்குலப் பெண்களின் தாய்மை உணர்வுமா அழிக்கப்பட்டுவிட்டது ? இதற்கு எந்தச் சிங்களத்தைக் குறைகூறுவது? வளர்ந்த பெண்பிள்ளைகளை வைத்துக்கொண்டு 2ஆவது



மணம் முடிக்கும் தாய்மாரே,உங்கள் பிள்ளையின் புதிய தந்தை எவ்வளவு பாதுகாப்பானவர் என்று தெரிந்துகொண்டா மணந்தீர்கள்?

### பிள்ளைக்கு தெரியாமல் திருமணம்

எத்தனை பெண்கள் அல்லது ஆண்கள் நீங்கள் இரண்டாவதாக மணப்பவருடன் திருமணத்திற்கு முன்னதாக உங்கள் முதல் தாரத்து பிள்ளைகளின் எதிர் காலம் பற்றி கலந்தாலோசித்திருக்கிறீர்கள்? அவர் உங்கள் பிள்ளைகளை தன் பிள்ளைகளாக ஏற்கும் பட்சத்திலும் பிள்ளைகள் அவரை தந்தையாக ஏற்கும் பட்சத்திலும்தான் உங்கள் வாழ்க்கை அவரோடு அமையும் என்பதை எத்தனை பேர் வலியுறுத்திக் கூறியிருக்கிறீர்கள்? ஒரு சில குடும்பங்களில் மட்டுமே இவ்வாறு இன்று நிகழ்வதை அவதானிக்க முடிகிறது. ஏனையோர் இப்பொழுதுதான் பதின்ம வயதினர் போல -பிள்ளைகளுக்கு தெரியாமல் பெற்றோர் - ஓடிச்சென்று திருமணம் முடிக்கும் செய்திகளே நம்மை அடைகின்றன. முன்பெல்லாம் பெற்றோருக்குத் தெரியாமல் பிள்ளைகள்தான் ஓடிச்சென்று மணம் முடித் தார்கள். இன்று அது தலை கீழாகிவிட்டது.

மயிர் நீப்பின் வாழாக் கவரிமா போன்றவர்கள் தமிழர்கள் என்பதெல்லாம் 2009 உடன் பறந்து போனதோ? வடமாகாணத்தில் இப்போது பல இடங்களில் இள வயதுத் திருமணங்கள் பெருகிவருகின்றன. இந்த வயதினரில் பெரும்பாலானோர் போரின் வெம்மையை உணராதவர்கள். இதனாலோ என்னவோ இவர்கள் இன்றும் த[illegible] வாழ்க்கையைச் சீர்ப்படுத்த முடியாமலும் ஏனைய சமூகத்தினரால் ஒதுக்கிவைக்கப்பட்டும் உள்ளனர். இவர்களது உலகம் இதுதான். இவர்களது மண வாழ்வும் மிக விரைவிலேயே அறுந்து போகிறது. இவர்களது பிள்ளைகளும் இதனையே தான் செய்கின்றனர். வாழ்க்கை என்பதை அவர்கள் புரிந்து கொண்டுள்ள விதம் வித்தியாசமானது.. இவற்றை திருத்திக் கொள்ளுமாறு சொல்லும் அக்கறை எந்த அரச அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் இதுவரை வந்ததில்லை.

அதைவிடவும் மறுமணங்கள் பதிவுக்கு அப்பாற்பட்டதாகவே அனேகரிடம் காணப்படுகின்றன. அப்படியென்றால் ஒன்றாயிருத்தல் தானே? பிடிக்கும் வரை சேர்ந்திருப்பது பின்பு விலகுவது. இந்தக் கலாசாரத்தை தத்தெடுத்துக்கொண்ட எம்மவர்கள் நாகரிகமான பழக்கவழக்கங்களையும் தத்தெடுத்திருக்கலாம். பெண்ணைக் கைவிட்டுச் சென்ற ஆண்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படும் போது படிப்பணம் கொடுப்பதற்கு சட்டம் வலியுறுத்துகிறது. ஆனால் அவை சரியாக வழங்காவிடின் எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படுவதில்லை. அநேகமான பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் வறுமையால் வாடுகின்றன எம்கண்முன்னே.

### மானம் பறந்து போனதோ?

இந்தப்பத்தியினை வாசித்து யாரும் திருந்தப் போவதில்லை என்பதும் உண்மைதான். யாரும் சாதாரண வார்த்தைகளுக்கு திருந்தும் நிலைப்பாட்டிலும் இல்லை. அந்தக் கட்டத்தை தமிழர்கள் தாண்டி சில வருடங்கள் ஆகிவிட்டன. ஆயினும் ஒரு நப்பாசை எஞ்சிக்கிடக்கவே செய்கிறது. எடுத்துச்சொல்ல மீட்பர்கள் தான் வரவேண்டும் என்றில்லையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கினி புத்திரன்



# சுயநிர்ணயம்; கிரிமியாவும் ஈழமும்

சர்வதேச அரங்கில் இன்று ஊடகங்களின் தலைப்புக்களை உக்ரேன், கிரிமியா என்ற பெயர்கள் பெருமளவில் நிரப்பி வருகின்றன.

உக்ரேனின் முன்னாள் அதிபர் ஜனுக் கோவிச் ஐரோப்பிய ஒன்றியத்துடன் அந்நாடு இணையும் முடிவை மாற்றி ரஷ்யாவுடன் தனது பொருளாதார வர்த்தக,இராணுவத் தொடர்பு [illegible]ளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கவே அங்கு கிளர்ச்சிகள் வெடித்தன.

விக்டர் ஜனுக்கோவிச் தலைமறைவாகியது டன் ரஷ்யாவில் தஞ்சம் புகுந்தார்.உக்ரேனில் இடைக்கால அரசு நிறுவப்பட்டது. இந்த நிலை யில் தான் உக்ரேனின் சுயாட்சிப் பிரதேச மான கிரிமியாவில் பிரச்சினை எழுந்தது. கிரிமியாவின் ரஷ்யா சார்பு ஆயுததாரிகள் ஒரு துளி இரத்தம் சவடச் சிந்தாமல் கிரிமியாவின் விமான நிலையம் உட்பட பல கேந்திர நிலையங்களைக் கைப்பற்றி விட்டனர். ஏற்கனவே அங்கு ஒரு பெரும் ரஷ்ய கடற்படைத்தளம் உண்டு. அது மட்டுமன்றி கிரி மியாவில் உள்ள கருங்கடலைத் கட்டுப்படுத்தக் கூடிய கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த துறைமுகம் ரஷ்யாவின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது.

உக்ரேனில் இன்றைய இடைக்கால அரசு ரஷ்யாவினதும், ரஷ்யா ஆதரவுப் படைகளினதும் நடவடிக்கைகளை ஒரு பெரும் ஆக்கிரமிப் பாகவே வர்ணித்து வருகிறது.

கிரிமியாவில் வாழும் பெரும்பான்மையினர் ரஷ்ய வம்சா வழியினர் என்பதுடன் அவர்கள் ரஷ்ய மொழியையே தமது தாய் மொழியாகக் கொண்டுள்ளனர்.

இந்த மாதம் 16ஆம் திகதி கிரிமியா உக்ரேனு டன் தொடர்ந்து இருப்பதா அல்லது ரஷ்யாவுடன் இணைவதா என்பது தொடர்பாக ஒரு பொதுசன வாக்கெடுப்பு இடம்பெறும் என அறிவிக்கப்பட்டது. இதற்கு அமெரிக்கா, ஜேர்மனி உட்பட மேற்கு நாடுகள் கடும் கண்டனத்தை வெளியிட்டுள் ளன. ஆனால் ரஷ்யாவோ அப்படியான ஒரு வாக்கெடுப்பு கிரிமிய மக்களின் சுயநிர்ணய உரிமை எனக் கூறி அதற்கு ஆதரவு தெரிவித் திருக்கிறது.

இப்படியாக வலுவடைந்து வரும் முரண்பாடு காரணமாக உக்ரேன் எல்லையில் நேட்டோ படைகளும் கிரிமிய எல்லையில் ரஷ்ய படை களும் குவிக்கப்பட்டுள்ளன.

சர்வதேச அரசியலில் உக்ரேன் பிரதேசம் கொதி நிலையில் இருந்து வருகிறது. ஒரு போர் மூளக் கூடிய சூழல் இல்லாத போதிலும் போருக் கான தயாரிப்புகள் இடம் பெற்று வருகின்றன. எனினும் மேற்குலகமும் ரஷ்யாவும் தத்தமது தரப்புக்களை நியாயப்படுத்துவதிலேயே கூடிய கவனம் செலுத்தி வருகின்றன.

இதில் ரஷ்யாவால் முன் வைக்கப்படும் ஒரு காரணத்தை எவரும் நினைத்து விட முடியாது. அதாவது கிரிமிய மக்கள் தொடர்ந்து உக்ரேனு டன் இருப்பதா அல்லது ரஷ்யாவுடன் இணை வதா எனத் தீர்மானிக்கும் சுய நிர்ணய உரிமை உடையவர்கள் என்பது தான் அது. அது நிச்சயமாக நியாயமானது தான்.

எந்த ஒரு இனத்துக்கும் தமது தலை விதியைத் தாமே தீர்மானிக்கும் சுயநிர்ணய உரிமை உண்டு என்பது சர்வதேச அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு கோட்பாடாகும்.

கடந்த 30 வருடங்களாகத் தமிழ் மக்கள் தமக்கென ஒரு தனிநாடு அமைக்கும் சுய நிர்ணய உரிமையைக் கோரிஆயுதப் போராட் டத்தை நடத்தினர். அ ந்தப்போராட்டத்தை முறியடிக்க ரஷ்யா ஆயுத உதவி , பொருளாதார உதவி எனப் பலவிதமான உதவிகளை இலங் கைக்கு வழங்கியது. அது மட்டுமன்றி அந்த சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தைத் தோற்கடிக்க இலங்கை அரசு கைக்கொண்ட போர்க்குற்றங்கள், மனிதகுல விரோத நடவடிக் கைகள் என்பன தொடர்பாக ஐ.நா மனித உரிமைப் பேரவையில் கண்டனங்கள் எழும் போதெல்லாம் ரஷ்யா இலங்கை அரசைக் காப்பாற்ற தீவிர முயற்சி எடுத்து வந்தது.

அதாவது ஒரே நேரத்தில் ரஷ்யா கிரிமிய மக்களின் சுயநிர்ணய உரிமைக்கு ஆதரவாகவும் , இன்னொரு புறத்தில் இலங்கைத் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கு எதிராகவும் செயற்படுகிறது என்றால் அதன் அர்த்தம் தான் என்ன?

இதில் எவருமே குழப்படைமடைய வேண் டியதில்லை. ஏனெனில் வல்லரசு நாடுகள் என்றுமே சுயநிர்ணய உரிமை , விடுதலைப் போராட்டம், பயங்கரவாதம் போன்ற வார்த்தை களை தமது தேசிய நலன்களுக்கும் , பூகோள மேலாதிக்க நலன்களுக்கும் பாவிக்கின்றனவே யொழிய அவற்றின் உண்மையான அர்த்தம் பற்றிப் பொருட்படுத்துவதில்லை.

எனவே எமது சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தை ஆயுதப் போராட்ட வடிவிலோ அல்லது ஜனநாயக வழி முறையிலோ நாம் தான் நடத்த வேண்டும். அந்நியர்கள் எமது நிலைமைகளை தமது பூகோள, பிராந்திய , தேசிய நலன்களுக்கு ஏற்பவே கையாள்வார்கள். மனித நீதியை நிலை நிறுத்த எவருமே பாடுபடுவதில்லைஎன்பது தான் அடிப்படையான உண்மை.

நாம் இவற்றைத் தெளிவாகப் புரிந்து கொண்டு வலுவான முறையிலும் தந்தி ரோபாயமான அடிப்படையிலும் எமது போராட் டத்தை முன்னெடுப்பதன் மூலமே எமது சுயநிர்ணய உரிமையை நிலை நிறுத்த முடியும்.





# சுமைதாங்கி மனிதன்


தன்னந்தனியாக வெகு சாதாரணமாக மோட்டார் சைக்கிளை தலையில் சுமந்தபடி நிற்கும் இந்த மனிதர் ஏதேனும் கின்னஸ் சாதனைக்காக இப்படிச் செய்கிறார் என்று நினைக்கின்றீர்களா? நிச்சயமாக இல்லை. இந்தியாவைச் சேர்ந்த இவர் சாதாரண ஒரு மூடை தூக்கி . தினமும் தன் குடும்பத்தின் பசி தீர்ப்பதற்காக மூடைகளையும் கனமான பொருள்களையும் தூக்குகின்றார்.

இவரை ரயில்நிலையம் மற்றும் பஸ் நிலையங்களில் காண முடியும். ஒரு சுமையை தூக்கி பஸ்ஸின் மேல் தட்டில் வைக்கின்றபோது இவருக்கு 2 அமெரிக்க டொலர் பெறுமதியான பணம் கிடைக்கின்றது. இந்தப்படத்தில் 150 கிலோ எடைக்கு குறைவில்லாத மோட்டார் சைக்கிளை தூக்கி பஸ்ஸின் மேல் தட்டில் வைக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புன்னகைத்த சூரியன்



எஸ். ஜெயலா
நெடுந்தீவு.

சிறுகதை

**தனக்காக இவ்வுலகில் ஒருவருமில்லை. தன்னை நேசிப்பவர் என்று ஒருவருமில்லை என்ற வேதனையில் தெய்வம் மட்டும் துணை என்ற நினைவுகளோடு தனது பெற்றோரை மனதில் நினைத்து விரக்தியோடு வாழ்ந்து கொண்டிருக் கையில் அப்பொழுது தான் ஒரு நாள் தனது சித்தி மகளாக தனது தங்கை யுடன் கடற்கரைக்குச் செல்கின்றாள். அங்கே அப்போது தான் சுஜி "சொறி" என்று சொல்லும் பொழுது தான் முதன் முதலாக கார்த்திக்கைப் பார்த்தாள்.**

அழகான இருள் சூழும் மாலை நேரத்தில் அவள் மட்டும் தனியாக தனது வீட்டின் மாமரத்தின் கீழ் ஏதோ ஒரு சிந்தனையில் ஆழ்ந்தவளாக மறைந்து கொண்டிருக்கும் கதிரவனை கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள். அலைகள் கரையை தேடி ஓடி வருவது போல அவளது கண்களிலிருந்து கண்ணீர்த்துளிகள் கன்னத்தை நோக்கி வந்து கொண்டிருந்தன. அப்போது திடிரென்று "ஏய் சுஜி அங்க என்ன செய்துகொண்டிருக்கிறாய்? 6 மணி ஆகுது. சாமி அறைக்குப் போய் விளக்கேற்றி இரவு சமையல் வேலையைப் பார்" என்ற சித்தியின் குரல் கேட்டு அதிர்ந்தவளாக குரல் வந்த திசையை நோக்கித் திரும்பிப் பார்த்தாள். அங்கே சித்தி நிற்பதைக் கண்டு உடனே எழுந்து "இதோ வந்துட்டன் சித்தி" என்று கூறி வீட்டினுள்ளே செல்லும் போது "என்னடி பகல் கனவோ" என்று சித்தி அதட்ட "இல்ல சித்தி" என்று கூறி வீட்டினுள்ளே சென்று தனக்குரிய வேலைகளை செய்ய முற்பட்டாள். சாமி அறையில் தீபம் ஏற்றும் பொழுது கண்கள் இரண்டும் கண்ணீர்த்துளிகளால் நிரம்பின. பின் இரவு நேர அனைத்து வேலைகளையும் செய்து முடித்த பின் படுக்கைக்குச் சென்றாள். அவள் உறங்க வேண்டும் என்று நினைக்கும் பொழுதும் அவளுக்கு உறக்கம் வர மறுத்தது. அப்போது ஜன்னலின் ஊடாகத் தெரியும் நிலவைப் பார்த்தாள். அந்த நிலவின் ஊடாக கார்த்திக்கின் அழகிய முகம் அவள் கண்முன் ஊஞ்சலாடியது. அந்த வேளையில் அவளது சிந்தனை நினைவுகளை மீட்டிப் பார்க்கிறாள்.

சிறுவயதில் சுஜி தனது தாய் தந்தையுடன் செல்லப் பிள்ளையாக வீட்டின் மகாராணியாக வாழ்ந்து வந்தாள். சிறுவயதில் அன்னை தனக்கு தலைவாரி, பொட்டு வைத்து, சீருடைஅணிவித்து பாடசாலைக்கு அனுப்பி வைப்பதையும் , பிடித்தஉணவு வகைகளை ஒவ்வொரு நாளும் தயார் செய்து தருவதையும் தனக்குப் பிடித்தமான அனைத்தை யும் கேட்டவுடன் வாங்கித் தரும் தனது தந்தையையும் நினைத்துப் பார்க்கின்றாள். இவ்வாறு வளர்ந்த சுஜி நன்றாகப் படித்து சாதாரண தரம் பயிலும் பொழுது ஒரு விபத்தில் தாய் தந்தை இருவரையும் இழந்து விடுகின்றாள். பெற்றோரை இழந்தவள் தனிமைப்படுத்தப்பட்டு என்ன செய்வது என்று தெரியாத சூழ்நிலையில் சிறகொடிந்த பறவையாக தவித்துக் கொண்டிருக்கையில் அவளது சித்தப்பா அவளை தன்னுடன் தனது ஊருக்கு வருமாறு தனது வீட்டிற்கு அழைத்து வருகி றார். பெற்றோரை இழந்து விட்டதாக நினைத்த சுஜி சித்தப்பா வந்தவுடன் தனக்கு உறவுகள் உள்ளன என்ற சிறிய சந்தோசத்துடன் வருகின்றாள். பிறகுதான் அவள் அடைந்த சின்ன சந்தோசமும் தவிடு பொடியானதை உணர்ந்தான் . பேனா பிடித்த தனது மென்மையான விரல்களால் அகப்பையும் பிடிக்கக் கற்றுக்கொண்டாள். அவளது உள்ளங்கை நெருப்புப் புண்களால் வேதனையில் இருந்தது. இவ்வாறு தான் உயர்தரம் படித்தாள். பல்கலைக்கழகத்திற்கு இடம் கிடைக்கவில்லை என்றாலும் உயர் தரத்தில் சிறந்த முறையில் படித்து முடித்த அவள் அங்கேயே அனைத்து வேலைகளையும் செய்து வந்தாள். இரண்டு, மூன்று வருடங்கள் இவ்வாறு சென்றன.

"தனக்காக இவ்வுலகில் ஒருவருமில்லை. தன்னை நேசிப்பவர் என்று ஒருவருமில்லை" என்ற வேதனையில் தெய்வம் மட்டும் துணை என்ற நினைவுகளோடு தனது பெற்றோரை மனதில் நினைத்து விரக்தியோடு வாழ்ந்து கொண்டிருக்கையில் தான் ஒரு நாள் தனது சித்தி மகளான தனது தங்கையுடன் கடற்கரைக்குச் சென்றாள். அங்கே அப்போது தான் சுஜி "சொறி" என்று சொல்லும் பொழுது தான் முதன் முதலாக கார்த்திக்கைப் பார்த்தாள். "பஸ் ஓ.கே" என்று கார்த்திக் கூறும் பொழுது அவனது குரலைக்கேட்டாள். அவளது இரு விழிகளும் அவனை சந்தித்த வேளையில் அவளது மனதை சந்தோச அலைகள் வந்து மோதிச் சென்றன. ஆனால் அவளால் அது ஏன் என்று அறிந்து கொள்ள முடியவில்லை. பிறகு இரண்டா வது முறை கார்த்திக்கை கோவிலில் கண்டாள். அவர்கள் இருவரது விழிகளும் மௌனமாக பேசிக் கொண்டன. அப்பொழுது கார்த்திக் அவள் அருகில் வந்து "என்னோட பேர் கார்த்திக். நான் நிருபராக பத்திரிகை துறையில் வேலை செய்யிறன். உங்க பேர் சுஜி என்று அறி ந்து கொண்டேன். உங்களப் பார்த்த துமே எனக்குப் றொம்பப் பிடிச்சிட்டுது. நான் இதே ஊர் தான். வேலை செய்வது வேறு இடத்தில். லீவிற்கு மட்டும் தான் வீட்டிற்கு வருவேன். இப்ப வந்த போது தான் உங்களப் பார்த்தனான். உங்கள எனக்கு றொம்பப் பிடிச்சிருக்கு. என் வாழ்க்கைத் துணைவி யாக வருவீங்களா?" என்று கேட்க அவளது கண்களிலிருந்து பல கண்ணீர்த் துளிகள். அவையே அவனுக்கு சம்மதம் சொன்னது. இருவரின் காதலும் பல சந்திப்புகளுக்குள் தொடர்ந்து சென்றது. சுஜியின் மனதில் ஒரு திருப்தி. தனக் கென்று ஒரு சொந்தம் வந்துவிட்டதென்று. இது சுஜியின் சித்தியின் காதினை எட்டிவிடவே வீட்டில் முதலே துன்பப்பட்ட அவள் இன்னும் துன்பப்படுத்தப்பட்டாள். ஆனால் கார்த்திக் இருக்கிறார் என்ற நம்பிக்கையில் வாழ்ந்து வந்தாள். இவ்வாறு அமைதியாக இருந்த குறுகிய காலத்திலும் மீண்டும் புயல் வீசு வது போன்ற ஒரு நிகழ்வு நிகழ்ந்தது. கார்த்திக்கை சந்திக்க சென்ற இடத்திலே அவனது வார்த்தைகள் யாவும் வித்தியாசமாக இருந்தது. அவன் அவளைப் பார்த்து "சுஜி இனி இந்த உறவு சரிவராது. உனக்கும் எனக்கும் பொருத்தமில்லை. நீ என்ன மறந்துவிடு" என்று கூற "ஏன் அப்படி சொல்றீங்க என்ன நடந்தது, என் மீது தவறு ஏதும் இருந்தால் சொல்லுங்க" என்று கேட்க "அப்படி எதுவும் இல்ல நான் உன்னோட பொழுது போக்கிற்குத்தான் பழகினான். எனக்கு வீட்டில் பெம்பிளை பார்த்துட்டாங்க.... என்னை மறந்துட்டு உனக்கு ஒரு நல்ல வாழ்க்கையை தேடிக்கொள்" என்று சொல்லி விட்டு அவளது பதிலை எதிர்பார்க்காமல் சென்று விட்டான். அவன் போன வழியினையே பார்த்து தனது உலகமே இருண்டு போய் விட்டதாக அப்படியே அமர்ந்திருந்தாள். செய்வது ஒன் றும் தெரியாமல் வீட்டிற்கு சென்றாள்.

அதன் பிறகு பல முறை கார்த்திக்கை காண வழி தேடினாள். ஆனால் அவளுக்கு கார்த்திக் தென்படவே இல்லை. கடவுளையே நாடினாள். அப்பொழுது தான் ஒரு நாள் கோயிலுக்கு சென்ற போது கார்த்திக்கின் தாயை கண்டாள். கார்த்திக்கின் தாயிடம் "அம்மா கார்த்திக் எப்படி இருக்கார்?" என்று கேட்டபோது அவர் சொன்ன பதிலைக் கேட்டு அதிர்ந்து போனாள். இடி, மின்னல், காற்று எல் லாம் தனக்கு மேல் வந்து மோதுவதாக உணர்ந்து கொண்டாள். "என்னம்மா சொல்றீங்க? கார்த்திக்குக்கு 'பிளட்கான்ஸரா?' என்று கேட்க "ஆமாம்மா என்னோடை மகன் றொம்ப கஷ்டப்படுகிறான்..., அவன் யாருக்கும் எதுவும் துரோகம் செய்தது மில்லை. மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்றே பத்திரிகைத்துறையில் வேலை பார்த்தான் என்ர மகனுக்கு ஏன் இப்படி கஷ்டமோ" என்று தாய் புலம்ப அவள்அதிர்ந்தவளாக கோவில் படியில் அப்ப டியே அமர்ந்தாள்.

கார்த்திக் ஏன் தன்னை விட்டு விலகிச் சென்றான் என்ற கேள்விக்கான விடையை இப்போது தான் சுஜி அறிந்து கொண்டாள். சுஜிக்கு கார்த்திக்கை பார்க்க வேண்டும் என்று தோன்றி[illegible]. கார்த்திக்கின் தாயிடம் "அன்ரி நான் கார்த்திக்கோட ப்ரண்ட் .அவர் இப்ப எங்கே இருக் கார். என்னை கார்த்திக்கிடம் கூட்டிட்டு போவீங்களா?" என்று கேட்டு தாயுடன் செல்கின்றாள். தனது தாயுடன் சுஜி வருவதை கண்ட கார்த்திக் அதிர்ந்துபோனான். அனைத்தையும் சுஜி தெரிந்து கொண்டாள் என்பதை அறிந்த அவன் தன்னை நாடிவந்த சுஜியை பார்த்து " சுஜி நீ சந்தோசமா இருக்கனும் அது தான் என்னோட ஆசை.... நீ முதல்லே றொம்ப கஷ்டப் பட்டுட்டாய் இனியும் கஷ்டப்பட வேண்டாம். அதனால் தான் அப்படி ஒரு பொய் சொன்னன். இப்ப உனக்கு எல்லாம் தெரியும் தானே என்ன விட்டு வில கிடு. நான் எதுவும் நினைக்கமாட்டன்" என்று சொல்ல " ஏன் கார்த்திக் இப்படி சொல்றீங்க. உங்களோட இருந்தால் தான் நாம் றொம்ப சந்தேசமா இருப் பேன். நீங்க தான் எனக்கு வேணும். நம்முடைய அன்பு தூய்மை யானது கார்த்திக். நமக்கு தெய்வம் துணையிருக்கும் என்று அவன் தோள் சாய்ந்து எனக்கு நீங்க மட்டும் போதுமென்று விம்மி விம்மிஅழுதாள். கார்த்திக்கிற்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. அவளை தன்னி டமிருந்து விலத்தியவனாக "சுஜி இப்ப வீட்டிற்கு போ. சித்தி தேடப் போறா. இப்பவும் எப்பவும் நான் இறந்தாலும் என் உயிர் நீ தான். யோசிச்சு முடிவு எடு" என்று சொல்லி அவள் அவனின் கண்களுக்கு மட்டும் விடை கொடுத்து எதுவும் பேசாமல் வீட்டிற்கு வந்தாள். இவ்வாறு படுக்கையில் உறக்கமின்றி நினைவுகளை மீட்டிப்பார்த்த அவள் யார் என்ன சொன்னாலும் செய்தாலும் பரவாயில்லை. இருந்தாலும் இறந்தாலும் என்னுடைய வாழ்வு கார்த்திக்குடன் தான் என்று நினைத்தவாறு ஜன்னலை பார்க்கின்றாள். எங்கே யோ சேவல் கூவுகிறது. அடிவானத்திலிருந்து சூரியன் விடியலுக்காய் ஒளி கொடுக்கப் புறப்படுகின்றது. இன்றே கார்த்திக்கிடம் சென்று தனது இறுதியான முடிவைச் சொல்லி அவனுடனே வாழ வேண்டும் . எங்களது தூய அன்பிற்கு தெய்வம் துணையிருக்கும் என்ற நம்பிக்கையில் எனக்கும் இன்று விடிய[illegible] வருகிறது என்று எழுந்து தனது வாயிற் கதவை திறந்தாள். அப்பொழுது சூரியன் சிரித்த முகத்துடன் அவளைப் பார்த்து புன்னகைக்கிறான். அதனுடன் சேர்ந்து கார்த்திக்கின் அழகிய அன்பு முகமும் அவளைப் பார்த்து புன்னகைப்பது போன்ற எண்ணம் அவளுக்கு தோன்றியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவிஸின் ஸ்வாட்ச் நிறுவன கடிகாரம் போலவே போலி கடிகாரத்தை அமெரிக்க நிறுவனம் ஒன்று தயாரித்துள்ளது.


சுவிஸின் பிரபல கடிகார நிறுவனமான ஸ்வாட்ச் நிறுவனம் பிளாஸ்டிக்கில் வரிக் குதிரை வடிவமான கடிகாரமும் மற்றும் பல நிற வடிவங்களையுடைய கடிகாரங் களையும் தயாரித்து விற்பனை செய்து வருகின்றது.

இதேபோன்ற பிளாஸ்டிக் கடிகாரங்களை அமெரிக்காவில் இரண்டாம் இடம் வகிக் கும் பிரமாண்ட நிறுவனமான டாக்கெட் நிறுவனம் தரக்குறைவான பிளாஸ்டிக்கை கொண்டு தயாரித்து விற்பனை செய்கின் றது.

இதையறிந்த ஸ்வாட்ச் தங்களின் நிறு வனத்தின் மதிப்பீடு குறைந்துவிடும் என உணர்ந்ததால் டார்கெட் நிறுவனம் மீது வழக்கு தொடர்ந்தது.

இதனையடுத்து டார்கெட் நிறுவனத்தின் பேச்சாளரான ஈவான் லாப்சிகா மற்ற நிறுவனத்தின் அறிவு சார்ந்த சொத்து ரிமைகளை தாங்கள் மதிப்பதாகக் கூறி மறைமுகமாக மன்னிப்பு கேட்டுள்ளார்.

## போலிக்கு மன்னிப்பு



## ஒபாமாவின் உடை தெரிவு



தேர்தல்களுக்காக நிதி திரட்டும் கூட்டங்களில் பங்கேற்பதற்காக அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, நியூயோர்க் நகருக்கு சென்றார். கடுமையான பணி நெருக்கடிகளுக்கு மத்தியிலும் அங்குள்ள ஒரு கடைக்கு சென்று அவர் தனது மகள்கள் சஷா, மலியா, மனைவி மிச்செல்லிக்கு உடைகளை தேர்வு செய்து வாங்கினார்.

மகள்களுக்கு மேலாடை வாங்குகிறபோது, 'வி' வடிவ கழுத்து அமைப்பு கொண்ட உடை வாங்கினால் அது நழுவும் என கவலைப்பட்டார். அதற்காக வழக்கமான வடிவத்திலான கழுத்து அமைப்பு கொண்ட உடைகளையே வாங்கினார்.

இதேபோன்று மனைவிக்கு தான் உடைகள் தேர்வு செய்து வாங்குவது கடினம் என்று கூறிய ஒபாமா, இருப்பினும் அவருக்கு காலுறை கள் மட்டுமே வாங்கியுள்ளார்.

அவர் மனைவி, மகள்களுக்காக உடைகள் வாங்கியதை பத்திரிகையாளர்கள், புகைப் படக்காரர்கள், உளவுப் படையினர் வேடிக்கை பார்த்தனர். அப்போது ஒபாமா, எனது உடை தேர்வு பெண்களுக்கு பிடிக்கும் என்று சிரித்துக் கொண்டே கூறியுள்ளார்.

## செல்ல நாயை மணந்த பெண்

தான் செல்லமாக வளர்த்து வந்த நாயை, பெண் ஒருவர் திருமணம் செய்துகொண்டுள்ளார். இந்தச் சம்பவம் பிரிட்டினில் இடம்பெற்றுள்ளது.

இங்கிலாந்தை சேர்ந்த அமண்டா ரோட்ஜர்ஸ் என்ற 47 வயது பெண்தான் செல்லப்பிராணியாய் வளர்க்கும் ஷீபா என்ற நாயை மணந்துள்ளார். 20 ஆண்டுகளுக்கு முன் திருமணமான இவர், பல பிரச்சினைகளால் சில மாதங்களிலேயே தனது கணவரிடமிருந்து விவாகரத்து பெற்றார்.

இந்தநிலையில் தனிமையில் வாழ்ந்து வந்த அமாண்டா, தற்போது தான் வளர்க்கும் நாய் ஷீபா வையே திருமணம் செய்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், என் காதலை ஷீபாவிடம் முட்டிப்போட்டு கூறியபோது அது வாலாட்டி சம்மதம் தெரிவித்தது என்றும், துயரத்தில் இருக்கையில் சிரிக்க வைத்து ஆறுதல் கூறி ஒரு கணவருக்கு இருக்க வேண்டிய குணத்தை கொண்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.



## கூந்தலில் இருந்து...

னாவைச் சேர்ந்த, ஓய்வுபெற்ற ஷியாங் ஓர் ஓய்வுபெற்ற ஆசிரியை. இவருக்கு, அடர்த்தியான, கூந்தல் உண்டு. சில ஆண்டுகளுக்கு முன், அவரின் கூந்தல் உதிரத் தொடங்கியது. இதற்காக கவலைப்படாமல், உதிர்ந்த முடிகளை எல்லாம், வீணாக்காமல், சேர்த்து வைத்தார். சமீபத்தில், அந்த முடிகளால், அழகிய மேலாடை யையும், தொப்பியையும் தயாரித்து, அசத்தியுள்ளார்.


'என் அடர்த்தியான கூந்தல் மீது, பலருக்கும் பொறாமை. என் கூந்தல் உதிர்ந்தபோது, இந்த வயிற்றெரிச்சல் கோஷ்டி, சந்தோஷப்பட்டது. அவர்களுக்குப் பதிலடி கொடுப்பதற் காகவே, உதிர்ந்த முடிகளை எல்லாம் சேகரித்து வைத்து, இந்த புதுமையான உடையை வடிவமைத்தேன். இதற்காக, 11 ஆண்டுகளாக, முடிகளை பத்திரமாக பாதுகாத்துவந்தேன். மேலாடை தயாரிப்பதற்கு, 89, 112 முடிகளும், தொப்பி தயாரிப்பதற்கு, 29,496 முடிகளும் தேவைப்பட்டன...' என்கிறார், ஷியாங்.



சீனாவில் பாரஊர்தியில் எடுத்துச் செல்லப்பட்ட ஹென்ரெய்னர் நழுவி அருகில் சென்று கொண்டிருந்த கார் மீது விழுந்தது. குவாங்ஷோ பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றது. இந்தவிபத்தில் காரில் பயணம் செய்த இருவர் சிறிய காயங்களுடன் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர்.

இந்த விபத்து குறித்து தகவலறிந்து வந்த மீட்பு படையினர் பாரம்தூக்கிமூலம் ஹென்ரெய்னரை அப்புறப்படுத்தி காருக்குள் சிக்கியிருந்த இரு பயணிகளையும் மீட்டனர்.

## ஹென்ரெயினரை காவும் கார்?



## சாள்ஸ்'க்கு வந்த ஆசை

அண்மையில் பிரிட்டன் இளவரசர் சார்ள்ஸ், சவுதி அரேபியாவுக்கு சென்றிருந்தார். அவரை வரவேற்கும் வகையில், அந்தநாட்டின், பாரம்பரிய நடனமான வாள் ஏந்தி நடனமாடும் நிகழ்ச்சி நடைபெற்றது. கூர்மையான வாளை, கையில் ஏந்தி, கலைஞர்கள் நடனமாடினர். இதற்கு, கடுமையான பயிற்சி அவசியம். பயிற்சி இல்லாமல், நடன மாடினால், உயிருக்கே ஆபத்து ஏற்படும். இந்த நிகழ்ச்சியைப் பார்த்து கொண்டிருந்த சாள்ஸ்'க்கும், வாள் ஏந்தி நடனமாடும் ஆசை வந்து விட்டது. உடனடியாகக் களத்தில் இறங்கிவிட்டார். பலரும் எதிர்ப்பு தெரிவித்தும், அதை பொருட்படுத்தாமல், சிறிதுநேரம், வாளை ஏந்தி நடனமாடி விட்டுத்தான், இருக்கைக்கு திரும்பினார். இதன்பின்தான், சவுதி அரேபிய அதிகாரிகளுக்கு மூச்சே வந்ததாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 6, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லான்ட் மார்க் எண்டர் பிறைஸ் ஸ்தாபனத்தால், 2014 மார்ச் 19 ஆம் திகதி வெளியிடப்பட்டது.